
அமுதசுரபி

பிப்ரவரி '98
விலை ரூ. 10

ஜனவரி
மே, ஜூன்
மாத இதழ் இல்லை



பொன்விழா ஆண்டு

அமுதசுரபி
பிப்ரவரி 98 | எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி | மலர் - 50
ஈஸ்வர - மாசி | என்றென்றும் வாழியவே - பாரதியார் | இதழ் - 10

இந்த இதழில்...





ஆசிரியர் : **கலைமாமணி விக்கிரமன்** பதிப்பாளர் : **ஏ.வி.எஸ். ராஜா**

காந்திஜி - கஸ்தூரிபா மேலட்டை வண்ண ஓவிய அமைப்பு : ஜி.கே. மூர்த்தி (கட்டுரை - பக்கம் 71)

50 ஆண்டுகள். அரை நூற்றாண்டு. இப்போது நினைத்தாலும் மலைப்பாக இருக்கிறது. மலை மீது மிக் இடர்ப்பட்டு ஏறிய பிறகு, ஏறிவந்த பாதையை, வழியைத் திரும்பிப் பார்த்தவுடன் சிலிர்ப்பொன்று ஏற்படுமே அதுபோல 'அமுதசுரபி' - உங்களால் மதிக்கப்படும் இலக்கிய மாத இதழ் - 1948இல் தொடங்கப்பட்டது. 1997லிருந்து 1998ஆம் ஆண்டு ஏப்ரல் முடிய 'அமுதசுரபி' பொன்விழா ஆண்டு என்று கூறி மகிழ்ச்சியடைகிறோம்.

என்னைப் பாராட்டுபவர்கள் 'அமுதசுரபி' பத்திரிகையில் ஐம்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து பணியாற்றுவதாகக் கூறிப் பாராட்டி எனக்குப்பெருமைசேர்க்கிறார்கள். நான் அந்தப் பாராட்டுகளைப் புன்முறுவலுடன் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் நடந்து வந்த பாதை, கடந்து வந்த இடர்ப்பாடுகள்,மகிழ்ச்சி தரத்தக்க அறிஞர்கள் தொடர்பு, கற்றறிந்த பேரறிஞர்கள் - கலைஞர்களுடன் தொடர்பு இவற்றை நினைக்கும் போது மனநிறைவு ஏற்படுகிறது.

1949 பிப்ரவரி 4 ஆம் தேதியைப் பற்றிச் சொல்லவே இந்தச் சிறு குறிப்பை வெளியிட விரும்பினேன். 'அமுதசுரபி' அலுவலகத்திற்குள் நுழைந்து வித்வான் வே. லட்சுமணன் ஆசியுடன் நாற்காலியில் அமர்ந்த அந்த நாள்.

'அமுதசுரபி'யைத் தொடங்கிய திரு. டி.கே. சாமியை இந்தச் சமயத்தில் நினைவு கூர வேண்டும். அவர் வித்திட்டார். மூலதனமாகப் பணம் போட்டார். இலக்கிய ஆர்வமுடையவர். புதிது புதிதாக ஏதாவது செய்ய வேண்டும் என்ற துடிப்புடையவர். சொந்த அச்சகம் வைத்திருந்தார். அவருக்கு வயது முப்பத்தைந்து இருக்கலாம் அவரைச் சந்தித்தபோது எனக்கு வயது 21 அல்லது 22 வயதிருக்கலாம். ஒரு செய்தியைச் சொல்லும் போது மற்ற பூர்வ கதைகளையும் சொல்ல வேண்டும். கிளைக்கதைகளால், செய்திகளால் மூலச் செய்தியைக் கூறத் தாமதமாகலாம். அவற்றைப் பிறகு கூறி பிப்ரவரி 4ஆம் தேதியைப் பற்றி இப்போது சொல்கிறேன்.

சுங்குராம செட்டி தெரு, சென்னை பிராட்வே பகுதியில் தம்பு செட்டி தெரு, அரண்மனைக்காரன் தெரு போன்ற தெரு. ஆனால் சிறு சந்து போன்ற தெரு. அங்கே ஏழாம் எண்ணுள்ள இடத்தில் ராஜன் எலக்ட்ரிக் பிரஸ் என்றதொரு பெரிய அச்சகம். அந்த அச்சக உரிமையாளர்கள் டி.கே. சாமி சகோதரர்கள்.

அங்குதான் 'அமுதசுரபி' தொடங்கப்பட்டது.

பிப்ரவரி 4 - 1949

திரு. டி.கே. சாமி என்னை அன்புடன் வரவேற்று, மாடியில் பத்துக்கு, பன்னிரெண்டு நீளமுள்ள 'அமுதசுரபி' நிர்வாக அலுவல்கள் நடக்கும் அறைக்குள் அழைத்துச் சென்றார். ஒரு வயதானவர், ஒரு நடுத்தர வயதுள்ளவர் இருவர் அங்கே இருந்தனர்.

அங்குதான் ஆசிரியர் வித்வான் வே. லட்சுமணனுக்கும் இருக்கை.

வித்வான் வே. லட்சுமணன் பதினொரு மணிக்கு வந்தார். வீட்டிலேயே புரூப் பார்த்து எடுத்து வருவார். சிவந்த மேனி, வெற்றிலைப் பாக்கு போடுவதால் மேலும் சிவந்த உதடுகள். மலர்ந்த முகம்.

“வாங்கோ, வாங்கோ, வேம்பு ஸார். இன்றைக்கு நல்ல நாள்தான்.



எப்படியோ வந்து பதவியை ஏற்று விட்டீர்களே!'' என்று வாய் நிறையப் பேச்சு. ('வேம்பு' என்பதுதான் எனக்குச் சூட்டப்பட்ட பெயர்) முகம் மலர அவர் என்னைத் தட்டிக் கொடுத்து உட்காரச் சொன்னார்.

டி.கே. சாமியும் அவரும் சிறிது நேரம் தனியே பேசினார்கள். பிறகு வித்வான் அறைக்குள் வந்து சொன்னார் : “வேம்பு ஸார், நீங்கள் இன்று இங்கு வந்து சேர்ந்தது உங்கள் வாழ்க்கையிலும் ஒரு திருப்புமுனை. 'அமுதசுரபி' அலுவலகத்திற்கும் ஒரு திருப்புமுனை'' என்றார்.

அவர் ஜோதிடர். பிறவியிலேயே ஜோதிடம் கூறியதால் 'பால ஜோசியர்' என்று அழைக்கப்பட்டவர். அவர் சொன்னது எப்படியெல்லாம் பலித்தது தெரியுமா? 1949 பிப்ரவரி 4ஆம் தேதியை நான் என்றுமே மறப்பதில்லை.

- விக்கிரமன்

('பொன்விழா ஆண்டில் அமுதசுரபியும் நானும்' - என்ற தலைப்பில் நான் எழுதிவரும் நூலிலிருந்து...)



போட்டோ : யோகா

சில சங்கீத

நினைவுகள்!

என். பஞ்சாபகேசன்
எம்.ஏ.பி.எல்.,

என் தொழில் முறையில் அநேக பிரபல கர்நாடக சங்கீத வித்வான்களுடன் எனக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. இன்று பீஷ்ம பிதாமகராக விளங்கும் செம்மங்குடி சீனுவாசய்யர் உள்பட அரியக்குடி ராமானுஜ அய்யங்கார் மஹாராஜபுரம் விஸ்வநாதய்யர் மதுரை மணி அய்யர், ஆலத்தூர் சகோதரர்கள், பிடில் மாயூரம் கோவிந்தராஜ பிள்ளை போன்ற வர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் எல்லாரையும் விட மிகவும் நெருக்கமான பழக்கம் முசிறி சுப்ரமணிய அய்யரிடம் தான் அவருடைய சிஷ்யர் தான் டி.கே. கோவிந்த ராவ்.

கும்பகோணம் பிடில் இராஜ மாணிக்கம் பிள்ளை தன்வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கு அந்தக் கால வழக்கப்படி பொற்றாமரைக் குள வடகரையிலுள்ள ஹேமரிஷி மண்டபத்தில் சொற்ப விலைக்குக் கிடைக்கும் பிரசாதங்களான புளியோதரை, பொங்கல், தயிர் சாதம் எல்லாம் பட்டைபோட்டு கால் அல்லது அரைக்கிலோ எடையில் சேனைக்கிழங்கு மாதிரி ஓரணா அல்லது இரண்டணாவிற்கு விற்கப்படும் பிரசாதங்களை வாங்கித் தருவது வழக்கம். ஓரணா என்பது தற்கால ஆறு பைசாவுக்குச் சமம். அந்தக் காலத்தில் கும்ப கோணத்தில் ஓரணாவுக்கு நல்ல நெய்யில் செய்த கோதுமை அல்வா கிடைக்கும். மூன்று அல்லது நான்கு ரூபாய்க்குக் கூடை நிறையப் பிரசாதங்கள் கிடைக்கும். அதைச் சாமானிய மனிதன் தூக்க முடியாது

ஆனால் தூக்குவதற்குக் கூலி ஓரணா கொடுத்தால் போதும். அந்த ஓரணா கொடுக்க மனம் வராது.

ஒரு நாள் பிடில் ராஜமாணிக்கம் பிள்ளை எம்.எம். தண்டபாணி தேசிகரைக் கூப்பிட்டு, வந்த விருந்தினரை உபசரிப்பதற்காக அப்போது அவர் கைவசம் சில்லரைக் காசு இல்லாததால் ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றைக் கொடுத்து ஹேமரிஷி மண்டபத்தில் பிரசாதம் வாங்கி வரச் சொன்னார். தேசிகருக்கு நன்றாகப் பாடத் தெரியுமே தவிர விருந்தினர்களுக்குத் தேவையான தின்பண்டங்களின் தேவையோ அல்லது அவற்றின் விலையோ தெரியாது. ஹேமரிஷி மண்டப விற்பனையாளர்களிடம் ஐந்து ரூபாய் நோட்டைக் கொடுத்து பிரசாதங்களைக் கேட்டிருக்கிறார். விற்பனையாளருக்கு யாரோ இராஜமாணிக்கம் பிள்ளை வீட்டிற்குப் பத்துப் பதினைந்து பேர் வந்திருப்பதாக நினைத்து ஐந்து ரூபாய் பெறுமான கூடை நிறைய பிரசாதத்தை ஒண்டி ஆசாமி தூக்க முடியாதே எனக் கருணையினால் ஒரு சிறிய கூடையில் பாதி பிரசாதங்களைப் போட்டு விட்டு இன்னொரு தடவை நடையைப் பார்க்காமல் அந்தக் கூடையிலேயே பாக்கிப் பிரசாதங்களையும் எடுத்துப் போகும்படி சொன்னார். சிஷ்யப் பிள்ளையான தேசிகர், ராஜமாணிக்கம் பிள்ளையிடம் "இன்னும் ஒரு கூடை பாக்கி இருக்கிறது. அதையும் சீக்கிரம் கொண்டு வந்து விடுகிறேன்" என்று சொன்னவுடன் இராஜமாணிக்கம் பிள்ளைக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. இந்தச் சம்பவத்தை இராஜமாணிக்கம் பிள்ளையே என்னிடம் சொல்லி விட்டு, "சங்கீத வித்வான்களுக்கு எவ்வளவு பணம் வந்தாலும் வைத்துக் கொள்ளத் தெரியாது. சாப்பிட இருப்பது ஒரு ஆசாமி தானே. அவருக்குத் தேவை எவ்வளவு என்ற சின்ன விஷயம் புரியாமல் நாலணாவிற்கு வாங்க வேண்டிய பிரசாதத்தை ஐந்து ரூபாய்க்கு வாங்கி வந்தார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். அவர்கள் என்ன பாடி ஆயிரக்கணக்கில் சம்பாதித்து என்ன பிரயோஜனம்?" என்றார்.

மாயூரம் பிடில் கோவிந்தராஜ பிள்ளை ஓர் ஆதர்ச புருஷர். அவரைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமானால் செம்மங்குடி சீனுவாசய்யரைக் கேட்டாலே போதும். மாயூரம் கொரநாட்டில் அவர் வாழ்ந்த காலத்தில் அவரை நான் அடிக்கடி சந்திப்பது வழக்கம். அந்தக் காலத்தில் ஆனந்தி, ராதா பரத நாட்டியத்திற்கு நட்டுவாங்கமாக வழுவூர் ராமையாப் பிள்ளையை ஏற்பாடு செய்தவர், மாயூரம் கோவிந்தராஜ் பிள்ளை. வழுவூர் ராமையாப் பிள்வளயின் புதல்வர் சாம்ராஜ் தான் என்னிடம் ஒரு தடவை சொன்னார், கோவிந்தராஜ் பிள்ளை: "நானும் ஆலத்தூர் சகோதரர்களும் பம்பாய் நகரில் ஷண்முகானந்தா சபா கச்சேரிக்குப் போயிருந்தோம். நான் கச்சேரி முடிந்தவுடன் ரூமிற்கு வந்து பெட்டி படுக்கைகளைச் சரி செய்து ஊர் திரும்பத் தயாரானேன். ஆலத்தூர் சகோதரர்களைக் காணாமே எனத் தேடிய போது, அவர்கள் டாக்ஸியை எடுத்துக் கொண்டு ஃபோர்ட் ஏரியாவில் கதர் பீஸ் வாங்கப் போயிருப்பது தெரிய வந்தது. அந்தக் கதர்பீஸ் நம்மூரில் இல்லையா? அதைப் பம்பாயில் டாக்ஸியில் போய் வாங்கி வரவேண்டிய அவசியமென்ன? அதே மாதிரி தான் இந்த ஊரில் குறுகிய இடத்தில் குடி இருந்து கொண்டு எலக்ட்ரிக் தையல் மிஷன் என்று உபயோகமில்லாமல் பணத்தையும் விரயமாக்கி இடத்தை அடைத்துக் கொண்டு இருப்பதைப் பற்றி யாரும் சிந்திப்பதில்லை" என்று கூறியது அவர் காலமாகிப் பல வருடங்களானாலும் என் மனத்தை விட்டு அகலவில்லை. சினிமாக் காரர்கள் சங்கீதக் காரர்கள் எல்லாம் கஷ்டப்படுகிறார்களே என்றால் அவர்கள் தங்கள் முட்டாள் தனத்தைத் திருத்திக் கொள்ளாதது தான் காரணமே அன்றி வேறில்லை. அவர்களுக்குக் கொடுக்கும் பணம் ஓட்டைப் பானையில் தண்ணீரை நிரப்பச் செய்யும் முயற்சியேயன்றி வேறில்லை.

கர்ணனுக்குப் பிறகு கொடையுமில்லை. கார்த்திகைக்குப் பிறகு மழையுமில்லை - என்பதைப் பொய்ப்பித்து கலியுகக் கர்ணனாக வாரி வாரி வழங்கிவிட்ட வள்ளல் மறைந்து விட்டார். அவர் மறைந்தாலும் நாம் அவரை எப்படி மறக்க முடியும்? பாரத லலிதக் கலைகளுக்கும் முக்கியமாகக் கர்னாடக சங்கீதத்திற்கும் உலகம் முழுவதும் பரவ வழி வகுத்தவர் பரோபகார சிந்தாமணியான கல்கி சதாசிவம். அவர் மறைந்துவிட்டாலும் கலை உலகம் அவரை ஒருநாளும் மறக்காது. எங்கள் ராஜாவேத காவ்ய பாடசாலைக்குக் கேட்காமலேயே அள்ளிக் கொடுத்த அந்தக் பெருந்தகையை நாங்கள் எப்படி மறக்க முடியும்? ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் ஒரு காந்தியும், புத்தரும் தோன்ற முடியும். அதே வரிசையில் அபூர்வ மனிதரான கல்கி சதாசிவம் ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் தோன்ற முடியும். அந்த தர்மசீலரின் நாமம் என்றென்றும் வாழ்க. அதன் காரணமாக சங்கீத ஸரஸ்வதியான ஸங்கீதராணி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களுக்கு இந்தப் பொங்கல் நன்னாளில் பாரத அரசு மிக அபூர்வமான 'பாரத ரத்னா'வை அளித்துள்ளது பாராட்டத்தக்கது. சங்கீத உலகத்திற்கே பெருமை! •



கிழக்குக் கடற்கரைச் சாலையில் ... ஒரு பயணம்!


தமிழ்நாட்டுக் கலைகளின் சிலைகள்



தைத் திங்கள் 1ஆம் தேதி (14.1.98) தமிழர் திருநாளன்று போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட்ட பாதை, கிழக்குக் கடற்கரைச் சாலை. இச்சாலை அமைக்கும் பணி 1991ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்ட போதிலும் உயர்நீதி மன்றத் தடை போன்ற இடையூறுகளால் தாமதப்பட்டுக் கொண்டே வந்தது. முடிவாக, சென்னையிலிருந்து கடலூர் செல்லும் 160 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை பயணத்திற்குத் தயாராகிவிட்டது. ஆசிய வளர்ச்சி வங்கியின் உதவியுடன் அனைத்துப் பருவ காலத்திற்கும் உகந்ததாக, பன்னாட்டுத் தரம் வாய்ந்த இருவழிச் சாலையாக இச்சாலையை உருவாக்கச் செலவிடப்பட்டுள்ள தொகை 102 கோடி ரூபாய்.

சென்னையிலிருந்து கடலூருக்கு மதுராந்தகம், திண்டிவனம் வழியாகச் செல்வதை விட, கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாகச் சென்றால் 18 கி.மீ. தூரம் குறைவு. கடலூருக்கு இந்தப்பாதை வழியாகச் செல்லும் முன்பு புதுச்சேரிக்குச் செல்வோம் என்று எங்கள் பயண முயற்சியை மேற்கொண்டோம்.

நாகராஜகுமார்



ஆட்டு மந்தைகளின் சாலை வலம்



கதிர்கள் சாலையில் குவிக்கத் தயார் ...

முதல் நாள் மாலை 6 மணிக்குப் புதுவைக்குப் புறப்பட்டபோது மாலை கி இருள் கப்பிக்கொண்டதால் சாலையின் சிறப்பையும், சாலையை டியே வரும் கடலின் வளப்பையும், சாலையின் மேற்குப்புறம் மைந்துள்ள இயற்கை வனப்புகளையும் ரசிக்க முடியவில்லை. அதனால் வையில் அன்று இரவு தங்கி காலையில் புதுவையிலிருந்து ன்னைக்குப் புறப்பட்டோம்.

நாம் புதுச்சேரியில் இருந்து இந்தச் சாலை வழியாக சென்னைக்குப் ணமாகிறோம். நூறு அடி தொலைவிற்கு ஒரு ஸ்பீடு பிரேக்கர்கள் றந்த முத்தியால் பேட்டையைத் தாண்டியதும் கோட்டக்குப்பம். கிழக்கே, ர்க்கும் தொலைவில் பரந்து விரிந்துள்ள வங்கக்கடல். சாலையோரத் ன்னை மரங்கள் கம்பீரமாக ஆடி அசைந்து வழிதர - ம்மையாபாளையம். பிள்ளைச்சாவடியில் பொறியியற் கல்லூரியையும், வைப் பல்கலைக்கழகத்தையும் கடந்தவுடன் தமிழக எல்லைக்குள் வந்து கிறோம்.

சாலையின் புதிய தார் மணத்துடன், வயல்வெளியில் அறுவடை செய்த தம் புதுக்கதிர்கள் சாலை முழுக்க விரிந்து பரப்பப்பட்டு இருக்கின்றன. க்காணம் வரும் வரை சாலையில் யாரையும் இலட்சியம் செய்யாமல் வர்கள் கதிர்களைக் கொண்டு பரப்புகிறார்கள். களத்துமேடாகப் ன்படுத்தவே கிழக்குக் கடற்கரைச் சாலை அமைக்கப்பட்டதோ என்று ணும் வகையில் தார்ச்சாலையில் விரிக்கப்பட்ட பொற்கதிர்கள்!



உப்பளங்களிலிருந்து வியாபாரத்திற்கு ஏற்றுமதி



தாமரை பூத்த தடாகம்


'இந்தப் பக்கம் களத்து மேடு இல்லாததால் சாலையில் கதிர்களை காய வைப்பது பழக்கமாகி விட்டது. இந்த ரோடு திறப்பதற்கு முன் ஒற்றையடிப் பாதை மாதிரிதான் இருந்தது. அரை மணி நேரத்தி ஒன்றிரண்டு வண்டி வரும். இப்ப போக்குவரத்து அதிகமாகி விட்டதா போகப்போக இப்படிக் காயவைப்பது கஷ்டம்தான்' என்கிறா கீழப்பேட்டையைச் சேர்ந்த விவசாயி ஒருவர்.

சாலையின் அகலத்தைப் போலவே சாலையின் உயரமு அதிகமாக்கப்பட்டுள்ளது. சாலையின் விஸ்தாரத்தை ரசிக்கிறபோ யூகலிப்டஸ் மரங்களின் அணிவகுப்பும் ஆங்காங்கே தொடர்கின்றன.

மரக்காணம் புறவழிச் சாலையைக் கடக்கிறபோது விரவியிருப்ப உப்பளங்கள். உப்பைச் சேமித்து வைத்திருக்கும் குடிசைகள். தேன்பாக்க பாலத்தைக் கடந்ததும் வெண்ணாங்குபட்டு. புதுச்சே முத்தியால்பேட்டையில் ஏதாவது பருக பானம் வாங்கிக் குடிக்காம தவிர்த்திருந்தால் வெண்ணாங்குபட்டு கிராமத்தில்தான் ஒரு சின்னக் கை இந்தக் கிராமத்தின் மேற்கே மதுராந்தகத்திற்கு ஒரு சாலை பிரிகிறது.

பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் பயணிகளை நம்பி மட்டுே வியாபாரத்தை நடத்திக் கொண்டிருந்த அந்தக் கடையில், இன்று நல் வியாபாரம்.

திடீர் சாலை வளைவுகள் நிறைந்த ஊர் கோட்டைக்காடு. எச்சரிக் போர்டுகள் வளைவிற்கு மிக அருகில் இருப்பதால் கவனித்து ந



வண்டியைத் திருப்புவதற்குள் விபத்து நடக்க நிறைய வாய்ப்புண்டு. இதுவரையில் கார்களையும், லாரிகளையும் கடவுள் காப்பாற்றி வருகிறார்.

வேகமான போக்குவரத்துக்குப் பழக்கப்படாத கிராம மக்களும், கால்நடைகளும் அலட்சியமாகச் சாலையைக் கடப்பதால் நாம்தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியமாகிறது.

2 மிகப் பெரிய பாலங்கள், 6 சிறு பாலங்கள், 220 மிகச் சிறு பாலங்களுடன் கூடிய இச்சாலை கடப்பாக்கம், பனையூர், இடைக்கழிநாடு, பெருந்துறவு, முகையூர், கூவத்தூர் என்று விரைய அலுங்கல் குலுங்கல் இல்லாத பயணம். விரவியிருக்கும் முந்திரித் தோப்புகளும், ஒற்றையாய் நிற்கும் பனைமரங்களும், தேங்கியிருக்கும் குட்டையில் நடக்கும் மீன்பிடிப்புத் தொழிலும், விவசாய அறுவடைகளும், சிற்சில இடங்களில் சாலையை இன்னும் அகலப்படுத்தக் குவித்திருக்கும் மணல்மேடுகளும், கிராமக் காவல் தெய்வச் சிலைகளும் பயணக் களைப்பைத் தருவதில்லை.

பாலாறு, புதுப்பட்டினம் தாண்டியதும் மாமல்லபுரம் இதுதான் என்று அடையாளம் காட்டுகிறது கலங்கரை விளக்கம். மாமல்லபுரத்தின் புறவழிச் சாலையும் வெகு நேர்த்தி. மாமல்லபுரம் காணாமல் சென்னைக்கு விரையலாம்.

புகைகளின் ஊடே திண்டிவனம் - சென்னையின் சாலையிலேயே பயணப்பட்ட நமக்கு, இந்தப் பாதையின் (ஓஸோன் காற்றும்) அமுதக்காற்றும் வயல்வெளிகளின் நெல் வாசனையும் ஆங்காங்கே கடலின் உட்பகுதியில் ஏற்பட்டிருக்கும் கழிகளும் காணப் புது அனுபவம்.

புதிதாக நடப்பட்டுள்ள மரக்கன்றுகள் இன்னும் சில ஆண்டுகளில் வளர்ந்து சாலையோரத்திற்கு வனப்பும், நிழலும் கூட்டும். ஆனாலும் கிழக்குக் கடற்கரைச் சாலையா? அல்லது 'கிழக்குக் களத்துமேட்டுச் சாலையா?' என்று எண்ணுகிற வகையில் சாலை முழுதும் காய வைக்கப்படும் வைக்கோல்களும், ஏகப்பட்ட அபாயகரமான வளைவுகளையும் நினைக்காமல் இருக்க முடியவில்லை.


பழக்கப்பட்டவர்களுக்கு இந்தச் சாலையின் பயணம் ஒரு வரப் பிரசாதம். புதிதாகப் பயணப்படுகிறவர்களுக்கு - ஆங்காங்கே, காபியும், திண்டிகளும், நொறுக்குத் தீனியும் தின்று பயணத்தைப் பழக்கப்படுத்திக் கொண்டவர்களுக்கு நிறையப் பொறுமை தேவைப்படும்.

மை மாறாத....



கால்வாய்களில் மீன்பிடிப்பு

புதுச்சேரியிலிருந்து ஒன்றரை மணி நேரத்தில் சென்னையை நெருங்கி விடுகிறோம். இன்னும் 30 கி.மீ. தொலைவில் சென்னை என்று அறிவிக்கிறது சாலையில் ஊன்றப்பட்டுள்ள அறிவிப்பு. இந்த 30 கி.மீ. தூரத்தில் குறுக்கிடும் ஈஞ்சப்பாக்கம், நீலாங்கரை, கொட்டிவாக்கம், பாலவாக்கம் ஊர்களைக் கடக்க மட்டுமே 30 நிமிடங்களுக்கு மேல் ஆகிறது. அகலம் குறைந்த சாலையின் நடுவில் அடிக்கடி நிற்கும் பெருநகரப் பேருந்துகள், கவலையே இல்லாமல் சாலையைக் கடக்கும் கால்நடைகள், சட்டென்று திரும்பும் ஆட்டோக்கள், புடைவை முன்றானையை இரு சக்கர வாகனத்தின் பின் சக்கரத்திற்குக் கொடுத்துவிட்டு உல்லாசமாக விரையும் தம்பதியர்(?),





வெளிநாட்டினரைக் கவரும்.....



சாலையோர திடீர் கடைகள் என்று பயணத்தின் நேரத்தைக் கணிசம விழுங்குகிறது. "எனக்குத் தெரிந்து இருபது ஆண்டுகளில் சா இருபுறமும் ஆக்கிரமிப்புகள் தோன்றிச் சாலையைக் குறுக்கிவிட்ட என்று கூறினார் ஆசிரியர் கலைமாமணி விக்கிரமன் அவர்கள்.

இந்த 30 கி.மீ. தொலைவிற்குள் நடக்கும் அவலங்களைச் சீரமைத் விட்டால், சென்னை - கடலூர் 'கிழக்குக் கடற்கரைச் சாலை'யின் நோக் முழுமை பெற்று விடும். அதேபோல் இந்தச் சாலையின் மூலம் சென்ன முதல் கன்னியாகுமரி வரை உள்ள கரையோர நகரங்களை இணைப்பதற் திட்டமிடப்பட்டுள்ள கனவும் விரைவில் நிறைவேறிவிடும்.

போட்டோ : யோ

ாயூரம்
ட்சிணாமூர்த்தி
ிருக்கோயில்



திருக்கயிலாய பரம்பரை ...மபுரம் ஆதீனத்துக்குச் சொந்த ...ன மாயூரம் காவிரி நதியின் ...கரையில் அமைந்திருக்கும் மாயூரம். வள்ளலார் கோயிலில் குடிகொண்டிருக்கும் ஸ்ரீமேதா தட்சிணா மூர்த்தியின் மகா அபிஷேகமும் குரு பெயர்ச்சி விழாவும் 6.1.98 செவ்வாய்க்கிழமை யன்று தருமபுரம் ஆதீனம் குருமகா சந்நிதானம் தலைமையிலும் கும்பகோணம் பிரபல ஆடிட்டர் என். பஞ்சாபகேசன், இன்கம்டாக்ஸ் சீப் கமிஷனர் வி.ஜெயராமன், தொழில் அதிபர் பரோபகார மணி டெக்கான் என்.கே.மூர்த்தி, பின்னி ஆலைகள் டைரக்டர் ஜெனரல் எஸ். நடராசன், சுந்தரம் பைனான்ஸ் ஜெனரல் மானேஜர் எஸ். ராமச்சந்திரன், ஏ.வி.என்.ராமன் ஆகியவர்கள் முன்னிலையில் அதி விமர்சையாக நடைபெற்றது.

இங்கு கோயில் கொண்டுள்ள ஸ்ரீமேதா தட்சிணாமூர்த்தி பகவான் மிக சக்திவாய்ந்தவர். பெற்றோர்கள் தம் குழந்தைகளின் ஞானம் ஒளிவீசி பிரகாசிக்க இந்த சன்னதியில்தான் பிரார்த்தனை செய்து கொள்வார்கள். பிரார்த்தனையால் உடனடியாக காரியங்கள் வெற்றி பெறுவதனால் தங்கள் பிரார்த்தனைகளைச் செலுத்த தினந்தோறும் இந்தியாவின் பல பகுதிகளிலுமிருந்து ஆயிரக் கணக்கான பக்தர்கள் வந்த வண்ணம் இருக்கின்றனர்.

ஐப்பசி மாத துலாஉற்சவ காலத்தில் பத்து தினங்கள் உற்சவம் நடைபெறுகிறது. இந்தச் சன்னதியில் நடைபெறும் அதிவிமர்சையான விழாக்களை தர்மபூஷணம் டாக்டர். ஆர். நடராஜன், ஆனந்த தாண்டவ புரம் வி. சுவாமிநாதன். சிவ ஆகம சாம்ராட் டாக்டர். ஸ்ரீ சுப்ரமணிய சிவாச்சார்யர்கள் செய்து வரு கின்றனர். விரைவில் இந்த ஆலயத்துக்குத் திருப்பணி தொடங்கி கும்பாபி ஷேகம் நடைபெற உள்ளது. மேலும் விபரங்களுக்குக் கண்காணிப்பாளர், வள்ளலார் கோயில் தேவஸ்தானம் மயிலாடுதுறை, என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளுமாறு ஆனந்த தாண்டவபுரம் வி. சுவாமிநாதன் வேண்டிக் கொள்கிறார்.

முதியோர் நலம்

எஸ். இராஜரத்தினம்

முதியோர் தமது இறுதிக் காலத்தைப்பிறர் உதவியின்றிக் கழிப்பது மிகவும் கடினம். வேண்டிய வாழ்க்கை வசதிகள், மருத்துவ வசதி, தேவையான நிதி நிலை, தேவைப்பட்டால் சட்ட உதவி ஆகியவற்றை அவர்கள் பெற அவர்களால் பயன்பெற்ற குடும்பத்தினர் மட்டுமல்லாது சமுதாயத்திற்கும் அரசுக்கும் கூடக் கடமைகள் உண்டு. அடிப்படைத் தேவைகள் கிடைத்தால் அவர்களில் பலர் தங்களது அனுபவம் நிறைந்த அறிவுத் திறனையும் உழைப்பையும் குடும்பத்தினருக்கும் சமூகத்திற்கும் அளிக்க இயலும். ஆயினும் கூட்டுக் குடும்ப வழிமுறை குறைந்து, குடும்ப உணர்வு தளர்ந்து, முதியோர் இல்லங்கள் பெருகிவரும் இந்நாளில், முதியோர் நலம் குறித்துப் போதுமான அக்கறையில்லை என்பது ஒரு பெரிய குறை, அதனால் ஒரு முக்கியக் கடமையில் தவறுகிறோம் என்பது மட்டுமல்லாது அவர்களைக் கவனிக்காததால் அவர்களால் குடும்பமும் சமுதாயமும் அரசும் பயன்படக்கூடிய அளவு பயன்பெறவில்லை என்பதும் கண்கூடு.

முதியோர் நலம் பற்றிய உணர்வின் பலனாக முதியவர்களின் நோய்கள், அவர்களுக்கேற்ற உணவு, அவர்களிடம் நடந்து கொள்ள வேண்டிய முறைகள், அவர்களுடைய இறுதிக் காலத்தில் அவர்களுக்கு உதவும் சேமிப்புத் திட்டங்கள் ஆகியவை பற்றி உலகெங்கும் பல ஆய்வுகள் நடப்பதே முதியோர் நலமின்மை ஒரு சமூகப் பிரச்சனை என்று உணரப்பட்டிருக்கிறது என்பதற்கு ஒரு சான்று. இந்த ஆய்வுகள் கூறும் சில கருத்துகளைக் காண்போம்.

முதியோர் நலம் பேணுவது அவரது குடும்பத்தினருக்கு ஏற்படும் முதல் கடமை, அந்தக் கடமை நல்லொழுக்கத்தின் காரணமாகவோ, நமது கலாசாரம் அல்லது மரபுகள் காரணமாகவோ மட்டும் ஏற்பட்ட ஒன்றன்று. முதியோர் வறுமையில் இருந்து உண்ண உணவோ, இருக்க இடமோ இல்லையெனில் தங்கள் குடும்பத்தினரிடமிருந்து நீதி மன்றங்களின் மூலம் உதவித் தொகை பெற முடியும். அவர்கள் நிர்க்கதியாக நிறுத்தப்பட்டால் பொறுப்புள்ளவர்கள் மீது குற்றவியல் சட்டத்தின் கீழ் (கிரிமினல்) நடவடிக்கைக்குக்கூட நமது சட்டத்தில் இடமுண்டு. ஆனால் சட்டத்தின் உதவியை நாடுவதற்குக்கூட சட்ட அறிவோ, நடவடிக்கை எடுக்கக்கூடிய எண்ணமோ முதியவர்களுக் இருப்பதில்லை. இன்று முதியோர் இல்லங்களி பலருக்கு வசதியுள்ள மக்கள் உண்டு. அவர்களை நீதிமன்றங்களுக்கு இழுக்க முதியோருக்கு வாய்ப்பு உண்டு.

பெரும்பாலான முதியவர்களுக்கு அவர்கள் வசதிக் வேண்டிய பண உதவி அளிக்கும் மக்கள் உண் வெளிநாட்டிலிருந்து தேவையான போது தேவையில்லாவிடினும் கூட தாராளமாகப் பண கொடுக்கும் மக்களும் உண்டு. ஆனால் அவர்க எல்லாரும் தங்கள் பெற்றோருக்குத் தேவையா பாசத்தையும் மன ஆறுதலையும், வயதான காலத்தி தேவையான பாதுகாப்பு இருக்கிறது என் நம்பிக்கையையும் எல்லாரும் அளிப்பதில்லை. பக்கத்தி இல்லாவிட்டாலும் ஏதோ ஒரு சமயத்தில் வயதா பெற்றோரைக் காண வேண்டும் என்றோ, அல்லது ஒ நெருக்கடியின் போதாவது வருவார்கள் என் நம்பிக்கையைக்கூட ஊட்ட முயலாத மக்கள் பல உண்டு. டெலிபோன் முதலிய நவீன சாதனங்களி மூலம் தினமுமோ வாரமொரு தடவையே இல்லாவிட்டாலும் மாதம் ஒரு முறையாவ பேசவேண்டும் என்று நினைக்கும் மக்களும் சிலே அவர்கள் முதியோரின் பணத் தேவைகளை அறிந் அளவிற்கு மனத் தேவைகளை அறியாதவர்களாகே உள்ளனர்.

அதிகப்படியான வசதிகளைத் தருவதுடன் மட்டு கடமை முடிவதில்லை. அந்தக் கடமைகளைச் செய்யு முறையில் அன்பில்லையென்றால் அது வீண். அதை செய்யும் முறையில் அதைக் கடமையாக மட்டும் கருதி செய்வதாகவோ, அல்லது தாங்கள் ஒரு தியாக செய்வதாகவோ எண்ணும்படி செய்ததாகவே முதியவர்களுக்குத் தோன்றினால் அவர்கள் உற்சாகமா அதைப் பெற முடியாது. தங்கள் அளவுக்கு மிஞ்சிே அவர்கள் உதவி அளித்தாலும் அது அவசியமற்ற ஒ காரியமே. எந்தப் பெற்றோரும் தம்மக்களை வருத்தி பயன்பெற விரும்புவதில்லை. முதியோர் சில தனிமையில் இன்பம் காணலாம். ஆனால் பலரும் த குடும்பத்தினருடனும் பேரக்குழந்தைகளுடனு மகிழ்ச்சியுடன் இருக்கவே விரும்புவர். தனிக் குடித்தன இன்றைய வாழ்க்கை முறையாக இருப்பினும் சி குறிப்பிட்ட காலங்களிலாவது கூடுவதற்கு வ செய்யாவிட்டால் முதியோர் தனிமைப் படுத்தப்படுவ போல், தாங்களும் தங்கள் உறவினர்களிமிரு தனிமைப் படுத்தப் படுவார்கள் என்பது நாளை

..தியோரான இன்றைய சமுதாயத்திற்குத் தெரிந்திருக்க ..வண்டிய ஒன்று.

பல குழந்தைகளைப் பெற்றோர் தங்கள் ..றுதிக்காலத்தில் தங்கள் விருப்பப்படி தம் மக்களில் ..வருடனாவது அல்லது பலருடன் சில காலம் ..ம்மதியாக இருக்கலாம் என எண்ணுவதுண்டு. அதில் ..ச்சரியம் என்னவென்றால், வசதியுள்ள மகன் ..வனிக்கட்டுமே என்றோ, அல்லது மூத்த மகன் ..வனிக்கட்டுமே என்றோ, மற்றவர்கள் பாராமுகமாக ..ருப்பது உண்டு. பொறுப்பு அனைவருக்கும் உண்டு ..ன்பதே உண்மை. ஆயினும் அந்தப் பொறுப்பை ஏற்றுக் ..காண்டவர் அதனைத் தங்களுக்கு ஏற்பட்ட வாய்ப்பாக ..ண்ணாமல், பொறுப்பை ஏற்காத அல்லது ஏற்க ..யலாத மக்களைப் பற்றிப் புகார் கூறுவதோ அல்லது ..அவர்களைப் புறக்கணிப்பதோ அவர்கள் ஆற்றிய ..மையின் மதிப்பைக் குறைப்பதுடன் முதியோருக்கு ..வேண்டிய மன ஆறுதலை அளிக்காது. வேண்டாத ..ருந்தாளியாகத் தங்களை நினைத்து வருந்துவர்.

சொத்துரிமை ஓரளவிற்குப் பெண்களுக்கு வந்து ..ட்டபின் பெற்றோரைப் பேணுவதில் ஆண்மக்களுக்கு ..ட்டுமே பொறுப்பு இருப்பதாக எவ்வாறு, எடுத்துக் ..கொள்ள முடியும்? கணவன் மனைவி இருவருமே ..ங்கள் இருவரின் பெற்றோரையும் பேணுவது தங்கள் ..டமை என்று எண்ணுவார்களேயானால் முதியோர் ..லரின் கஷ்டங்கள் குறையும்.

முதியவர்கள் ஓரளவு தனிமை விரும்புவர். அவர்களுக்குப் பிரத்தியேகமான பிடித்தமுள்ள உணவு, படுக்கக் கட்டில், தனியாக இடம், தேவை என்பது குடும்பத்தினருக்குத் தெரிய வேண்டிய ஒன்று. முதியோருடைய வாழ்க்கை முறைகளுக்கும் அவர்களுடைய பழக்க வழக்கங்களுக்கும் ஒரு மரியாதை அளிப்பதும் ஒரு முக்கியக் கடமையே. முதியவர்களுடன் சிறிது நேரமாவது பேசுவதுடன், அவர்களைத் தம் நண்பர்கள் வேண்டியவர்களிடமிருந்து ஒதுக்காமல் அவர்களது அன்றாடத் தேவைகள் மட்டுமல்லாது, பத்திரிகைகள், கச்சேரிகள் ஆகிய வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பது போன்றவற்றில் அவர்களுக்கும் ஈடுபாடு இருந்தால் அதற்கு எந்த முறையிலும் தடையின்றி முதியவர்களை மகிழ்ச்சியில் வைத்திருப்பதுடன், நாம் நமது கடமையைச் செய்தோம் என்ற மனநிறைவைப் பெறலாம். சந்தர்ப்பவசத்தால் அவர்களை முதியோர் இல்லங்களில் வைக்கப்பட நேர்ந்தாலும் அவர்களை முழுவதுமாக தனிமைப் படுத்த வேண்டுவது அவசியமில்லை.

முதியோர் நலம் பேணுவது இன்றைய நாகரிக உலகில் அத்தியாவசியமான ஒரு கடமையாக உணரப்பட்டு வருகிறது. அதை நம் வாழ்வில் உணர்ந்து நம்மை அண்டியிருக்கும் முதியோரை இயன்ற வரை கவனித்தல், தனி மனிதர்களின் கடமை. ●

மனம் விட்டுப் பேசுவோம்

✪ எஸ். ஆராவமுதன், திருச்செங்கோடு காந்தி ஆசிரமம், நாமக்கல் - 637 201.

• 'அமுதசுரபி' இதழ்களில் 'மறக்கக்கூடாதவர்கள்' என்கிற தலைபபில் உண்மையிலேயே மறக்கக்கூடாதவர்களைப் பற்றி கே.சி. லட்சுமி நாராயணன் அவர்கள் எழுதும் கட்டுரையைப் பிரசுரித்து வருகிறீர்கள். அவற்றை ஆசிரமக் காலைப் பிரார்த்தனைக் கூட்டத்தில் வைத்து ஒவ்வொரு மாதமும் படித்து வருகிறோம். நாட்டிற்குழைத்த நல்லவர்களை அறிய முடிகிற இப்பகுதிக்குப் பாராட்டுகள்!

✪ திருமதி கௌரி ராமச்சந்திரன், அண்ணா ஆதர்ஷ் மேல்நிலைப் பள்ளி, சென்னை - 40.

• தங்கள் இதழில் வெளியாகும் அன்னையின் கட்டுரையைப் படித்த பிறகு அன்னையிடம் ஒரு பற்றுதல் ஏற்பட்டது. பாண்டிச்சேரியிலிருந்து அன்னையின் பிரசாதம் எனக்குக் கிடைக்கிறது. ஒருமுறை அன்னையின் சமாதிக்கும் செல்ல ஆசை ஏற்படுகிறது.

✪ அ. சம்பத், திருவரங்கம் - 620 006.

• வினை வலி எத்தகையது என்பதை விளக்கிட முன்வந்த மு. துரைராசன் மூன்று முத்தான குறள்கள் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார். சந்தனக் கடத்தல் வீரப்பனை உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டது பொருத்தமாக அமைந்து விட்டது.

✪ தாமரைச்செல்வி சுந்தர், திருபுவனம் - 612 103.

• தனித்துவம் வாய்ந்தது என்றால் அது 'அமுதசுரபி' அட்டைப்படம்தான். புத்தாண்டும் பொங்கலும் உழவர் திருநாளும் உள்ளத்தில் நிலைத்து நிற்கும்படி அமைந்த அட்டைப்படம் அருமை. ●



அன்பர் அனுபவம் - XVIII

கர்மயோகி

1. "அன்னையின் அருளினால் வீட்டில் வியாதியைப் பற்றிய கவலை நீங்கியுள்ளது."

2. "அன்னையின் கருணையால் கடந்த இடையூறுகள் அதிகம்."

3. "தங்கள் முன் கடிதப்படி என் பிரச்னைகளை மானஸிகமாய் அன்னையிடம் கூறிவருகிறேன். என் மகனுக்கு மே மாதம் திருமணம் நிச்சயமாகியுள்ளது. என் பெண்ணிற்கு விடிவுகாலம் ஏற்பட அன்னையைப் பிரார்த்திக்கிறேன்."

4. "அன்னையின் பக்தை எழுதிக் கொள்வது. நான் தங்களிடம் வேண்டி எழுதியிருந்ததற்கிணங்க எனக்கு அன்னையின் போட்டோவை அனுப்பி வைத்தமைக்கு நன்றியுள்ளவனாவேன். நான் இதற்கு முன் எழுதிய கடிதத்தில் எங்களுக்குச் சொந்தமான கடை ஒன்று காலியாகாமல், அதில் குடியிருந்தவர் கடையைக் காலி செய்வதற்கு அவகாசம் கேட்டிருந்தார் என எழுதியிருந்தேன். அந்தக் கடையை, சென்ற வாரம் அன்னையின் அருளால் எவ்விதப் பிரச்னையுமில்லாமல் கடையில் குடியிருந்தவர் காலி செய்து கொடுத்தார். என்னே அன்னையின் கருணை! அவர்களுடைய அருளையும் கருணையையும் எண்ணி நாங்கள் (அம்மாவும், நானும்) மிகவும் புல்லரித்துப் போனோம்."

5. "என் பெரிய பெண்ணின் விஷயமாக அன்னை அருள் கிடைத்து அவளுக்குச் செய்ய வேண்டிய ஆப்பரேஷன் செய்யாமலே குணமடைந்தது."

6. "முதல் கோரிக்கைப்படி எனக்கும் தம்பிக்கும் படிப்பில் நல்ல ஆர்வமும் அக்கறையும் ஏற்பட்டு நீடித்து வருகிறது."

7. "எனக்கு ஒரு நல்ல வாழ்க்கை கொடுத்ததற்கு மிகவும் நன்றி அன்னையே! உங்களின் அருளால் என் கணவர் என்னுடன் சேர்ந்து விட்டார், அன்னையே! உங்களுக்கு என் கோடி கோடி நமஸ்காரங்கள்."


8. "வணக்கம். நான் இதற்கு முன் தங்களுக்கு ஒரு கடிதம் எழுதி என் கணவரிடமிருந்து பிரிந்துள்ள விவரங்களைக் கூறி மீண்டும் அவர் என்னைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டிருந்தேன். அன்றே நான் என் கணவர் வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டேன்."

9. "அன்னை என்னை என்றும் கைவிட மாட்டார்கள் என நம்புகிறேன். அதன்படி அன்னை என்னைக் காக்கட்டும். ஆபீஸ் விற்பனை வரி ஃபைலை என் வீட்டு வாசலில் தொலைத்து விட்டார்கள். என்னிடம் கூறிய 10 நிமிடத்திலேயே அந்த ஃபைல் கிடைத்து விட்டது."

10. "அநேக கோடி நமஸ்காரங்களுடன் எழுதியது. நான் தங்களுக்கு எழுதிய 2 கடிதங்களும் கிடைத்திருக்கும். நான் குறிப்பிட்டிருந்தபடி என் பெண் ஸ்ரீ அன்னையின் கிருபையால் தற்போது நன்றாக நடக்கிறாள். இப்போது எந்த விதமான கோளாறும் இல்லை."

11. "அநேக கோடி நமஸ்காரங்களுடன் எழுதியது. தங்களுடைய பதில் கிடைக்கப் பெற்றேன். என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் லெட்டரைப் பார்த்ததுமே மனத்தில் நிம்மதி ஏற்பட்டது. ஸ்ரீ அன்னை அருளால் எங்களை மிகவும் கவலைக் குள்ளாக்கிய பிரச்னைகள் எல்லாம் எதிர்பாராத முறையில் தீர்ந்து விட்டன. பரீட்சை எப்படி நடக்கும் என எல்லாரும் மிகக் கவலையாய் இருந்தோம். கல்வி ஸ்தாபனங்களில் யார் என்ன சொன்னாலும் போலீஸ் துணையுடனும், சர்க்கார் அதிகாரிகளின் துணையுடனும் பரீட்சை நடத்துவோம் என்றனர். எல்லாருக்கும் பீதியாக இருந்தது. அன்னை அருளால் ஸ்டிரைக் செய்தார்கள். பிரச்சினை தீர்ந்து, ஸ்டிரைக் வாபஸ் செய்து கொண்டதால், இன்று வரை பரீட்சை நல்லமுறையில் நடந்து வருகிறது 12 ஆம் வகுப்பு பரீட்சை முடிந்து விட்டது. தற்சமயம் 10 ஆம் வகுப்பு பரீட்சை நடந்து வருகிறது. என்னுடைய சிறிய பெண் 10 ஆம் வகுப்பு பரீட்சை எழுதுகிறாள். ஒவ்வொரு மாதமும் அன்னைக்குக் காணிக்கை அனுப்புவேன். அதே போல் இந்த மாதமும் ஆசிரமத்திற்கு காணிக்கை அனுப்பி விட்டு, தங்களுக்கும், எனது தாயாருக்கும் அனுப்பியிருந்தேன். மூன்று மணியார்டர்களைச் சேர்த்து

எண்ணம் புதிதாய்....!



எண்ணம் புதிதாய் இருக்கட்டும் - அதில்
என்றும் பொதுமை சிறக்கட்டும்!
வண்ணப் பூவாய் வளரட்டும் - அதில்
வாசம் நின்று கமழட்டும்!

புன்னகை அரும்புகள் பூக்கட்டும் - மனம்
பூந்தமிழ் வழியை நோக்கட்டும்!
வன்பகை நீக்கி வாழட்டும் - தினம்
வளர்பிறைப் பேரொளி சூழட்டும்!

உண்மை சத்தியம் உயரட்டும் - மனம்
ஊக்கம் கொண்டு நிமிரட்டும்!
பண்ணும் பாட்டும் பரவட்டும் - மனப்
பாங்குகள் அன்பில் முரலட்டும்!

விண்ணைப் போலே உயரட்டும் - மனம்
வியக்கும் வண்ணம் முயலட்டும்!
திண்ணம் மேன்மை தேடட்டும் - கலைத்
திறனும் புகழும் கூடட்டும்!

உயர்வைத் தேடி உழைக்கட்டும் - அதில்
ஊரும் உலகும் தழைக்கட்டும்!
முயற்சிகள் நெஞ்சில் முளைக்கட்டும் - அது
மூவா மருந்தாய்த் திளைக்கட்டும்!



கவிமாமணி.செ.க.மலரடியான்

ஒரே நாளில் அனுப்பியிருந்தேன். தங்களிடமிருந்தும், எனது தாயாரிடமிருந்தும் ரசீது வந்தது. ஆனால் ஆசிரமத்திலிருந்து ரசீது வரவில்லை. ப்ளஸ்ஸிங் பாக்கெட்டும் வரவில்லை. எங்களுக்குக் கவலையாக இருந்தது. அன்னையே இது என்ன சோதனை என்று அன்னையிடம் இடைவிடாது பிரார்த்தனை செய்து கொண்டிருந்தேன். எப்போது காணிக்கை அனுப்பினாலும், பிரசாதம் உடனே வந்துவிடும். நான் மணியார்டர் அனுப்பியதில் எந்தத்தவறும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆகவே போஸ்ட் ஆபீஸ் சென்று கேட்கலாம் என்று போனேன். அங்கு போனால் மிகப் பெரிய க்யூ நின்று கொண்டிருந்தது. எதற்கும் இன்னும் இரண்டு தினங்கள் பார்க்கலாம் என்று திரும்பிவிட்டேன். அன்று பகலில் 13.3.89, (10 ஆம் வகுப்பு பரீட்சைக்கு முன்தினம்) ப்ளஸ்ஸிங் பாக்கெட் வந்து சேர்ந்தது.

அன்னையின் பிரசாதம் கிடைத்தவுடனே மனத்திற்குப் பெரும் நிம்மதி ஏற்பட்டது. அன்னையின் ஆசி கிடைத்துவிட்டது. இனிமேல் எல்லாம் நன்றாக நடக்கும் என்று நிம்மதி ஏற்பட்டது. அதன் படி என் பெண் இதுவரை எழுதிய எல்லாப் பரீட்சைகளையும் நன்றாக எழுதியுள்ளாள். குழந்தைகள் மனம் கலங்கும் போதெல்லாம் தங்களுடைய அன்னை கட்டுரையை படித்துச் சொல்வேன். அவர்களுக்கு நம்பிக்கை உண்டாக்குவேன். எப்பொழுதும் கடமையை சரியாகச் செய்யுங்கள். சத்தியமான நேர்மையான வழியில் செல்ல வேண்டும் என்று சொல்லி தங்களுடைய கட்டுரையை படித்துக் காண்பிப்பேன். அது அவர்களுக்கு மிகப் பெரிய மனத்தெளிவை உண்டு பண்ணுகிறது. மனம் திணறும் சமயமெல்லாம் அன்னையை நினைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லுவேன். 'நினைவே அன்னை', 'அன்னையே நினைவு' என அன்னையிடம் ஐக்கியமாகிவிட்டோம்..... அன்னையை வாழ்வில் பெற்ற பின் லக்ஷ்மிதேவியின் அனுக்கிரஹம் பூர்ணமாக ஏற்பட்டுள்ளது."

12. "ஸ்ரீ அன்னையைப் பற்றி எனது சின்னம்மா (நாகலாபுரம்) எனக்கு விவரமாகச் சொன்னார்கள். எனக்கு இன்னும் திருமணம் முடியவில்லை என்று எழுதியிருந்தேன். ஸ்ரீ அன்னையின் அருளால் திருமணம் இனிதே முடிந்தது. ஸ்ரீ அன்னையின் அருளால் எனக்கு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு திடீர் என்று உடம்பு சரியில்லை. நாங்கள் மிகவும் கவலைப்பட்டோம். ஸ்ரீ அன்னையை வணங்கியதால் குழந்தைக்கு உடம்பு சரியாகி விட்டது."

13. "அநேக நமஸ்காரம். அன்னையின் அருளால் புது வீடுகட்டி மே 1ஆம் தேதி கிருஹப்பிரவேசம் செய்ய இருக்கிறோம். தங்களுக்கு கிருஹப்பிரவேச அழைப்பு

அமுதசுரபி

பொன்விழா ஆண்டு - குறுநாவல் போட்டி

10 நாவல்கள் - மொத்தப் பரிசு ரூ.20,000

'அமுதசுரபி' - வெளியீட்டாளர்கள் பொன்விழா ஆண்டைச் சிறப்பாக நினைவுபடுத்தும் வகையில் குறுநாவல் போட்டியை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறார்கள்.

குறுநாவல் 'அமுதசுரபி' மாத இதழில் 32 பக்கங்களுக்குக் குறையாமல் அமையவேண்டும். ஏறத்தாழ முழு வெள்ளைத்தாளில் 100 பக்கங்கள் இருக்கலாம்.

குறுநாவல், எழுதுபவரின் சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும். தழுவல், தமிழாக்கமாக இருக்கக் கூடாது. மொழி வளம், நடைச் சிறப்புடன் தமிழ்ச் சமுதாய முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு அமைதல் நல்லது. வரலாற்றுச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டும் எழுதலாம்.

10 நாவல்கள் வெளியிடத் தேர்ந்தெடுக்கப்படும். ஒவ்வொரு நாவலுக்கும் ரூ.2,000 பரிசாக வழங்கப்படும்.

10 நாவல்கள் பரிசுக்குத் தகுதியில்லாவிடில், தகுதியுள்ள நாவல்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்படும். தேர்ந்தெடுக்கப்படாத குறுநாவல்களைத் திரும்பப் பெற போதிய தபால் தலைகள் இணைக்கப்பட வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட குறுநாவல்கள் 'அமுதசுரபி' இதழில் ஒவ்வொன்றாக வெளிவரும்.

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. குறுநாவல்கள் 'அமுதசுரபி' அலுவலகத்திற்கு 15-2-98 -க்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்கவேண்டும்

அனுப்ப வேண்டிய முகவரி:

அமுதசுரபி,

ஏ-7, இரண்டாவது அவென்யூ,

அண்ணாநகர் கிழக்கு, சென்னை - 600 102

அனுப்பியிருக்கிறேன். ஆசிரமத்திற்கும் அனுப்பியிருக்கிறேன். தங்கள் மூலம்தான் நான் அன்னையைப் பற்றித் தெரிந்து கொண்டு பிரார்த்திக்கத் தொடங்கினேன். எங்கள் வாழ்வு எல்லாம் நன்றாக நடந்து கொண்டிருக்கிறது. வீட்டிற்கும் 'மீரா ஹவுஸ்' என்று பெயரிட்டிருக்கிறேன். அன்னை அருள் கிடைக்க வேண்டுகிறேன்.

அன்னையின் அருளால் தொலைந்து போன என் குழந்தை கிடைத்தாள். ஒருநாள் தனியாக (இப்போது 3 வயது) கேட்டைத் திறந்து கொண்டு எங்கோ சென்று விட்டாள். குழந்தையைக் காணாமல் எங்கு தேடுவது என்றே தெரியவில்லை. அன்னையைத்தான் நான் பிரார்த்தித்துக் கொண்டேன். எங்கள் காலனியிலுள்ள பலரும் தேடிக் கொண்டே சென்றார்கள். கடைசியில் 2,3 தெரு தாண்டி மெயின் ரோடு வரை தனியாகப் போய்க் கொண்டிருப்பதைப் பார்த்து அழைத்துக் கொண்டு வந்தார்கள். அன்று குழந்தை வருவாளா என்றே சந்தேகமாக இருந்தது. அன்னையை சதாஜபித்துக் கொண்டே தேடினேன். அன்னையின் அருளால் குழந்தை எந்தச் சேதமுமில்லாமல் கிடைத்தாள். அன்னையின் அருள் எப்படி விரைந்து செயல்படுகிறது என்பதற்கு இது ஒரு சான்றுதான். ஆனால் தினமும் நாள் நல்லபடியாகப் போய்க் கொண்டிருக்கிறது."

14."அன்பர் வீட்டில் கேஸ் தீர்ந்து விட்டது. அதற்காக நேரத்தில் பதிவுபண்ணியிருந்தார் கம்பெனியில் கேட்டால் தினமும் நாளை வரும் என்று இது வரை 15 முறை சொல்லி விட்டார்கள். அன்பருக்கு முதலாளியைத் தெரியும். அவரிடம் பேசலாம் என போனில் கேட்டால், அவர் இல்லை என்று பதில் வருகிறது. எப்பொழுதும் அதே பதில் "கேட்டால் சாக்கு சொல்கிறீர்கள், முதலாளியிடம் பேச அனுமதிக்க மாட்டேன் என்கிறீர்கள்" என்று கோபமாக அன்பர் கேட்ட பொழுது, "வந்து எடுத்துப் போங்கள்" என்றார் கடையிலிருந்தவர். போனவுடன் பேச்சைமாற்றி "எப்பொழுது ரிஜிஸ்டர் செய்தீர்கள், யாரிடம் பேசினீர்கள்?" என்று கேட்கத் தொடங்கியதால் அன்பருக்குக் கோபம் வந்து கடுமையாகப் பேசினார். கேஸ் சிலிண்டர் கொடுத்துவிட்டான். வீட்டிற்கு வந்து கோபம் அடங்கிய பின் அன்பர் தான் கோபப்பட்டது தவறு என்று மனம் வருந்தினார். கேஸ் இல்லை எனில் ஏன் கடைக்காரரைக் கேட்க வேண்டும். நான் அன்னையை அல்லவா கேட்க வேண்டும், நான் செய்தது தவறு, இனி இதைச் செய்யக்கூடாது என நினைத்து வேலையாக வெளியில் போய் விட்டார். திரும்ப வந்தால், அவர் ரிஜிஸ்டர் செய்ததற்காக கேஸ் சிலிண்டர் வீட்டுக்கு வந்துள்ளது.

15. "வணக்கத்துடன் எழுதியது யாதெனில் நான் முன்மாதம் தாங்கள் எழுதிய கடிதத்திற்கு பதில் எழுதியிருந்தேன். அதற்குப் பிறகு ஒரு கடிதம் எழுதினேன். நான் முதலில் எழுதிய லெட்டர் என் வேலை விஷயமாக. அதாவது கல்லூரி வேலையாக எழுதினேன். மேலும் எங்களுக்கு சம்பளம் தரவில்லை என்றும் அதற்கு நீங்கள் 3 நாள்பிரார்த்தனை அன்னையிடம்செய்யுங்கள் என்று சொன்னீர்கள். நானும் நீங்கள் சொன்னது போல் பிரார்த்தனை செய்தேன். பிரார்த்தனை செய்தபின் அன்னையின் அருள் மூலம் மே, ஜூன் மாதத் தொகை கிடைத்துவிட்டது."

16. "அன்னையைத் தெய்வமாகப் பெற்றதிலிருந்து என் வாழ்வில் நல்லதே நடக்கிறது."

17. "இப்பவும் அன்னை அருளால் எங்கள் குடும்பத்தில் யாவும் நல்லபடியாக நடந்துவருகிறது.

எனது மூன்றாவது பெண் அன்னை அருளால் பி.காம்., இரண்டு வருடம் நன்கு படித்து பாஸ் செய்து விட்டு இப்பொழுது மூன்றாம் வருஷம் எழுதப் போகிறாள்.

என் கணவர் வாங்கிய மனைகள் பற்றிய விவரத்தை அன்னையிடம் முறையிட்டால் பிரச்னைகள் சிறிது சிறிதாகத் தீர்ந்து வருகின்றன."

18. "வணக்கம். நான் முன்பே இரண்டு முறை தங்களுக்குக் கடிதம் எழுதி பதிலும் பெற்றுக் கொண்டேன். என் அறுவை சிகிச்சையை அன்னை வெற்றிகரமாக நிகழ்த்தி நலஞ் பெறத் துணை புரிந்தார்."

19. "அநேக வணக்கங்கள். இப்பவும் நான் 1989 ஜனவரிமாதம் அன்னை பற்றியும் ஸ்ரீ அரவிந்தரைப் பற்றியும் ஆசிரமத்தைப் பற்றியும் ஓர் அன்பர் மூலமாகக் கேள்வியுற்றேன். அவரிடமிருந்து ஸ்ரீ அரவிந்தர் அன்னை படத்தைப் பெற்றுக் கொண்டேன். காணிக்கை அனுப்புவதற்காகப் படத்துடன் சேர்த்து வைத்துக் கொண்டிருந்தேன். என் அலுவலக நேரமும் மணியார்டர் செய்யும் நேரமும் ஒத்துப் போகவில்லை யாதலால் அது அப்படியே இருந்து வந்தது. இதன் நடுவில் 1988 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் நான் ஆபீஸ் போகும் பொழுது ரயிலில் என்னுடைய 2 பவுன் செயினை அறுத்துக் கொண்டு ஓடி விட்டார்கள். போலீஸில் புகார் செய்தும் ஒன்றும் பயன் இல்லை. இனி அது கிடைக்காது என நாங்கள் அதை மறந்துவிட்டிருந்த நிலையில் அதுபோலீஸாரால் கண்டுபிடிக்கப்பட்டு என் கைக்கும் கிடைத்தது.நான் அன்னையை நினைத்துக் காணிக்கை எடுத்து வைத்த பிறகு தான். இது அன்னையின் அருளால்தான் நடந்தது என நான் முழுமையாக நம்புகிறேன்."

20. "எங்கள் பிரார்த்தனையால் எங்கள் கோரிக்கைகள் ஒவ்வொன்றாக நிறைவேறி வருகின்றன."



எப்படி ஒழியும்?

'ஏய் மச்சி எனக்குப் பிசிக்ஸ் புக் கிடைச்சிருச்சு. 'நாலெட்ஜ்' புக் ஷாப்பிலே இன்னும் சில புத்தகங்கள் தான் இருக்கு' என்று கூறியபடியே ஒரு கையால் லாகவமாக மோட்டார் சைக்கிளை ஓட்டிய வண்ணம் கையை உயர்த்தி புத்தகத்தைக் காட்டி `சாயங்காலம் சரியா 6 மணிக்குப் படிக்க வந்துடு. இன்னிக்குப் புதுப்பாடம்' என்று கண்சிமிட்டிக் கூறினான் ரமேஷ். பணக்கார வீட்டுப் பிள்ளை, இல்லையென்றால் தமிழ்நாட்டி லிருந்து ராஜஸ்தானில் அமைந்துள்ள இந்தப் பெருமை வாய்ந்த பொறியியல் கல்லூரியில் ஹாஸ்டலில் இருந்து கொண்டு மோட்டார் சைக்கிள் வைத்துக் கொள்வதென்றால் சும்மாவா? அவனிட மிருந்து சும்மா பார்த்து விட்டுத் தருவதற்காகக் கூடப் புத்தகம் கிடைக்காது. ஆனால், பெருமையாக எல்லாப்புத்தகங்களையும் வாங்கி உடனுக்குடன் தனது ஷெல்பில் அடுக்கி வைத்து விடுவான். அவனுக்குத் தேவையெல்லாம் குதூகலம், கும்மாளம், கொண்டாட்டம். வாழ்க்கை என்பது சந்தோஷமாகக் கழிப்பதற்கே என்பது அவன் கொள்கை.

`இன்னும் ஒரு வாரத்தில் `பிசிக்ஸ்' தேர்வு நடைபெறப் போகிறது. இப்பொழுது வெளியாகியுள்ள புத்தகம் மிகவும் பிரபலமான புரொபசர், புது முறையில் அனைத்து மாணவர்களுக்கும் எளிதில் புரியும் படி எழுதியுள்ளதாக எல்லாராலும் பெரிதாகப் போற்றப் படும் புத்தகம். இப்புத்தகம் இருந்தால் நிச்சயம் 'பிசிக்ஸ்' தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெறலாம் என்று தனது எண்ண அலைகளை ஓட்டினான் ராஜா. உடன் ஒரு பொறி பறக்க கணேஷ் அறையை நோக்கி ஓடினான்.

கணேஷ் ஒரு மிகச் சாதார
குடும்பத்தைச் சார்ந்தவன். அதி
மதிப்பென் பெற்று திறமையி
காரணமாக இக் கல்லூரியில் சேர்ந்தா
கணேஷும், ராஜாவும் சிறுவய
முதற்கொண்டே கும்பகோணம் அரு
லுள்ள வலங்கைமானில் ஒன்றாக
படித்து ஒன்றாக வளர்ந்தவர்கள்.

`கணேஷ்.. கணேஷ்....' என்
கூப்பிட்டபடியே தடதடவென்று அறை
கதவைத் தட்டினான் ராஜா. பரட்டை
தலையுடன், முகத்தில் மூன்று நா
தாடியுடன் ராஜாவைப் பார்த்தது



டி. ஆர். கணேச

ணேஷ் சற்றே பின் வாங்கினான். என்னாச்சு உனக்கு. இங்கு வந்ததி ருந்தே உன் நட்பு பணக்காரப் பயன்களைச் சுற்றியே இருந்ததே இப்ப எப்படி என் ஞாபகம் வந்தது" என்றான் கணேஷ்.

தன் கருத்திலேயே குறியாயிருந்த ராஜா, கணேஷ் கூறும் மற்ற விஷயங் களைக் குறித்துக் கவலைப்படாமல், `சரி உனக்கு `பிசிக்ஸ்' புக் வேணுமா? பரீட்சைக்கு மிகவும் உபயோகமாக இருக்குமே', என்றான்.

`இருந்தால் நல்லதுதான். ஆனால் என்னிடம் அதை வாங்கத் தேவையான பணம் இல்லை. ஸ்காலர்ஷிப் பரீட்சைக்குப் பணம் கட்டியது போக ரூ.200தான் தேறும். இன்னும் ஒரு மாதத்திற்கு வீட்டிலிருந்து பணம் எதிர்பார்க்க முடியாது! என்ன செய்வது' என்றான் கணேஷ்.

`உனக்குத் தேவைன்னா நான் அரேஞ்ஜ் செய்கிறேன். ஏன்னா நீ நம்ப ஊர்க்காரன், நல்லா படிக்கிறே. உனக்கு ஒரு புத்தகம் வாங்கி உதவி செய்தால் எனக்கும் படிக்கிற ஆசை வளரலாம்.'

`என்னால் அந்தப் புத்தகத்திற்கான முழுத் தொகையும் கொடுக்க முடியாது. ஏதோ நூற்று ஐம்பதோதான் முடியும்' என்றான் கணேஷ்.

`சரி' சரி நான் ஏற்பாடு செய்கிறேன், என்று ஓட்டமும் நடையுமாக 'நாலெட்ஜ்' புக் ஷாப் நோக்கிச் சென்றான்.

நாலெட்ஜ் புக் ஷாப் அவ்வூரி லேயே மிகப் பெரிய பிரபலமான புத்தக விற்பனை நிலையம். அங்கு பல தலைப்புகளில் புத்தகங்கள் தனித் தனியே வகைப்படுத்தி அடுக்கி வைத்திருப்பதைக் காணவே ஒருமுறை ஒவ்வொருவரும் வந்து விட்டுப் போக வேண்டும். அதுவும் திரு.சந்திரசேகர் இதன் முதன்மை அதிகாரியாகப் பொறுப்பேற்ற ஆறுமாத காலத்திற்குள் இந்நிறுவனத்தின் விற்பனை பன்மடங்கு உயர்ந்தது. அருகிலுள்ள கல்லூரிகளின் தேவைக்கேற்ப அனைத்துப் புத்தகங் களையும் அவ்வப்போது பதிப்பாளர் களிடமிருந்து வாங்கி விடுவார். முக்கியமாக இதுமாதிரி புத்தக விற்பனை நிலையங்களில் சமூக விரோதிகளின் கையாடல் வெகுநேர்த்தியாக நடந்து விடும். அதைத் தடுக்க முதல் மாடியில் உள்ள தனது அறையை முழுக் கண்ணாடி அறையாக மாற்றி அங்கிருந்த படியே விற்பனைக் கூடம் முழுவதுமாகக் கண்காணிக்க வசதியாக ஆங்காங்கே வீடியோ காமெராக்கள் அமைக்கப் ஏற்பாடு செய்தார், சந்திரசேகர்.

ராஜா நேராக பிசிக்ஸ் பகுதிக்குச் சென்று ஒவ்வொரு புத்தகமாகப் பார்ப்பது போல் மெதுவாக நகர்ந்து தனக்குத் தேவையான புத்தகத்தின் அருகே வந்ததும் விற்பனைக் கூடம் முழுவதுமாக ஒரு நோட்டம் விட்டான். தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்பதை உறுதி செய்து கொண்டு மெதுவாக தனது பனியனுக்குள் புத்தகத்தைப் புகுத்தினான்.

ராஜா வந்ததிலிருந்தே தன்னுடைய மாடியில் கண்காணித்து வந்த சந்திரசேகர் மெதுவாகக் கீழிறங்கி ராஜாவிற்கு அருகே வந்து அவன் நகரும் முன் அவன் தோளில் கைவைத்து 'மிஸ்டர் உங்க பேர் என்ன?' என்றார்.

`என் பெயரா.... 'ராஜா' எஸ்.ராஜா. இங்கிருக்கும் பொறியியல் கல்லூரியில் படிக்கிறேன்' என்று பதைபதைக்கக் கூறினான்.

`எந்த ஊருப்பா உனக்கு?'

`வலங்கைமான்'

`அட நம்ப ஊரு. வா என் கூட வா' என்று தன் அறைக்கு அழைத்துச் சென்றார்.


வலங்கைமானில் தான் பிறந்து வளர்ந்தது. கும்பகோணம் காலேஜில் படிக்கச் சென்றது. அப்போது புத்தகத்திற்காக மிக கஷ்டப்பட்டது, பிறகு ஒருவர் தயவால் சென்னையிலுள்ள 'ராஜஸ்தான் அசோசியேஷன், மூலம் எல்லாப்புத்தகங்களையும் வாங்கிப் படித்துப் பட்டதாரியானது. அப்படி ஒருவர் தனக்கு உதவ முன்வரவில்லை யென்றால் தன் வாழ்க்கைத் தரம் எவ்வளவு மாறியிருக்கும் என்பன போன்ற கடந்த கால நிகழ்ச்சிகளை ஒரு கணம் எண்ணிப் பார்த்தார், சந்திரசேகர்.

செம்மையாக மாட்டிக் கொண்டோம். எப்படியாவது நம்ப ஊரு என்று கூறியதால் காலிலோ, கையிலோ விழுந்து மன்னிப்பு வாங்கித் தண்டனையிலிருந்து தப்பித்தால் போதும் என எண்ணினான் ராஜா.

அவர் அறையினுள் நுழைந்தவுட னேயே 'சார் என்னை மன்னிச்சுடுங்க சார். பரீட்சை அடுத்தவாரம், இந்தப் புத்தகம் கிடைத்தால் இன்னும் நல்லா பரீட்சை எழுதலாம்னு எடுத்துவிட்டேன். இப்ப இருக்கிற நிலையில் காசு கொடுத்து என்னால் புத்தகம் வாங்க முடியாது. என்னை போலீஸில் பிடித்துக் கொடுக்காமல் இப்புத்தகத்தை ஒரு வாரம் கடனாகக் கொடுத்தால் கூட போதும் படித்து விட்டு கட்டாயம் திரும்பக் கொடுத்து விடுகிறேன்' எனட் பொல பொலவென்று கண்ணீர் வடித்த அப்படியே சந்திரசேகர் காலில் விழுந்தான் ராஜா.

நாட்டுப்பற்று மாதிரி ஊர்பற்றையும், தான் புத்தகத்திற்காகப் பட்ட கஷ்டங் களையும், கண்ணீருடன் தன் காலைப் பிடித்த வண்ணம் விழுந்து கிடக்கும் ராஜாவையும் ஒருகணம் எண்ணினார் சந்திரசேகர், ஒரு பெரியவர் `புத்தகம் படிப்பதே குறைந்து வரும் இக்காலத்தில் புத்தகத்தைத் திருட வருபவர்களுக்கு புத்தகத்தைக் கொடுத்து உதவுவது நமது சமுதாயக் கடமையாகும்' எனக் கூறியதும் நினைவில் கொண்டார்.

`ராஜா கவலைப்படாதே', நான் உன்னை ஒன்றும் செய்யப் போவ தில்லை. இங்கு திருடவரும் எவரும் என்னிடமிருந்தும், தண்டனையிலிருந்தும் தப்பியதில்லை. இதுவரை திருடிய வர்கள் அனைவரும் சமூக விரோதிகள். திருடியதை அரை விலைக்கோ, முக்கால் விலைக்கோ விற்றுக் குடித்து விட்டுக் கொட்டமடிப்பவர்கள். ஒழுக்கமில்லாத வர்கள். ஆனால் நீ தமிழ்நாட்டி லிருந்து



இங்குப் படிக்க வந்தவன் என்ற காரணத்தினாலும், உன் வறுமையையும் கணக்கில் கொண்டு உனக்கு உதவ முன்வந்துள்ளேன். இனி ஏதாவது புத்தகம் தேவைப் பட்டாலும் என்னிடம் நேரிடையாகக் கேள். நானே உனக்கு உதவுகின்றேன்' என்று கூறிய வண்ணம் ராஜாவை எழுப்பி அவன் கையில் புத்தகத்தைக் கொடுத்தார். ஒரே நிமிடத்தில் தனக்கு வந்த அதிர்ஷ்டத்தை எண்ணி மகிழ்ந்தான் ராஜா. நன்றி கூறி விடைபெற்று ஹாஸ்டலை நோக்கி ஓடினான் ராஜா.

'கணேஷ்... கணேஷ்' இந்தா பிடி பிஸிக்ஸ் புத்தகம் என்று கூறி 150 ரூபாயை அவனிடத்தில் பிடுங்கியவாறு புதுப்பாடம் படிக்க காம்பௌண்ட் பின்புறம் நோக்கி ஓடினான். முன்
கூடியிருந்த கும்பலிலிருந்து `ரபே
உரக்க `வாடா டேய் மச்சி, நேற்றுவ
தண்ணிப்பாடம், இன்னிவிரு
பொட்டலம்! இந்தாபிடி ரூ.100 செ
என்று பொட்டலத்தைக்கை மாற்றின
இன்னும் சிலமணிநேரம், என் இன்
பொழுது கழிந்து விடும். அவர்களு
நாளை எப்படி விடியும்?

அளக்குங்கோல்

மு. துரைராசன்

அளவு என்ற அதிசயச் சொல் பல வகைகளிலும் பெரிதும் பயன்படுகிறது. நம் செயல்கள் பெரும்பாலானவற்றில் அது தொடர்பு கொண்டுள்ளது. எத்தனை, எப்போது, எவ்வளவு என்ற வினாச் சொற்கள் உபயோகப்படுத்தும் போது, ஏதாவது அளவு ஒன்று பேசப்படுகிறது. சற்றே சிந்தித்துப் பாருங்கள்; அளவு என்று ஒன்று இல்லாதிருந்தால் உலகம் தற்போது அடைந்திருக்கும் முன்னேற்றத்தை அடைந்திருக்க முடியுமா?

ஆதியிலிருந்தே அளவு பயன்பட்டு வருகிறது. 'அளவுக்கு மிறினால் அமிர்தமும் நஞ்சு' என்று முதுமொழியிலுள்ள அளவு உணரப்பட்டுள்ளது. நாளாக, ஆக அது விரிந்து, பலவாறாகப் பிரிந்து, நுட்பமாகக் கூறிடப்பட்டு இன்று பல நூறு அளவைகள் செயல்படுகின்றன. நீட்டலளவை, நிறுத்தலளவை, முகத்தலளவை போன்ற அளவைகள் கண்ணுக்குத் தெரியும் பரிணாம வளர்ச்சியுள்ள பொருள் களை அளக்க உதவுகின்றன.

அறிவியல் வளர்ச்சியடைய அடைய, கண்ணுக்குத் தெரியாத, ஆனால் உணரக்கூடிய ஒலியும், மின் சக்தியும் மற்றும் கண்ணுக்குத் தெரியும் நுண்ணிய ஒளி போன்ற ஆற்றல்களும் இப்போது அளக்கப்படுகின்றன. இவை தவிர பற்பல பௌதிக, ரசாயன, பொருளாதார அளவுகளும் மற்றும் மருத்துவத்துறையில் ரத்த ஓட்டம், ரத்த அழுத்தம், சுவாசிக்கும் திறன் போன்றவை நுண்ணிய, நுட்பமான நூதனக் கருவிகள் மூலம் துல்லியமாக அளக்கப்படுகின்றன.

ஆனால் இன்பம், துன்பம் போன்ற பல அருவ உணர்ச்சிகள் அளக்க முடியாவிட்டாலும் பெரிது, சிறிது, கூடுதல், குறைவு என்று எளிதில் மதிப்பிடப்படுகின்றன. இத்தகைய மதிப்பும் பிழைபடும் வகையில் அவ்வுணர்ச்சிகளை ஓரளவிற்குச் சிலரால் அடக்கவும், மாற்றவும், மறைக்கவும் முடிகிறது. அப்போதுகூட அத்தகைய உணர்வுகள் மிகச்சிறந்த குறிப்பறியும் திறனும் மதிநுட்பமும் உடையவர்களால் முகம் நோக்கி "அடுத்தது காட்டும் பளிங்குபோல்" உணர்வுகளை உணர முடிகிறது.

உள்ளத்துணர்வைத் தெரிதல் மிகமிகக் கடினம். அவ்வாறு அறியக்கூடியவர் உலகில் மிகச்சிலரே. அவர்கள் உலகிற்கே அணிகலன் போலாவார் என்பதை,

கூறாமை நோக்கிக் குறிப்பிடுவான் எஞ்ஞான்றும்

மாறாநீர் வையக்கு அணி – என்று குறள் கூறுகிறது.

மற்றொரு குறள் உள்ளத்தை உணர வல்லவரை தெய்வத்துக்கு ஒப்பாகக் கருதப்பட வேண்டுமென்று கூறுகிறது.

'ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்

தெய்வத்தோடு ஒப்பக் கொளல்'

ஒன்றும் பேசாமலே மற்றவர் எண்ணத்தை அறிகிறவர் (கூறாமை நோக்கிக் குறிப்பறிவான்) – குறிப்பினால் உள்ளக்குறிப்பை உணரவல்லவர் (குறிப்பிற் குறிப்புணர்வார்) முகம் நோக்கி ஒருவருடைய உள்ளக்குறிப்பை உணர வல்லவர் (முகம் நோக்கி நிற்க அமையும் அகம் நோக்கி உற்ற துணர்வார்) – ஆகியோரின் உள்ளத்துணர்வை அளக்கப்பயன்படுத்தும் அளக்குங்கோல் கண்களே அல்லாமல் வேறில்லை என்று கூறுகிறார் வள்ளுவர்.

நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால்

கண்ணல்லது இல்லை பிற

அளக்க இயலாது என்ற உள்ள உணர்வுகளை இங்கிதம், பாவனை, பேச்சு போன்றவற்றை அறிந்து அளக்குங் கோலாக அமைவன கண்களே.

ஒருவர் பேசுவது மெய்யா, பொய்யா என்பதை உணர்த்தும் Lie Detector எனும் பொறியால் தற்போது உள்ளத்தையும் உணர முடிகிறது. உள்ளத்தையும் உணர முடியும் என்ற கருத்தை 2000 ஆண்டுகட்கு முன்னரே, கண்களைக் கொண்டும் கணித்துவிடலாமென்ற வள்ளுவரின் கூற்று வியப்பிற்குரியதாகிறதல்லவா?

உணர்வுகளை அளப்பதற்குக் கண்களை அளவுகோலாக நிர்ணயித்த வள்ளுவர் அருவமான நாட்டு இயல்புகளையும் அளக்க முடியுமென்றும் அதற்கான அளவுகோலையும் குறிப்பிடுகிறார்.

நண்பர், அருமை நண்பர், அன்பு நண்பர், இனிய நண்பர், நல்ல நண்பர், ஆப்த நண்பர், ஆருயிர் நண்பர் என்று பலவிதமாகக் குறிப்பிடப்படுகின்றனர்.

சில வேளைகளில் நட்பு ஆழமானது என்று கூறப்பட்டாலும் எத்தனை ஆழமானது என்று விளக்கப்படுவதில்லை. அதே போன்று நட்பு நெருக்கமானது. பிரிக்க முடியாதது என்று கூறப்பட்டாலும் அதை எடைபோட்டு விவரிக்கப்படுவதில்லை.

ஆனால் வள்ளுவர், நட்பை எடைபோட்டுவிடலாம், நீட்டி அளந்து விடலாம் என்கிறார்.

கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை

நீட்டி அளப்பதோர் கோல்.

ஒருவரிடம் செல்வம் மிகும் போது அவர் நட்பு விரிகிறது. செல்வம் குறைகிறபோது நட்பு சுருங்குகிறது. ஒருவர்

கேடுற்ற காலை நட்பின் வரம்பு குறைகிறது. சில நண்பர்கள் அவரைக் கைவிட்டு விடுகின்றனர். சில நண்பர்களின் செயல்கள் விபரீதமாக மாறுகின்றன; மிகவும் வேறுபடுகின்றன; இவ்வாறு வேறுபடும் செயல்களைக் கொண்டு அவரது நட்பின் தரத்தை அறிந்துவிடலாம் என்று அறிவிக்கிறார் வள்ளுவர்.

சாலையில் நண்பர்கள் நால்வர் நடந்து சென்றனர். ஒரு முச்சந்தி வளைவில் வேகமாக வந்த பேருந்து எதிர்பாராத விதத்தில் ஒருவர் மீது மோதிச் சென்றது. அவர் பலத்த காயமுற்றார். அருகிலிருந்த மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஒரு நண்பர் 'இதில் ஈடுபட்டால்' பின்னர் காவல் நிலையத்திற்கும், நீதிமன்றத்திற்கும் அடிக்கடி செல்ல வேண்டியிருக்கும். நமக்கேன் இந்த வம்பு? என்றெண்ணி மற்றவர்களிடம், "எனக்கு மிக அவசரமான வேலை ஒன்று உள்ளது. நான் அதைக் கவனிக்கக் கட்டாயம் செல்ல வேண்டும். நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள். நான் நாளை வந்து பார்க்கிறேன்" என்று கூறி விடைபெற்றார்.

மற்ற இருவரும் காயமுற்றவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்தனர். அவருக்கு சிகிச்சையின் போது ரத்தம் தேவைப்படுமென்று மருத்துவர் கூறினார். நல்லவேளை நண்பர்களின் ரத்த இனமும் காயமுற்றவரின் ரத்த இனமும் ஒன்றாக இருந்தது. எனவே அதனை இரு நண்பர்களும் பகிர்ந்து கொள்ளலாமென்று எண்ணிய போது ஒருவர் "நான் இருக்கிற நிலையில் என்னால் ரத்தம் கொடுக்க இயலாது. நண்பர் சற்றுத் தெம்பாகவே உள்ளார். அவரை நான் மாலையில் வந்து பார்க்கிறேன்" என்று விடைப் பெற்றார்.

எஞ்சியிருந்த நண்பர் தன் சொந்த அலுவல்களையும் கவனியாது தள்ளிப்போட்டுவிட்டு நண்பரின் அருகிலிருந்து அவர் சிகிச்சை முடியும் வரை கவனித்துக் கொண்டார்.

மேற்கூறிய மூன்று நண்பர்களின் தரத்தை (இயல்புகளை) முதல், இடை, கடை என்று இலகுவாக அளந்து விடலாமல்லவா? இவ்வாறு ஒருவர் துன்பத்தால் துயருறும்போது, அத்துன்பத்தின் தரம், தன்மைகளுக்கேற்ப அதைப் போக்குவதற்கு நண்பர்கள் எடுத்துக் கொண்ட, ஏற்றுக்கொண்ட, பொறுப்பின் விளைவு, துணிவு, பொறுமை, ஊக்கம், கவனம், செலவு முதலியவற்றை தனித்தனியாகவோ அல்லது ஒட்டு மொத்தமாகவோ கவனித்து நட்பியல்புகளை அளவுகளாகவும் கேட்டைக் கோலாகவும் அமைத்துள்ள பாங்கு ஆச்சர்யமே.

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே அருவ உணர்வுகளையும் ஆராய்ந்து அவற்றையும் அளக்க முடியுமென்று அறிவுரைத்த வள்ளுவரின் திறன் வியப்பிற்குரியது; போற்றற்குரியது, பாராட்டுக்குரியதாகும்.

இன்பம் எது?



கவிஞர் கா. வேழவேந்தன்

தொட்டிலிலே அரும்பாகக் கிடந்த நேரம்
தூங்க அன்னை 'ஆராரோ' இசைத்த தின்பம்!
சிட்டைப்போல் கிளையினின்று மடுவில் தாவி
சிறுவயதில் 'நீந்திய'தும் இன்பம்! தேக்குக்
கட்டிலிலே பருவத்தில் மங்கை தந்த
கன்னலினைப் 'பருகிய'தும் இன்பம்! பின்னால்
கட்டவிழ்ந்த நரைவயதில் திண்ணை மீது
'கதைபேசல்' தனிஇன்பம்! இதுதான் வாழ்க்கை!

துப்பாக்கிச் சத்தத்தில் இன்பம் கண்ட
சுயவெறியன் இட்லரினை உலகம் தூற்றும்!
எப்போதும் மறுகன்னம் காட்டல் இன்பம்
எனச்சொன்ன இயேசுவினை பூமி போற்றும்!

செப்பாலே உருவான காசை எண்ணிச்
சேமித்தல் இன்பமென்றோன் மண்ணாய்ப்போனான்!
இப்புலவன் வறுமைக்குத் தலையைத் தந்தேன்
எனச்சொன்ன 'குமணவள்ளல்' நெஞ்சில் நின்றான்!

கூகைக்கோ 'கும்மிருட்டே' இன்பம்! அஃதைக்
கொத்துகின்ற காக்கைக்கோ 'பகல்'தான் இன்பம்!
ஈகைகொன்ற திருடருக்கோ 'கள்'வே இன்பம்!
எடுத்தளிக்கும் வள்ளலுக்கோ 'அற'மே இன்பம்!
தோகை மயில் நடனமிடக் 'கார்'தான் இன்பம்!
சோலையில் வாழ் மாங்குயிற்கு 'வேனில்' இன்பம்!
ஆகமொத்தம் ஒன்றுக்கோ ஒன்றில் இன்பம்!
அடுத்தவர்க்கோ அது துன்பம்! விந்தைச் சட்டம்!

சேற்றிலுள்ள தவளையதன் 'புலம்ப'லில்தான்
சீறிவரும் பாம்புக்கே இன்பம்! வானக்
காற்றுதவழ் மணிப்புறாக் 'குருதி'யில்தான்
கழுகுக்கே நல் இன்பம்! அதுபோல் துள்ளி
ஆற்றோடும் சிறு கெண்டை 'அழுகை'யில்தான்
ஆவென்று வாய்திறக்கும் வாளைக் கின்பம்!
மாற்றாரின் விழி நீரில் இன்பங்காட்டும்
மாக்கொடிய விதிமுறைகள் படைத்தோன் எங்கே?



கூத்துப்பட்டறையின் 'காண்டாமிருகம்' மேடை நாடகத்தில் ஒரு காட்சி. கதாநாயக–நாயகியாக ஜெயகுமார், கலைவாணி.

வெற்றியைப் பெற்றிருக்கிறார் திரு. முத்துசாமி.

இந்த வெற்றிக்குப் பின்னணியில் இருப்பவர் பழம்பெரும் கூத்துக் கலைஞருமான, பெரியவர் புரிசை திரு. நடேச தம்பிரான் அவர்கள்.

"அப்பாவும்–பிள்ளையும்"; "நாற்காலிக்காரர்" ஆகிய மேடை நாடகங்களையும் எழுதி, தயாரித்து, இயக்கி வெற்றி கண்ட வேகத்தில், அடுத்தடுத்து "சுவரொட்டிகள்"; "தெனாலிராமன்" அடங்கலாக பல்வேறு நாடகங்களை எழுதிக் குவித்துள்ள திரு. முத்துசாமி, "இங்கிலாந்து" என்கிற மேடை நாடக ஆக்கம், இயக்கம் காரணமாகவும் இந்திய நகரங்கள் அனைத்திலும்,

கூத்துப்பட்டறை இயக்கமும் நிர்வாகமும்!

ஏ.ஆர். ராஜாமணி

"காலம் காலமாக" என்கிற தலைப்பில், 1969–ல் பிரபல, மூத்த தமிழ் எழுத்தாளரான திரு.பி. முத்துசாமி ஒரு மேடை நாடகம் எழுதினார்; தயாரித்தார். அதன் வெற்றியே, பின்னாளில் அவரை முழுநேர நாடகப் படைப்பாளியாக, இயக்குநராக, தயாரிப்பாளராக உருமாற்றி, உயர்த்திவிட்டது!

சரியாக, இருபதாண்டுகளுக்கு முன்பு, 1977–ல், 'கூத்துப்பட்டறை' என்கிற இயக்கத்தைத் தோற்றுவித்து, அதன் மூலம், நசித்துக் கொண்டிருந்த, தமிழகத்தின் மிகத் தொன்மையான கிராமிய இசை + நடிப்புக் கலையானத் தெருக்கூத்தை, கூன் நிமிரச் செய்து, சர்வதேச நாடுகளும் ரசித்துப் பார்க்கும் வேட்கையை ஏற்படுத்துவதில் நிகரற்ற

கூத்துப்பட்டறையின் 'தெருக்கூத்து' நடிகர்கள் – திரை விலகக் காத்திருக்கிறார்கள்.





கூத்துப் பட்டறையின் மாளிகையில் தெருக்கூத்தில் நாடக வடிவ உத்திகளைப் பயில வந்திருந்த கொலம்பியா நாட்டின், நாட்டுப்புறக் கலைஞரொருவர் கூத்துப் பட்டறைக் கலைஞர் பட்டாளத்துடன்!

அற்புதமான மேடை நாடக உருவை தருவதிலும் ஒப்பாரும் மிக்காருமில்லாமல் அடர்த்தியா புகழுடன் திகழ்கிறது.

ஒரு நாடு முன்னே வேண்டுமானால், அதற் அடிப்படையாக கிராமங்கள்த முதலில் எழுச்சியும், வளர்ச்சியும் வேண்டும் என்பது உலகளாவ சமுதாய மேம்பாட்டு நியதி. ந காந்தியடிகளின் குரலும் இதைத்தா ஒலித்தது. தனி மனித ஒழுக்கத்திற் கிராமங்களே ஆதி நாட்கள ஆதாரமாக விளங்கியது. இ வகையில், தெருக்கூத்துக்களி மூலமாகப் போதிக்கப்பட்ட, பண்ன இதிகாசப் போதனைக முக்கியத்துவமிக்கதாக, மானுடத்தி அறநெறிச் சாரங்களின் ஆணிவேர அமைந்திருந்ததும் நிஜம்.

என்றாலும், பார விடுதலையடைந்ததைத் தொடர்

சர்வதேச நாடுகள் பலவற்றிலும் பெரும்புகழ் ஈட்டியவர். சிறுகதை எழுத்தாளராகப்புகழ் பெற்றிருந்த திரு. முத்துசாமி, இப்போது உலகத் தரத்திலான மேடை நாடக ஆசிரியராகவும், இயக்குநராகவும் மிகப்பரவலாக அறியப்படும் கலைஞர். அவரது புகழார்ந்த 'கூத்துப்பட்டறை', சென்னையில் கொட்டிவாக்கம் பகுதியில் இயங்குகிறது. நாடகப்பயிற்சி நாள்தோறும் நடத்தப்படுவதுடன், நாடக அரங்கேற்ற நிகழ்ச்சிகளுக்கான ஒத்திகைகளும் முறை தவறாமல் நடக்குமிடம் அது. திருமதி ருக்மணிதேவி அருண்டேல் அவர்களின் கலாக்ஷேத்திரம், அடையாறில் எவ்வாறு நாட்டிய, இசைக்கலைகளின் சம்பிரதாயம் வழுவாத பயிற்சிக்குச் சர்வதேசப் புகழ்பெற்றுள்ளதோ, அதற்கு நிகராக, அடையாறுக்கு அருகேயுள்ள, கொட்டிவாக்கம் கூத்துப்பட்டறையும், கிராமிய மரபுகள் வழிவந்த, பண்டைய தெருக்கூத்தைப் பேணுவதுடன், அவற்றிற்குக் காலதேச வர்த்தமான மாறுதல்களுக்கும், ரசனைகளுக்கும் ஏற்றவாறு, பல்வேறு உத்திகளில், வண்ணக் கலவைகளில், வட அட்லாண்டிக் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும் ஆர்வத்துடன் ரசித்துப் பார்க்கும் வகையில் மிக

புரிசைக் கிராமத்தில் பெரியவர் நடேச தம்பிரான் இல்லப்பகுதியில் தெருக்கூத்து நாடகம் ஒன்று அரங்கேறுவதற்கான ஆயத்தங்கள்.





'பாஞ்சாலி சபதம்' தெருக்கூத்து நாடக வடிவில் ஒரு காட்சி.

நாட்டின் அனைத்துத் துறைகளிலும் ஒரு தொய்வும், கட்டுப்பாடற்ற போக்கும், நல்ல அம்சங்களை ஒதுக்கித் தள்ளும் விடலைத்தன மானப் போக்கும் பரவி, அதிகரித்து வந்ததைப் போலவே, கிராமியக் கலைகளின் விஷயத்திலும் நேர்ந்தது!

ஒருபுறம், கலைகளை வளர்க்கும் நோக்கத்தில் மத்திய—மாநில அரசுகள் ஆண்டுதோறும் அள்ளித்தரும் மான்யத் தொகைகள், மற்றொரு புறத்தில் அவற்றைத் தமது அகட,விகட சாமர்த்தியங்கள், பதவிச் செல்வாக்குகள் மூலம் தம்முடையப்



கூத்துப் பட்டறைக்கு அண்மையில் → விஜயம் செய்திருந்த ஸ்வீடன் நாட்டுப் பாமகியும், நாடக நடிகையுமான நங்கை.

'பினாமி' கலை நிறுவன அமைப்புகளுக்கு அபகரித்துக் கொள்ளும் அசகாய சூரர்கள்! அதனால், அரசினரின் உதவித் தொகை எதுவும் உண்மையான கலை அமைப்புகளுக்கும், பாரம்பரியக் கலைஞர்களுக்கும் கிட்டுவது அரிதாகிப்போன அவலம்! இன்றைக்கும் இந்த நிலை தொடர்வது மகா கேவலம்!

இன்றைக்கு நாம் காணும் திரைப்படங்கள், நாடகங்கள் ஆகிய அனைத்திற்கும் அடிப்படையான, பழம்பெரும் கலை, கிராமியத் தெருக்கூத்துக்கள்தாம் என்பது உணரப்பட வேண்டிய உண்மை + அனுபவம்! இதற்காகத்தான், 'கூத்துப்பட்டறை' இயக்கத்தைத்



பெரியவர் புரிசை கண்ணப்பத் தம்பிரான் 'தெருக்கூத்து' மேடை நாடகக் கலைஞர்களுக்கு உடை அலங்கார ஒப்பனைகளில் கவனம் செலுத்துகிறார்.

தொடங்கினேன்," என்கிறார் திரு. முத்துசாமி.

நல்லது. நிர்வாக இயக்கத்திற்குப் பொருளாதார வசதிக்கு என்ன ஏற்பாடு?

"எங்களுக்குப் புரவலர் என்பது ஃபோர்டு பவுண்டேஷன்" என்று பதிலளிக்கிறார் அவர். அது போதுமா? "மேலும் பலவகைகளில், பற்பல திசைகளில் முயன்று கொண்டிருக்கிறோம். இந்திய அரசின் கலாசாரத் துறையின் கடைக்கண் விழுந்தால் கூடப் போதும். சமாளித்துக் கொள்வோம்" என்கிறார் திரு. முத்துசாமி.

'கூத்துப்பட்டறை' இயங்கும் கொட்டிவாக்கம் மாளிகையில் நடிகர்களுக்கான பயிற்சிக் கூடமும், நாடகத் தயாரிப்புத் தொடர்பான அறிஞர்களின் விவாத–ஆலோசனைகளின் ஒலிப்பதிவுக் கூடமும், நாடகத்துறை தொடர்பான மிகப்பிரம்மாண்டமான நூலகமும், மேடை நாடகத்திற்கான ஒலி, ஒளி அமைப்பு சாதனங்கள், நாடகப் பாத்திரங்களின் உடை மற்றும் ஒப்பனை அணிகலன்களின் விசாலமான கிடங்கும், கம்ப்யூட்டர் உள்ளிட்ட நவீன தொலைத் தகவல் தொடர்பு சாதனங்களும் கொண்ட மிக நேர்த்தியான அலுவலகமும் உள்ளது. இவை தவிர, சர்வதேசங்களிலுமிருந்து, கூத்துப்பட்டறைக்கு வந்து சில மாதங்கள் தங்கியிருந்து, நமது தெருக்கூத்தின் நாடக வடிவ அமைப்புக்களைப் பயிலவும், அதே போல், தங்களுடைய நாட்டின் நவீன,

கூத்துப் பட்டறையின் நிறுவனர் இயக்குநர் திரு.பி.முத்துசாமி.



நாட்டுப்புற மேடை மற்றும் வீதி நாடக உத்திகளைப் பயிற்றுவிக்கவும் முனையும் கலைஞர்கள் தங்கும் வசதிக்காக, முற்றிலும் நவீனமான சில அறைகளும் உண்டு. அந்த விருந்தினர் அறைகளில், தம்பதியரான கலைக் குடும்பம் தங்கியிருப்பதற்கு ஏற்ற வசதிகளும் இருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும், மிகச் சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படும் சத்துணவும் வழங்கப்படுகிறது.

உலகிலேயே, மேடை நாடக வடிவில் தமிழில்தான் இந்த நாடகங்கள் அரங்கேறியுள்ளன என்பதும், தென் அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இந்த மொழி பெயர்ப்பு நாடகங்கள் மேடை நாடகமாக நடிக்கப்பெற்று, அமோக ஆதரவைப் பெற்றுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கவை.

நடிகர்கள் பசுபதி, ஜெயகுமார் மற்றும் புரிசை நடேச தம்பிரானின் சில வாரிசுகள் என, ஏறத்தாழ இருபது பேர் கொண்ட நடிகர் குழு, கூத்துப் பட்டறையின் புகழுக்கு, ஒவ்வொரு நாடகத்தின் மூலமும் அபார, அழியாப் புகழை அள்ளிக் கொண்டு வந்து சேர்க்கிற அனுபவம் பெருமிதம் தருவதாகும்!

திரு. நடேச தம்பிரான், அவரது மகனும் தெருக்கூத்துக் கலைஞருமான திரு. காசி உள்ளிட்ட பல்துறைக் கலை நிபுணர்கள் ஏழெட்டு பேர் கொண்ட ஒரு குழு, 'கூத்துப் பட்டறை'யின் செயல்பாட்டு நிர்வாகக் குழுவில் உள்ளது. இவர்களின் பண்பட்ட, அனுபவச் செறிவு மிக்க வழிகாட்டுதலில் 'கூத்துப்பட்டறை', அதனுடைய மேடை நாடகங்களிலும், நிர்வாகத்திலும் "தொட்டது துலங்கும்" என்பதை மெய்ப்பித்து வருகிறது. துடிப்புமிக்க இளைஞரான திரு. பாஸ்கர், கூத்துப்பட்டறையின் தலைமை நிர்வாக இயக்குநராக

ஆதி பகவன்! சோதி பகவன்!

ஆண்டாள் பிரியதர்ஷினி

ஆயிரம் கோயில்! ஆயிரம் தெய்வம்!
பாயிரம் பாடித் தொழுது வந்தேன்!
ஆயிரம் உருவம்! ஆயிரம் நாமம்!
கோயிலில் இதையே கண்டு வந்தேன்!

பலப்பல யாகம்! பலப்பல யோகம்!
சிந்தையில் தெளிவு கிடைக்க வில்லை!
பூசைகள் செய்தேன்! புண்ணியம் என்றேன்!
பூரணனை நான் பார்க்க வில்லை!

எத்தனை சண்டை! எத்தனை பூசல்?
இறைவன் பெயரால் தினந் தோறும்!
இவனே பெரியவன்! இவனே சிறியவன்!
யுத்தங்கள் உண்டு இனந் தோறும்!

கோயில்கள் எங்கும் தீபம் எரியாமல்
தீப்பந்தம் எரியும் நிலை எதற்கு?
சோதரர் வடிக்கும் குருதியும் கண்ணீரும்
எண்ணெயாய் எரிந்தால் சிலை எதற்கு?

உயிர்ப்பலி உண்டு! வன்முறை உண்டு!
கோயில்கள் என்ன போர்க் களமா?
அஹிம்சையும் அன்பும் கோயிலில் இல்லை.
தெய்வங்கள் தீவிர வாதி களா?

இறைவன் எந்த அறையிலும் இல்லை!
வழிபடும் உருவச் சிறையிலும் இல்லை!
இறைவன் என்பவன் இயற்கை வடிவம்!
உலகம் எல்லாமே அவனின் படிவம்!

காரிருள் நீக்கும் கதிரவன் தெய்வம்!
காகம் என்னும் தோட்டியும் தெய்வம்!
பேரருள் பொழியும் மழையும் தெய்வம்!
பொய்ம்மை இல்லாத உண்மையே தெய்வம்!

கள்ளம் அறியாக் குழந்தைகள் தெய்வம்!
உள்ளம் உருக்கும் அமைதியும் தெய்வம்!
நீயும் தெய்வம்! நானும் தெய்வம்!
வாலைக் குழைக்கும் நாயும் தெய்வம்!

வெட்ட வெளியில் வீசும் காற்றில்
சொட்டும் நிலவின் சுந்தர ஒளியில்
ஒற்றை தீபத்தின் ஒளிச்சுடர் அசைவில்
எல்லா மதமும் சிரிப்பது தெரியும்!

எந்தஓர் மதமாய் இருப்பினும் என்ன?
உருவங்கள் மறப்போம்! இறைவன் தெரியும்!
சின்னங்கள் மறப்போம்! சிந்தனை தெளியும்!
பின்னங்கள் இல்லாத பூரணன் புரியும்!

வாய்த்திருப்பதும், தில்லிப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராகவுள்ள, பேராசிரியர்.சி. ரவீந்திரன் அவர்கள், 'கூத்துப்பட்டறை' மேடை நாடகங்களுக்கான ஒளி, ஒலித்துறையை நிர்வகிப்பவராகவும் அமைந்துள்ளதும், இதே போல், பிரபல மேடை நாடக இயக்குநர்களான, பேராசிரியர் ராமானுஜம் மற்றும் கருஞ்சுழி ஆறுமுகம் . உள்ளிட்ட மேடை நாடக ஜாம்பவான்களின் ஆலோசனைத் தோழமையும், ஒத்துழைப்பும் சேர்ந்திருப்பது திரு.ந. முத்துசாமி அவர்களின் பிற அதிர்ஷ்ட அம்சங்கள்!

பிரசன்னா ராமஸ்வாமியும்,அறிஞர் டாக்டர்.வி.ஐ. சுப்ரமண்யமும், பிரகாஷ் ஸ்வாமியும், வழக்கறிஞர் கே.எஸ். நடராஜனும், திருமதி. சாரதா ராமநாதனும் தமிழகத்தில் பெரும்புகழ் பெற்றப் பிரமுகர்கள். இவர்கள் அனைவருமே, 'கூத்துப்பட்டறை'யின் நிர்வாகக் குழுவில் இடம் பெற்றுள்ளனர் என்பது, இந்த அமைப்பின் தனித்துவ மிக்க சிறப்பிற்கும், கௌரவத்திற்கும் மகுடம் சூட்டிய மாதிரி!

திறமான புலமையெனில், அதை வெளிநாட்டார் மோப்பம் பிடிக்கிற மாதிரி, மோகிக்கிற மாதிரி, உயர்தரமான ரசனையும், பயனும் பொருந்தியிருக்க வேண்டும். இதற்கு, இன்றைய தேதியில் தமிழ் நாடக மேடையைப் பொறுத்த மட்டில், 'கூத்துப்பட்டறை'யை அடித்துக் கொள்ள ஆள் இல்லை என்பதே பிரத்யட்ச நிலவரம்!

இந்த அளவிற்குக் கிராமியக் கலையான தெருக்கூத்திற்குச் சர்வதேச அளவில் மேடை நாடக உருவில், ஓர் உயிர்ப்பையும், கீர்த்தியையும் தேடித் தந்திருக்கிறார் திரு.பி. முத்துசாமி அவர்கள். அடிப்படையில் அவர் ஒரு தமிழ்ச் சிறுகதைப் படைப்பாளி என்கிற நினைவும் சேர்ந்து தமிழ் இலக்கிய உலகம் அவர் மீதும், அவரது 'கூத்துப்பட்டறை' இயக்கத்தின் மீதும் அளப்பரிய நேசம் பாராட்டுவது பொருத்தமே!

மறக்கக் கூடாதவர்கள் - 23

உத்தமர் உபயதுல்லா

கே.சி.லட்சுமிநாராயணன்

"தலைவர் உங்களை வரச் சொன்னாங்க" என்று தமிழ்நாடு காங்கிரஸ்கமிட்டி அலுவலக நிர்வாகி ஒருவர் கூறியதும், அது ஒரு வழக்கமான அழைப்பு என்று கருதிச் சென்றபோது, தலைவர் காமராஜ் அவர்களின் முகத்தைப் பார்த்ததும்தான் இந்தக் கட்டுரையாளருக்கு இலேசான திகைப்பு ஏற்பட்டது.

"போளூரில் என்ன நடந்தது?" என்று தலைவர் கேட்டார்.

இந்தக் கட்டுரையாளர் பதில் சொல்லவில்லை.

ஒரு பேச்சாளரின் பெயரை அவர் குறிப்பிட்டார். "அந்த ஆளை ஏன் மேடையிலே ஏத்தினீங்க? அவர் முஸ்லிம்களுக்குத் தேசபக்தி குறைவுன்னு பேசினாராமே? அவருக்கு என்ன தெரியும்? அப்படியெல்லாம் பேசலாமா?" என்று கேள்விகளை அவர் வீசினார்.

இந்தக் கட்டுரையாளர் மவுனமாகக் கேட்டுக் கொண்டு இருந்தார்.

"நம்ம நாட்டிலே தேசிய முஸ்லிம்களுக்கு ரொம்ப சிக்கலான நிலைமை ... முஸ்லிம் லீக்காரங்க அவங்களைத் துரோகிங்கறாங்க. காங்கிரஸ்காரங்களும் அவங்களை முழுக்க நம்ப மாட்டேன்றாங்க. அவங்க என்ன செய்வாங்க?" என்று தலைவர் தொடர்ந்து கேட்டார்.

"வேலூர் உபயதுல்லா இப்படித் தான் காலம் பூரா அவதிப்பட்டாரு" என்று அவர் குறிப்பிட்டதும், இந்தக் கட்டுரையாளர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

அடுத்த பத்து, பதினைந்து நிமிடங்களில் ஜனாப் உபயதுல்லா பற்றிய பல நுட்பமான செய்திகளைத் தலைவர் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

1956ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்த உரையாடல் நடந்தது. அப்போது காமராஜ் அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்தார்.

வடார்க்காடு மாவட்டம் வேலூர் நகரில் மதார் பாஷா என்ற பிரபல பாக்கு வியாபாரி இருந்தார். அவரது புதல்வராக 1905ஆம் ஆண்டு மே மாதம் 2ஆம் தேதியன்று உபயதுல்லா பிறந்தார்.

மிக இளம் வயதிலேயே அவர் இந்திய விடுதலை இயக்கத்தில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். அவர் 16 வயது இளைஞனாக இருந்தபோது கிலாபத் இயக்கம் நடந்தது. உபயதுல்லா தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, முஸ்லிம்களிடையே பெரும் எழுச்சியை ஏற்படுத்தினார்.

நாகபுரி கொடிப்போராட்டம் நடந்தபோது உபயதுல்லா பதினெட்டு வயதுக்காளை. குடும்பத்தினரின் கவலை, உறவினர்களின் எதிர்ப்பு ஆகியவற்றை ஒதுக்கிவிட்டு அந்தப் போராட்டத்தில் சிறை சென்றார்.

சைமன் கமிஷன் எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது, வேலூரில் போலீஸ் அதிகாரியின் துப்பாக்கி மிரட்டலுக்கு அஞ்சாது, தமது சட்டையைக் கிழித்து மார்பைக் காட்டிய மாபெரும் வீரர் அவர். அப்போதும் அவர் சிறையில் தள்ளப்பட்டார்.

1930ஆம் ஆண்டு சென்னையில் ஆந்திரச் சிங்கம் பிரகாசம், வீராங்கனை துர்காபாய் ஆகியோர் தலைமையில் நடந்த உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்திலும், 1932ஆம் வருடச் சட்டமறுப்பு இயக்கத்திலும், 1940ஆம் வருட தனிநபர் சத்தியாக்கிரகத்திலும் உபயதுல்லா பங்கு கொண்டு சிறை சென்றார்.

வடார்க்காடு மாவட்டத்தில் வெளிநாட்டுத் துணிகளை விற்ற கடைகளுக்கும், மதுக்கடைகளுக்கும் எதிராக மறியல் கிளர்ச்சியினை உபயதுல்லா மிகவும் வெற்றிகரமாக நடத்தினார். இதற்காக மறியல் குழுக்களை அவர் அமைத்தார்.



மது குடிப்பதற்கு எந்த மதமும் அனுமதி தரவில்லை என்று பல சான்றுகளுடன் உபயதுல்லா உருக்கமாக விளக்குவார்.

அவரது தீவிரப் பிரசாரத்தின் விளைவாக வடார்க்காட்டில் அரசாங்கத்திற்குச் கலால் வருமானம் குறைந்து போயிற்று.

உபயதுல்லா மிகச் சிறந்த பேச்சாளர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். அவரது சொற்பொழிவில் உருதுமொழியும், தமிழ் மொழியும் கொஞ்சி விளையாடும்.

புள்ளிவிவரங்களை அடுக்கடுக்காக அள்ளி வீசி அவர் ஆங்கிலேய ஆட்சியாளர்களையும், அவர்களுக்குத் துணையாக நின்றவர்களையும் மடக்குவார்.

"ஒரு முஸ்லிம் இளைஞர் தேசிய மேடைகளில் மிகவும் துணிவாகப் பேசுகிறார்" என்ற செய்தி மாநிலம் முழுவதும் பரவியது. அவர் பேச வரவேண்டும் என்று அநேகமாக எல்லா ஊர்களிலிருந்தும் அன்றைய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்குக் கோரிக்கைகள் வந்தன.

இந்தச் செய்தியைத் தலைவர் காமராஜ் அவர்கள், இந்தக் கட்டுரையாளரிடம் திரும்பத்திரும்ப வலியுறுத்திக் குறிப்பிட்டார். "உபயதுல்லாவை அனுப்புங்கன்னு கடுதாசி வந்துக்கிட்டே இருக்கும். அவர் வந்தாத்தான் மீட்டிங் போடுவோம்னு கூட பலபேர் எழுதுவாங்க. அவர் போய்விட்டு வந்ததும், அவரை மறுபடியும் அனுப்புங்க அப்படின்னு கேட்பாங்க" என்று காமராஜ் சொன்னார்.

ஒருபுறம் முஸ்லிம் லீக், மற்றொரு புறம் ஜஸ்டிஸ் கட்சி என்று இந்த இரு கட்சிகளையும் உபயதுல்லா மிகவும் கடுமையாகத் தாக்கிப் பேசுவார்.

பாகிஸ்தான் பிரிவினை கூடாது என்று மனப்பூர்வமாக எதிர்த்தவர் உபயதுல்லா.

"வெள்ளையர்களுக்கு வால் பிடித்தவர்கள் ஜஸ்டிஸ் கட்சியினர்" என்று ஒவ்வொரு மேடையிலும் அவர் சாடினார்.

இந்திய விடுதலை இயக்கத்தை ஈ.வே.ரா. எதிர்க்கத் தொடங்கிய பிறகு, அவரைத் தேசத்துரோகி என்றே குறிப்பிட்டவர் உபயதுல்லா.

விடுதலை இயக்கத்தை எதிர்ப்பவர்களுக்குக் கொள்கை கிடையாது என்பதை அவர் நகைச்சுவையுடன் விவரிப்பார்.

"நாயக்கர் (ஈ.வே.ரா.) கெட்டிக்காரர்தான். ஆனால் அவர் அச்சு இல்லாமல் தேரை ஓட்டுகிறார். அச்சு இல்லாத தேர் ஓடுமா?" என்று உபயதுல்லா ஒவ்வொரு கூட்டத்திலும் கேட்பார்.

இந்தச் செய்தியையும் காமராஜ் அவர்கள் தெரிவித்தார்.

உபயதுல்லா முஸ்லிம் லீக்கைத் தீவிரமாக எதிர்த்ததால் மதத்திலிருந்து பகிஷ்கரிக்கப்பட்டார். "காஃபீர்" (துரோகி) என்றே அவர் மதத்தினரால் ஏசப்பட்டார்.

வடார்க்காடு நகரசபை உறுப்பினர், ஜில்லா போர்டு துணைத்தலைவர் முதலிய பொறுப்புகளை உபயதுல்லா வகித்திருக்கிறார்.

அவர் பல ஆண்டுகள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் துணைத் தலைவராக இருந்தார். 1942ஆம் வருட இயக்கத்தில் காமராஜ் அவர்கள் கைதான பிறகு, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகவும் அவர் செயல்பட்டார்.

இந்தியா விடுதலை அடைந்த பின் ஜவஹர்லால் நேரு, மௌலானா அபுல் கலாம் ஆஸாத், இராஜேந்திர பிரசாத், இராஜாஜி முதலிய பெருந்தலைவர்களின் நம்பிக்கைக்கும், அன்புக்கும் உரிய சிறந்த நண்பராக உபயதுல்லா திகழ்ந்தார்.


1958ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22ஆம் தேதியன்று உபயதுல்லா மரணம் அடைந்தார்.

சிறைச்சாலைகளில் அனுபவித்த கொடுமைகளே 53 வயதிலேயே அவர் உயிர் நீத்ததற்குக் காரணம் என்று வடார்க்காடு மாவட்ட தேசிய அன்பர்கள் குறிப்பிடுவார்கள்.

அவரது நினைவைப் போற்றும் வகையில் வேலூர் பேருந்து நிலையத்திற்கு அவரது பெயர் வைக்கப்பட்டது.

1960ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24, 25 தேதிகளில் வேலூர் நகரில் கோட்டை மைதானத்தில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்கள் கூட்டத்திற்காக அமைக்கப்பட்ட பிரம்மாண்டமான பந்தலுக்கு, காமராஜ் அவர்களது விருப்பப்படி, உபயதுல்லா அவர்களின் பெயர் சூட்டப்பட்டது.

"பாரத நாடு எனது தாய் நாடு ; மதம், மொழி முதலிய உணர்வுகளைவிட மேலோங்கியதாக எனது தேசபக்தி என்ற தூய உணர்வு விளங்க வேண்டும்" என்ற சீரிய செய்தியை, வேலூர் வீரர் ஜனாப் உபயதுல்லா இன்றைய தலைமுறையினருக்கு அளித்துச் சென்றிருக்கிறார்.



ஒரு கதையின் கதை

தொலைக்காட்சியில் எதையோ பார்த்துக் கொண்டிருக்கையில், திடும்மென்று மனத்தில் ஒரு நமைச்சல் உண்டாயிற்று.

அது கதையெழுதும் நமைச்சல். ஏதாவது எழுதினாலன்றி அடங்காத நமைச்சல். எதிலும் மனம் லயிக்காமல் எழுதுவது ஒன்றையே சுற்றிச் சுற்றி வரும்.

பேப்பர் பேனாவை எடுத்துக் கொண்டு மேஜையில் அமர்ந்தேன். சூடாய் ஒரு டம்ளர் காபி சாப்பிட்டால் உற்சாகமாய் எழுதலாம் என்று தோன்றிற்று.

'பங்கஜம், சூடா ஒரு டம்ளர் காபி கொண்டா. வச்சுட்டு ஒடனே போயிடு.... பக்கத்துல நின்னுட்டுத் தொணதொணன்னு பேசாதே.. எழுதற மூடுலே இருக்கேன்... டிஸ்டர்ப் பண்ணினியோ, கோபம் வந்துடும்... ஆமா..'

உரத்த குரலில் மனைவிக்குக் கட்டளையிட்டுவிட்டுக் கதைக் கரு பற்றி யோசிக்கலானேன். ஐந்து, பத்து நிமிடங்களாகியும் காபி வராதது கண்டு, கோபம் பீறிட்டது.

'பங்கஜம்... பங்கஜம்' என் குரல் தான் எதிரொலித்ததே தவிர, பங்கஜத்தைக் காணோம்.

எங்கே போய்த் தொலைந்தாள்? வரவர அலட்சியமாய் நடந்து கொள்கிறாள் போலிருக்கிறதே!

லேடீஸ் கிளப்புக்குத் தான் போயிருப்பாள் என்று தெரிந்ததும் ரௌத்ரம் பொங்கிற்று. வரட்டும். வாங்கி விடுகிறேன் என்று கறுவிக் கொண்டு காத்திருந்தேன்.

அரைமணியானதும் பங்கஜம் சர்வ அலட்சியமாய் உள்ளே நுழைந்தாள்.

"எங்கே போயிட்டே?... ஒரு வாய்க் காபி சாப்பிடலாம்னா, ஆளையே காணும்... கத்திக் கத்தித் தொண்டை வத்திப் போச்சு.."

நான் எதிர் பார்த்த உஷ்ணம் குரலில் தெரியாவிட்டாலும், முடிந்த அளவு என் கோபத்தை வெளிக் காட்டினேன்.

"காபி வேணும்னா போட்டுக் குடிக்கவேண்டியது தானே?... பால், டிகாக்ஷன் எல்லாம் தான் இருக்கே?... மாதர் சங்கத்துலே மீட்டிங்.. அதுக்குப் போயிருந்தேன்."

"போட்டுக் குடிக்க வேண்டியது தானே" என்று அவள் கேட்டது, என் ஈகோவைச் சுட்டது.

"போட்டுக் குடிக்கிறதா?... நீ எதுக்கு இருக்கே?... இதைத் தவிர வேறென்ன வேலை ஒனக்கு?"

"ஏன்... நீங்க போட்டுக் குடிச்சாக் கொறைஞ்சா போயிடுவீங்க?... இது தான் மேல் ஷாவினிஸம்... இதைத் தான் இன்னிக்கு மாதர் சங்கத்திலே நிர்மலா நடராஜன் வாங்குவாங்குனு வாங்கினா..."

"அதுதான் விஷயமா? மாதர் சங்கத்துலே இப்படி உபதேசம் நடக்கிறதா?"

பளீரென்று கதையின் கரு உதயமாயிற்று என்கிற பேரில் நடக்கிற விஷயங்களை விளாசித் தள்ளுவது என்று தீர்மானித்ததும், என் எழுத்து வேகம் பொங்கிற்று. மன நமைச்சல் அதிகமாயிற்று.

பங்கஜத்தை ஒரு முறை முறைத்துவிட்டு ஆவேசத்துடன் எழுத உட்கார்ந்தேன்.

எழுத எழுத வேகம் பொங்கிற்று. பங்கஜத்தின் மேலுள்ள கோபமும் சேர்ந்து கொள்ளக் கதை சூடு பிடித்து எழுதினேன். ஒரே மூச்சில் பத்துப் பக்கங்களை எழுதி முடித்தேன். பொதுவாக ஒரே மூச்சில் எழுதுவது என் பழக்கமில்லை. எடுத்துக் கொண்ட விஷயம் தந்த வேகம், என்னை ஒரேடியாய் எழுத உந்திற்று.

மன நமைச்சல் சற்றுக் குறைந்தது.

பங்கஜத்தை நேருக்கு நேர் சமாளிப்பது சற்றுச் சிரமமான காரியம் என்பது என் அனுபவம். இந்தச் சிறுகதை அவளுக்கு நல்ல பதிலாய் அமையும் என்று தோன்றியதும் உற்சாகமாயிருந்தது.

"பங்கஜம். கதையைப் போஸ்ட் பண்ணப் போறேன். படிச்சுப் பாத்துடு. அப்புறம் என்கிட்ட ஏன்

ஜெயரதன்..

மொதல்லேயே காண்பிக்கல்லேன்னு சண்டைக்கு வராதே..."

அழுத்தலாய் அவளிடம் கதையை நீட்டினேன். அவள் ஆர்வத்துடன் படிக்கலானாள்.

அவள் முகத்தில் ஏற்படும் பாவமாற்றங்களை ரகசியமாய் ரசித்துக் கொண்டே, அவள் படித்துக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

படித்துவிட்டுப் பதிலே பேசாமல் கதையைக் கொடுத்தாள்.

"எப்படியிருக்கு?..."

என்னைத் தீர்க்கமாய் ஒரு முறைப் பார்த்தாள். "உங்களுக்கு எழுதத்தான் தெரிஞ்சிருக்கு... உலகமே தெரியல்லே".

எதிர்பாராத இடத்தில் அடி வாங்கின மாதிரி அதிர்ந்து போனேன்.

என்ன உலகம் தெரியவில்லே?...


"இன்னிக்குப் பத்திரிகையிலே கதை படிக்கறவங்கள்லே தொண்ணூறு சதவீதம் பொம்மனாட்டிகள் தாம். ஆம்பளைகள் கதையே படிக்கிற தில்லே. சும்மாவாலும் ஜோக்ஸ், கிசுகிசு, அரசியல் அக்கப்போர் இதைத்தவிர, நீங்க எதைப் படிக்கிறீங்க?... பெரும்பாலான வாசகர்களை அட்டாக் பண்ணிக் கதை எழுதினா, உங்க கதையை அப்பறம் யார் படிப்பாங்க?... ஒரு புத்திசாலி எழுத்தாளன், பெண்களை மட்டம் தட்டிக் கதை எழுத மாட்டான்... அப்பறம் உங்க இஷ்டம்."

விருட்டென்று எழுந்து போனாள்.

இஸ்திரி போடாத துணி மாதிரி, கலைந்து போய் வெகுநேரம், நாற்காலியில் அமர்ந்திருந்தேன். அவள் கூற்றின் யதார்த்தம் என்னை அடியோடு வீழ்த்தியிருந்தது.

சிறிது நேரம் சென்றதும் வேறு விஷயமாய்க் கதையெழுதலாம் என்று யோசிக்கலானேன். முதலில் மனத்தில் தோன்றியது அரசியல்வாதிகளின் ஊழல்தான்.

எங்கள் தொகுதி பிரபல அரசியல் வாதியின் ஊழல் அப்போது தான் செய்தித்தாள்களில் தலைப்புச் செய்தியாக வந்து கொண்டிருந்தது.



பொறு பொறு வென்று அடி வயிற்றில் அமிலம் சுரக்க, அரசியல்வாதிகளின் ஊழலைச் சாடு சாடு என்று சாடி ஒரு கதை எழுதி முடித்தேன். மீண்டும் ஒரு முறை நானே படித்துப் பார்த்தேன். மிக அருமையாக அமைந்திருந்தது.

மீண்டும் பங்கஜத்திடம் படிக்கக் கொடுக்க, என் ஈகோ சம்மதிக்க வில்லையாதலால் என் சிநேகிதன் விசுவநாதனிடம் எடுத்துக் கொண்டு சென்றேன்.

"வாடா மணி.. கதை எழுதியிருக்கியா? கொண்டா படிக்கிறேன்".

உற்சாகமாய் வரவேற்று, கதையை வாங்கிப் படிக்கலானான். அது அவன் சுபாவம். உடனேயே, தாட்சண்ய மில்லாமல் அபிப்ராயமும் சொல்லி விடுவான்.

ஒரே மூச்சில் படித்துவிட்டுத் திரும்பிக் கொடுத்தான். பதில் சொல்லாமல், வெளியே அமானுஷ் யமாய்ப் பார்த்தான். அவன் அபிப்ராயத் திற்காக ஆவலுடன் காத்திருந்தேன்.

"நம்ம தொகுதி தனா காவன்னாவைப் பத்தி தானே எழுதியிருக்கே?"

என் உற்சாகம் கொப்பளித்தது. "கரெக்ட். எப்படிக் கண்டுபிடிச்சே? பேர், ஊரெல்லாம் மாத்தி யிருக்கேனே?"

"பேரை மாத்தினா?... சின்னக் கொழந்தை கூடச் சொல்லலாம்... புட்டுப்புட்டு வச்சிருக்கே.. படிக்க சுவாரஸ்யமாத்தான் இருக்கு..."

மனம் மகிழ்ச்சியில் துள்ளிற்று.. "தாங்ஸ்டா விசு.. போஸ்ட்லே இப்பவே அனுப்பிச்சுடறேன்" என்று எழுந்தேன்.

"ஒரு நிமிஷம்" என்றவன் என்னை அனுதாபத்துடன் பார்த்தான். "தனா காவன்னா பெரிய ரௌடின்னு ஒனக்குத் தெரியும்.. அண்டர் வேர்ல்ட் கனெக்ஷன் உண்டு.. கொலை பண்றது, அடிக்கறது, ஒதைக்கறதெல்லாம் அவனுக்குக் கொட்டாவி விடற மாதிரிச்

சாதாரண விஷயம்... நீயும் பேர் தெரிஞ்ச எழுத்தாளன். அவனுக்குத் தெரியாமப் போகாது... எதுக்கு வீண் பொல்லாப்பு. அரசியல்வாதிகளைத் திருத்த ஆண்டவனாலேயும் முடியாது.'' என்றவன் என் கைகளைப் பிடித்துக் கொண்டான். "ஆட்டோரிக்ஷா ஒரு இடி இடிச்சுக் கீழே தள்ளிடும். ஆறு மாதம் ஆஸ்பத்திரியோ இல்லே..."

வார்த்தைகளை முடிக்காமல் நிறுத்தினான்.

"விவகாரம் வேண்டாம்டா மணி! எழுத விஷயமா இல்லே?... காதலைப் பத்தி எழுதேன்... யார் வேணும்னாலும் எப்ப வேணும்னாலும் எழுதலாம். பணக்காரனைத் திட்டி எழுது. ஏழையைப் புகழ்ந்து எழுது. இதுதான் பொழைக்கிற வழி.. அதை விட்டுட்டுப் பிரச்னைலே மாட்டிக்கிறியே."

தோளைத்தட்டி வழியனுப்பினான்.

துவண்டு போய் வீடு வந்தேன். அவன் கூறியதை ஏற்க மனம் ஒப்ப வில்லையென்றாலும், தனா காவன்னா கொலை செய்ய அஞ்சாத பேர்வழி என்பது கருவிலிருக்கும் சிசுவிற்கும் தெரியும். மனத்தால்ஏற்றுக்கொள்ளவும் முடியாமல், ஒரேடியாய் வருவது வரட்டும் என்று தீர்மானிக்கவும் முடியாமல் தவித்தேன். உலாவி, உலாவி ஆடுசதையெல்லாம் வலிக்கத் தொடங்கிற்று.

அரசியல் வாதிகள் வேண்டாம். அதிகாரவர்க்கத்தின் ஊழலைப் பற்றி எழுதினால் என்ன? வரவர அதிகாரிகள் அலுவலகம் போவதே ஊழல் செய்யத்தான் என்பது மாதிரியல்லவா ஆகிவிட்டது?

காதலைப் பற்றி எழுத இஷ்ட மில்லை. எல்லாரும் காதலைத்தான் எழுதுகிறார்கள். தவிர வாரத்திற்கு நான்கு சினிமா வெளிவருகிறது. எல்லாம் காதல் தான். இருபத்தைந்து வயது இளைஞனுக்கும், இருபது வயதுப் பெண்ணுக்கும் காதலிப் பதைத் வேறு தொழிலே இல்லை என்கிறமாதிரித் தானே, இருக்கின்றன இப்போது திரைப் படங்களெல்லாம்?

அதிகாரவர்க்கத்தின் ஊழலை விளாசு விளாசு என்று விளாசி ஒரு கதை எழுதி முடித்தேன். படித்தால் தூக்குப் போட்டுக் கொண்டு தொங்குகிற அளவுக்கு, அதிகார வர்க்கத்தைச் சாடியிருந்தேன். ஒரு கம்பெனியின் ஜெனரல் மானேஜராகக் கதாநாயகனைச் சிருஷ்டி செய்திருந்தேன்.

யாரிடமும் படிக்கக் கொடுக்க வேண்டாம். பேசாமல் அனுப்பி விடுவோம் என்று தீர்மானித்துக் கொண்டேன்.

அனுப்புவதற்கு முன்னால் ஒருமுறை மீண்டும் படித்துப் பார்த்து விடலாம் என்று படித்துப் பார்த்த போது, எனது கதாநாயகனுக்கு, என் அலுவலக மானேஜரின் சாயல் அப்படியே பதிந்திருந்தது.

என் அலுவலக மானேஜர் லட்சுமி நரசிம்மன், யானையை முழுவதுமாய் விழுங்கி ஏப்பம் விடும் ஊழல் பேர் வழி. அவர் மீது பல விசாரணைகள் இருக்கின்றன. எல்லாவற்றையும் தனது செல்வாக்கினால் அடக்கி வைத்தி ருப்பவர்.

என் மீது விசேஷமாய் அவருக்கு எரிச்சல் ஏற்கெனவேயே உண்டு



வருக்குப் பெண்கள் என்றால் சேஷமாய்ச் சபலம் எழும். உலக மகா ரிசல் வழிவார். இதற்கு முன் நான் ழுதியிருந்த கதையொன்றில், தன் பன் ஸ்டெனோவிடம் ஜொள்ளு டுகிற மானேஜரைப் பற்றி நயாண்டி செய்திருந்தேன். அதை ாரோ சொல்லி இருப்பார்கள் பாலிருக்கிறது படித்து விட்டு ன்னைக் காய்ச்சு காய்ச்சு என்று ாய்ச்சினார்

"ஏன்யா... என்ன கதைன்னு இதைப் பாய் எழுதியிருக்கீர்?... படிக்கிறவன் ம்ம ஆபீஸைப் பத்தி என்ன னைப்பான்?... பொறுப்பா எழுத வண்டாம்?..."

"இதுலே நம்ம ஆபீஸ் எங்கேர்ந்து ந்தது?... பொதுவா எழுதினா நம்ம பீஸுனு தோணுவானேன்?" என்று ான் பதில் கூறியதும் அவருக்கு வஸ்தையாய்ப் போய் விட்டது. ன்னைத் தானே வெளிக் காட்டிக் காண்டு விட்டோமோ என்று ான்றியிருக்க வேண்டும்.

"ஆபீஸிலே வேலையே இல்லியா?... தை, கட்டுரைன்னு ஏதாவது பத்திட்டு இருக்கிறே?... உம்மை யல்லாம் ஹெவி பிராஞ்சுக்கு த்தணும். வேலையைப் பாரும்யா... தையெழுதறாராம் கதை..."

வாய்க்கு வந்ததையெல்லாம் கூறித் ட்டி அனுப்பினார்.

அன்றிலிருந்தே எனக்கு நிறைய வலைகளை அளித்துக் கடுமையாய் வலை வாங்குவார். ஏதாவது நாண்டிக் காரணங்களுக்காக ன்னைக் கூப்பிட்டுத் திட்டுவார்.

இந்தப் பின்னணியில் இந்தக் கதை ரசுரமானால் வேறு வினையே வண்டாம். ஸ்ரீ நகரில் இருக்கும் னக்கு என்னை மாற்றி அன்றாடம் யிரோடு இருப்பதே நிச்சயம் இல்லை ன்ற நிலைக்குத் தள்ளிவிடுவார். ாமே வலியப் போய் புலிவாயில் லையைக் கொடுக்கிற கதையாய்ப் பாய் விடும்.

இந்தக் கதையும் வேண்டாம் என்று தீர்மானித்தேன். அப்புறம் எதைத் தான் எழுதுவது?

ஜாதிப்பிரச்னையை எழுதலாமென்றால் எல்லா ஜாதிக்கும் சங்கம் இருக்கிறது. இதுதான் சாக்கு என்று சாலையில் ஊர்வலம் வந்து போக்குவரத்தைக் குலைத்து, எல்லார் வயிற்றெரிச்சலையும் கொட்டிக் கொள்வார்கள். அதுமட்டுமல்லாமல், என் செயலால் என் சாதியைச் சேர்ந்த எல்லாரையும் திட்டுவார்கள். நம் நாட்டில் மதத்தையாவது மாற்றிக், கொள்ளலாம். ஜாதியை மாற்றிக் கொள்ள வழி இல்லையே?

எதைத்தான் எழுதுவது? மாணவர்களைப் பற்றி எழுதினால் வேறு வினையே வேண்டாம். கல்லை விட்டெறிந்து பஸ்கள் உடைந்து போகும். யாரைப் பற்றி எழுதினாலும் பிரச்னை தான்.

யோசித்து யோசித்து மண்டை வறண்டு போயிற்று எனக்கு.

மிருகங்களைப் பற்றி எழுதினால் என்ன? அவை தான் எதுவும் சொல்லாமல் மௌனமாக இருக்கும்.

இதுபோல் எதைப்பற்றி எழுதினாலும் பிரச்னை என்று ஒரு காலகட்டத்தில் இருந்திருக்கவேண்டும். அப்போது தான் 'பஞ்சதந்திரக் கதைகள்' என்று மிருகங்களைப் பற்றி எழுதத் தொடங்கியிருப்பார்கள் போலிருக்கிறது என்று தோன்றிற்று.

நாமும் புதிதாய்ப் பஞ்ச தந்திரக் கதைகள் எழுதினால் என்ன என்று தோன்றிற்று.

பீரிட்டெழுந்த உற்சாகத்துடன் ஒரு நாயை மையமாக வைத்து ஒரு கதையெழுதி முடித்தேன்.

'யாரிடமும் காட்டுவதில்லை, மீண்டும் படித்துப் பார்ப்பதுமில்லை' என்று வைராக்கியத்துடன் கவரில் போட்டு ஒட்டி, தபாலில் சேர்க்கக் கிளம்பினேன்.

என்னைப் பார்த்த பங்கஜம் ஏதோ கேட்க வாயைத்திறந்ததும் ஒரே சத்தலாய்க் கத்தினேன்.

"எங்கே போறேன்று கேட்டியோ, பிச்சுப் பிடுவேன் பிச்சு" என்று உறுமிவிட்டு (நாயைப் பற்றிக் கதையெழுதிய பாதிப்பு) வேகமாய் வெளியேறினேன்.

நான் சாலையை எட்டியதும் எதிரில் என் நண்பர் ஜோஸப் கையில் தன் நாயுடன் தென்பட்டார்.

நாய் என்றால் சாதாரண நாயில்லை அது. ஒட்டகக் குட்டி மாதிரி பாதி ஆள் உயரத்திற்கு வாலே இல்லாமல் பேய்ப்படங்களில் வருகிற, பார்த்தாலே மிரட்டுகிற மாதியான கறுப்பு நிற நாய்.

"என்ன மணி சார்?.. கையிலே என்ன கதையா?... போஸ்ட் பண்ணப் போறீங்களாக்கும்?..."

அவரது நாய்க்கு என்ன தோன்றியதோ என்னவோ, என் கையிலிருந்த கவரையே உற்றுப் பார்த்துப் பின்னர் என்னை ஆக்ரோஷம் கலந்த விரோதத்துடன் பார்த்தது.

நாய்க்கு மோப்ப சக்தி தான் உண்டு. ஞானதிருஷ்டியும் உண்டோ? ஒரு வேளை தன் ஜாதியைப் பற்றித் தான் எழுதியிருக்கிறேன் என்று தெரிந்து கொண்டிருக்குமோ? இது என்ன புது உபத்திரவம்?

நாயின் கண்களில் படாமல் கவரைப் பின்புறமாக மறைத்துக் கொண்டு, ஜோஸப்பிடம் ஏதோ பதில் சொல்லிவிட்டு விரைந்தேன்.

ஒரு வழியாய்த் தபாலில் சேர்த்து விட்டுத் திரும்பினேன். வரும் வழியில் ஒரே நாய்க் கூட்டம் ஏழெட்டு நாய்களாகக் கூடிக் கொண்டு, உச்சஸ்தாயில் குரைத்துக் கொண்டிருந்தன.

நான் கதையைத் தபாலில் சேர்ந்ததை அவை தெரிந்து கொண்டிருக்க நியாயமில்லை. இருந்தாலும் முன் ஜாக்கிரதையாக "காக்க காக்க கனகவேல் காக்க.." என்று சஷ்டிக்கவசத்தை மனத்திற்குள் சொல்லிக் கொண்டே, அவற்றை லட்சியம் செய்யாதவன் மாதிரி உடலை விறைத்துக் கொண்டு, ஓரக்கண்ணால் கவனித்தவாறே வீட்டுக்கு விரைந்தேன். ●

தீர்ந்த ப்ரச்னை

ஆர்வி

உள் வாசற்கதவு திறந்திருந்தது.

படிக்குறட்டில் உட்கார்ந்திருந்த சின்னக்குட்டி கண்ணில் படவில்லை. சுமதிக்கு இப்போதுதான் நல்ல மூச்சு வந்தது. எதிர்பார்த்திருந்த அம்மாள் வந்துவிட்டாள் என்று ஒரு தெம்பு வந்தது.

காலையிலிருந்து வாசற்படியில் பழியாகக் கிடந்த அந்தக் குட்டி திரும்பத் திரும்ப ஒரே பதிலையே சொல்லிக் கொண்டிருந்தது.

"அம்மா இல்லை, வெளியே போயிருக்கிறாங்க. எப்ப வருவாங்களோ, தெரியாது."

அந்தக்குட்டி அவளை அந்தக் காம்பவுண்டுக்குள் உட்காரக்கூட விடவில்லை. அதற்கு என்னவோ சந்தேகம். ஏதாவது பேசினால் சத்தம் போட்டு ஊரைக் கூட்டிவிடும் போலிருந்தது.

சுமதி பட்டணத்துக்குப் புதிசு. போவதற்கு வேறு இடமும் இல்லை. அதனால் எட்டின வரையில் நடந்து போய்விட்டு, இரண்டு மணி நேரத்துக்கு ஒரு தடவை வந்து விசாரித்துக் கொண்டிருந்தாள்.

"இன்னும் வரலையா?"

"வரலை..."

அந்தப் பதிலைக் கேட்கவே சுமதிக்கு எரிச்சலாக இருந்தது. அதே எரிச்சலுக்குக் காரணமான சாந்தா சாமிநாதன் அவள் பொறுமையைச் சோதித்துக் கொண்டிருந்தாள்.

மணி பன்னிரண்டுக்கு மேலாகியும் வெளியில் போனவள் வீட்டுக்குத் திரும்பிவந்த பாடாயில்லை. எங்கே போய் இருப்பாளோ? என்ன தலை போகிற வேலையோ? சுமதிக்கு அவளுடைய முகத்தைப் பார்க்க மாட்டோமா என்று ஆகிவிட்டது. அவள் கறுப்பா, சிவப்பா என்றுகூடத் தெரியாது. சிறு வயசா, வயசானவளா என்பதும் தெரியாது. ஆனால் குணத்தில் தங்கம் என்று மட்டும் அவளுக்குச் சிபாரிசுக் கடிதம் கொடுத்திருந்த டாக்டர் சத்யபாமா சொல்லியிருந்தாள்.

தங்கம் என்றால் தாட்சிண்யப் படுகிற சுபாவமாகத்தான் இருக்கும். வீடு, வாசல் என்ற நினைப்பே வராதுதான்.

சுமதிக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. ராத்திரியெல்லாம் நல்ல தூக்கமும் இல்லை. வண்டியில் வரும்போது வாங்கிய தயிர் சாதத்தை வாயில் வைக்க வழங்கவில்லை.

காலையில் ஸ்டேஷனில் ஒரு கப் காபி வாங்கிக் குடித்ததுதான். நடந்து நடந்து பசி மயக்கமே போட்டது. அக்கம் பக்கத்தில் ஒட்டலையும் காணோம். அதற்கு ஒரு மைல் தூரம் போக வேண்டியிருந்தது. வரும் வழியில் நல்ல காலமாக ஒரு மண்டபம். பின்பக்கம் போக இடமும் இருந்தது. வெயிலுக்கும் களைப்புக்கும் அந்த இடம் சொர்க்கமாகப்பட்டது. அந்தச் சாந்தா சாமிநாதன் சாவகாசமா வருகிறபோது வரட்டும் என்று சும அங்கே உட்கார்ந்து விட்டாள்.

குளிர்ந்த காற்று வீசவே தூணி சாய்ந்தபடி அவளையறியாம தூங்கிவிட்டாள். கண் விழித்து பார்த்தால் பொழுது நன்றாக சாய்ந்திருந்தது. கண்ணைக் கசக்கி கொண்டு, வழியைக் கவனித்தபடி சாந்தா சாமிநாதன் வீடு இருந் பழைய காலனிக்கு வந் சேர்ந்தாள். வீட்டு வளைவுக்கு வருகிற வரையில் உள்ளு உதைப்புத்தான். உள் வாசல் கத திறந்திருப்பதைப் பார்த்த பிறகுதா அவளுக்கு உயிர் வந்தது.

"போய்ப் பாரேன். பார்த்தாத்தானே உனக்கும் நிலைமை புரியும். எத்தனை ஏழைப் பெண்களுக்கு அந்தச் சாந்த ஹெல்ப் பண்ணியிருக்கா, தெரியுமா அவளே சொல்லியிருக்கா. அதனாலே சொல்றேன். இந்த லெட்டை எடுத்துண்டு போ. இதை அவ பார்த்துட்டா உன் ப்ராப்ளம் பாதி தீர்ந்துட்ட மாதிரிதான். தைரியமா ராத்திரி வண்டிக்கே புறப்பட்டுப் போ!" என்று நம்பிக்கையாகச் சொல்லி யிருந்தாள் டாக்டர் சத்யபாமா.

அவளுடைய சொந் ப்ராப்ளத்தைவிட இப்போது சாந்தா சாமிநாதனை முதலில் கண்ணால் காண்போமா என்பதுதான்

முக்கியமானதாக இருந்தது. எப்போதும் அவள் வந்திராவிட்டால் எங்கே போய் நிற்பது?

நல்லவேளை, சாந்தா சாமிநாதன் வீட்டில் இருக்கிறாள். ஒரு பெரிய கவலை விட்டது. டாக்டர் சத்ய பாமாவின் சிபாரிசுக் கடிதத்தைக் கொடுக்க வேண்டியதுதான். இன்னும் அரைமணியில் அவளுக்கு ஒரு நல்ல பதில் கிடைத்துவிடும். பிரச்னை பாதி தீர்ந்துவிடும்.

சுமதி தன் 'வாலெட்டில்' அந்தக் கடிதம் பத்திரமாய் இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டாள். வாசற்படி ஏறினாள். முன்பகுதியில் யாரும் கண்ணில் தென்படவில்லை. கூப்பிடவும் தயக்கமாக இருந்தது.

சற்றைக்கெல்லாம் அந்தச் சின்னக்குட்டி வாசல் பக்கம் வந்து, யந்திரம் மாதிரி விளக்கைப் போட்டுவிட்டுப் போயிற்று. அதைப் பார்த்ததுமே சுமதி புன்சிரிப்புச் சிரித்தாள். ஆனால் அது முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு பார்த்தது.

"இருக்காங்க, இப்பப் பார்க்க முடியாது" என்றது.

"ஏன்?"

"குளிக்கிறாங்க."

"குளிச்சிட்டு வந்த பிறகு பார்க்க முடியாதா?"

"அது எனக்கு இன்னா தெரியும்? முடியுமோ, முடியாதோ?"

"அப்ப இந்த லெட்டரை அவங்ககிட்ட கொடுத்துடறியா?

"இதைப் பார்த்துட்டா அவங்களே என்னைக் கூப்பிடுவாங்க. நான் அதுவரை இங்கேயே வெளியில் இருக்கேன்..." என்று சொல்லிக் கொண்டே சுமதி கடிதத்தை எடுத்துக் கொடுக்கப் போனாள். ஆனால் அதற்குள் அந்தக் குட்டி உள்ளே ஓடிவிட்டது.

சுமதிக்கு வந்த கோபத்துக்கு அளவில்லை. பாவம், குளிக்கக்கூட நேரமில்லாமல் சமூக சேவை என்று ஊருக்கெல்லாம் உழைத்துவிட்டு வருகிற பெண்மணி இப்படி ஒரு குட்டியை வீட்டில் வைத்துக் கொள்ளலாமோ என்று ஏகக் கோபம்.

இருந்தாலும் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமையாக வாசல் கதவில் சாய்ந்தபடி நின்றாள்.

கால்மணி நேரத்துக்கு மேலாகியும் வீட்டினுள்ளே சத்தத்தையே காணோம். சுமதிக்குக் கால்வலி கெஞ்சியது. கண்ணும் மனமும் உள்பக்கமே இருந்தன.

குரல் கொடுத்துப் பார்க்கலாம் என்று பல தடவை முயன்று பார்த்தாள். குரல் எழும்பவே மறுத்துவிட்டது.

கதவை விரலால் தட்டிப் பார்த்தாள்.

விரல்தான் வலித்தது. அந்தச் சத்தம் உள் வரைக்கும் எட்டியதாகத் தெரியவில்லை.

நேரம் ஆக ஆக, நெஞ்சில் ஒரு திகில் உண்டாயிற்று. இருந்தாலும் அந்தச் சாந்தா சாமிநாதன் வீட்டினுள்ளே இருக்கிறாளே என்று ஒரு தைரியம்.

அவள் கண்ணை மூடிக்கொண்டு தவமிருந்தாள். திடீரென்று உள்ளேயிருந்து அந்தக் குட்டியின் அலறல் சத்தம் கேட்டது.

"இல்லை இல்லை...இனிமே செய்யலை ..ஊகும்...செய்யலை"

அந்தச் சின்னக்குட்டியின் குரல்தான்; சந்தேகமில்லை. அலறலைத் தொடர்ந்து பட்பட்டென்று ஸ்கேலால் அடிப்பது போல ஒசை. பிறகு 'கப்'பென்று அடிப்பதும் நின்றது; அலறலும் நின்றது. டெலிபோன் மணி கிணுகிணுத்தது - காரணமாக இருக்கலாம்.

"ஹலோ!" என்று சன்னமான ஒரு குரல் இனிமையாக அழைப்பது காதில் விழுந்தது.

அந்தக் குட்டிக்கு இந்த அடி நன்றாக வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள் சுமதி. இன்னும் இரண்டு அடி விழுந்தாலும் அவளுக்குச் சம்மதம்தான். அந்தக் குட்டியிடம் அவ்வளவு ஆத்திரம். கொஞ்சம்கூட ஈவு, இரக்கம் இல்லையே, இந்த வயசிலேயே என்று நினைத்துக் கொண்டாள்.

பத்து நிமிஷங்களுக்குமேல் டெலிபோனில் கொஞ்சலாகப் பேசுவதும் சிரிப்பதுமாகக் கேட்டன.

"நான் ரெடி; தயாராக் காத்துக் கிட்டிருக்கேன்..." அதற்கு மேல் விவரமாக எதுவும் காதில் விழவில்லை என்றாலும் மறுபக்கத்தில் பேசியவர் பெரிய இடமாக இருக்க வேண்டும் என்று சுமதிக்குப் பட்டது. கொஞ்சம் கொஞ்சமாக அது லேசில் ஒயவில்லை.

"மெட்ராசிலே சோஷியல் சர்வீஸ் செய்கிற அஸோசியேஷன் எத்தனை உண்டோ, அத்தனையிலும் சாந்தா மெம்பர். ஒண்ணு செகரட்டரியா இருப்பா; இல்லை கமிட்டி மெம்பராகவாவது இருப்பா. அவளுக்குத் தெரியாத பெரிய மனுஷங்களே கிடையாது. மினிஸ்ட்டர்ஸ்லேர்ந்து பெரிய பெரிய ஆபிஸர்கள் வரைக்கும் அவளைத் தெரியாதவங்க இருக்க மாட்டாங்க. அவள் ஒரு வார்த்தை சொன்னாப் போதும்; நிச்சயம் காரியம் நடந்துட்ட மாதிரிதான். போயேன், உன் பிராப்ளம் எல்லாம் அவளுக்கு ஒரு தூசி மாதிரி. இதுக்குப் போய்ப் பெரிசாய் கவலைப்படறியே. என் லெட்டரைக் கொண்டு போய்க் கொடேன். அப்புறம் என்ன நடக்குதுன்னு பாரேன்!" என்று மிகவும் நம்பிக்கையாகச் சொல்லி யிருந்தாள் டாக்டர் சத்யபாமா. டெலிபோன் பேச்சு அதை உறுதிப் படுத்துவது போலத்தான் தொனித்தது.

எந்த நிமிஷமும் அவள் வெளிப் பக்கம் வந்து எட்டிப் பார்க்கக் கூடும் என்று எதிர்பார்த்து நின்றாள் சுமதி.



ஆனால் வெகுநேரம் அவள் மனம் சலித்துப் போய் முகத்தைத் திருப்பி இருளைப் பார்த்துக் கொண்டு நின்றபோது கும்மென்று ஒரு வாசனை பின்னால் மூக்கைத் துளைத்தது. சுமதி திரும்பிப் பார்த்தாள்.

இலைப் பச்சையில் தாமரைப் பூ தெரிவதுபோல ஒரு முகம் பளிச்சென்று தெரிந்தது. இன்னும் அந்த முகம் சுமதியைக் கவனிக்கவில்லை. சாந்தா சாமிநாதன், டாக்டர் சத்ய பாமாவைப் போல இன்னும் கொஞ்சம் இளமையாக இருப்பாள் என்று அவள் எதிர்பார்த்திருந்தாள். ஆனால் நாற்பது நாற்பத்திரண்டு வயதைப் பத்து வருஷம் குறைத்துக் காட்டுகிற மாதிரி ஆடையலங்காரம்; தலைக் கொண்டை, பூச்சரம். அதெல்லாம் எப்படியிருந்தாலும் அவள் தன்னைக் கரையேற்ற வந்த தெய்வம் போல் சுமதிக்குக் காட்சியளித்தாள்.

"இது யாரு இங்கே, இந்த நேரத்துக்கு மேலே?"

சுமதி அவளைக் கை குவித்துக் கும்பிட்டாள். சாந்தா அதை ஏற்றுக் கொண்டதாகக் கூடக் காட்டிக் கொள்ளவில்லை.

"நான் தஞ்சாவூர்..."

"அதெல்லாம் சரி; வந்து பார்க்கறதுக்கு இதுதானா நேரம்? நான் வெளியிலே போயிட்டே யிருக்கேன்..."

"நான் முந்தியே வந்தேன். டாக்டர் சத்யபாமா...." என்றபடி சுமதி அந்தக் கடிதத்தை எடுக்கப் போனாள்.

"சரி, சரி. அது இருக்கட்டும். எனக்கு இப்ப அதுக்கெல்லாம் நேரமில்லை..." என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே உள்ளே டெலிபோன் மணி அலறியது.

சாந்தா சாமிநாதன் உடனே உள்ளே ஓடிச்சென்று டெலிபோனில் பேசத் தொடங்கினாள். சுமார் கா[illegible] மணி நேரம் போல் கிசுகிசுவென்[illegible] பேசிக் கொண்டிருந்தாள். அவ[illegible] பேசியதில், "அதைப் போனி[illegible] பேசமுடியாது. நேரிலே சொல்றேனே[illegible]" என்பது மட்டும் சுமதியின் காதி[illegible] விழுந்தது.

பிறகு வெளியில் வந்தவள்...

"இன்னும் இருக்கியா நீ! ச[illegible] சரி....யாரு சொன்னே நீ? டாக்[illegible] சத்யபாமாவா?" என்று கேட்டாள்.

"ஆமாமாம்; இதோ இருக்[illegible] லெட்டர்."

"இப்ப அதைக் கொடுத்தா? என்[illegible] விஷயம்னு வாயாலே சொல்லு..."

"எனக்கு ஒரு சின்ன ப்ராப்ள[illegible] நாலே வரி படிச்சாப் போதும். அதி[illegible] எல்லாம் சுருக்கமா....விவரமா..."

"இதப்பாரு, நாலே வரியோ, நாப்ப[illegible] வரியோ, எதாயிருந்தாலு[illegible] காலையிலேதான். இப்ப ஒன்னு[illegible]

முடியாது. இப்ப எனக்கு டயமில்லை. டாக்டர் சத்யபாமா, கலெக்டர் கல்யாணி, புரொபஸர் சௌந்தரம் எல்லாரும்தான் லெட்டர் எழுதிக் கொடுத்துட்டாங்க, உங்க இம்சை பொறுக்க மாட்டாமே. அந்த இம்சையை இப்ப என்னையும் படச் சொல்றியா?'' – பேசிக்கொண்டே சாந்தா சாமிநாதன் அவளைத் தாண்டிக் கொண்டு படியண்டை போய் நின்றாள்.

சுமதிக்குத் திகில் அதிகரித்தது. நின்று கூடப் பேசாமல் இப்படி அவசரப்படுகிறவள் நிச்சயம் நடுத் தெருவில் நிற்க வைத்துவிடப் போகிறாளே என்ற கவலையில் அவள் நெஞ்செல்லாம் ஒரு நொடியில் உலர்ந்துவிட்டது.

சாந்தா சாமிநாதன் வாசலில் வரப்போகும் வண்டியை எதிர் பார்க்கிறாள் என்று பட்டது. கடைசி நேர ஒப்பனையாக அவள் கொண் டையை அழுந்தச் சரிப்படுத்திவிட்டு, மார்புத் தலைப்பையும் சரிகையும் எடுப்பாகத் தெரியும்படிப் பிரித்து விட்டுக் கொண்டாள். ஓரமாக வந்த வாட்ச்மேனைப்பார்த்து, "குட்டி தனியா இருக்கு; வீட்டைக் கவனிச்சுக்க!'' என்று உத்தரவு போட்டாள்.

சுமதிக்கு வேறு வழியில்லை.

"காலையிலே வர்றதைப் பத்தி ஒன்றுமில்லை. ஆனால் நான் மெட்ராஸுக்குப் புதிசு. யாரையும் தெரியாது. போகவும் இடமில்லை. அதனால்தான் உங்களுக்குத் தொந்தரவு கொடுக்க வேண்டி யிருக்கு'' என்று சரளமான ஆங்கிலத்தில் பேசினாள்.

சாந்தா சாமிநாதன் அப்போது தான் முதல் தடவையாகப் பார்ப்பது போல் சுமதியை நன்றாக ஏறிட்டுப் பார்த்தாள். பகல் எல்லாம் சுற்றி அலைந்து முகம் வாடிப் போயிருந் தாலும் இளமையும் நல்ல முக வெட்டும் அவளிடம் பூரித்துப் பொங்கியதைக் கண்டாள். அவளுக்குச் சமதையாக ஆங்கிலம் சரளமாகப் பேச முடியாது என்று நினைத்துத்தானோ என்னவோ, தமிழிலேயே பதில் சொன்னாள்.

"உனக்கு இங்கே யாரையும் தெரியாதுன்னா அதுக்கு என்னை என்ன செய்யச் சொல்றே! இப்படிச் சமயம் தெரியாமல் பிறத்தியாருக்குத் தொந்தரவு கொடுக்கிறவளுக்குப் பிராப்ளம்–பிரச்னை வராமல் என்ன செய்யும்? படிச்சவதானே நீ? பேசாம ஓர் ஓட்டலுக்குப் போறது; ரூம் எடுத்துக்கிறது; காலையிலே வர்றது. இதுக்கெல்லாம் கூட ஒருத்தர் கூடவே வரணுமா?''

"வேண்டியதில்லைதான்...ஆனா ஒரு பெண் தனியா ஒரு லாட்ஜிலே போய்த் தங்கறது எப்படி? அதையும் தவிர நான் அவ்வளவு வசதியோட வரலை... அதனாலே ராத்திரி ஒருவேளை இப்படி வெளி வராந்தா விலேயே தங்கியிருக்கிறதுக்கு இடம் கொடுத்தால் போதும். எனக்கு இப்ப வேறு ஒண்ணும் செய்ய வேண்டாம். கொஞ்சம் தயவு வைச்சு... ப்ளீஸ்....''

"நோ நோ நோ! என்னது இது! அதெல்லாம் கொஞ்சம் கூடச் சரியில்லை. உன்னை எனக்கு முன்னே பின்னே தெரியாது. இடம் கொடுக்கிறதாவது? நீ வேறே ஏதாவது ஏற்பாடு செய்துக்க வேண்டியதுதான். என்னை வந்து தொந்தரவு செய்யக்கூடாது. வராந்தாவிலே படுக்கிறதா? யூ ஆர் அன் யங் வுமன். ஏதானும் காம்ப்ளிகேஷன் ஆகிப்போச்சன்னா... நீ நல்லவேளையிலே போய்ச் சேரு...'' என்று மறுபடியும் கையைத் தூக்கி மோந்து பார்த்து, பிறகு காதுப் பக்கத்தை ஒதுக்கிக் கொண்டாள்.

அவள் கையை உயர்த்தினாலே ஃபாரின் செண்ட் வாசனை குபீர் என்று வீசிற்று.

"டாக்டர் சத்யபாமாவோட லெட்டரைப் பார்த்தீங்கன்னா....''

"பார்த்தேன்னா, இப்ப எழுதின லெட்டரை உங்க டாக்டர் இரண்டு நாள் முந்தியே எழுதியிருந்தா இந்த வம்பில்லை பாரு. அதை விட்டுட்டு நீ திடீர்னு ராத்திரி எட்டு மணிக்கு மேலே வந்து வராந்தாவிலே இடம் கேட்டு யாரையும் இங்கே தெரியாதுன்னு... நான் அலவ் பண்ண முடியுமா? 'தனியா வந்திருக்கேன்; வசதியில்லைன்னு' சொல்றியே அப்படியெல்லாம் நான் உன்னை வரச்சொன்னேனா, இல்லை, அதுக்கு ஏதாவது ஏற்பாடு செய்து கொடுக்கச் சொல்றியா? எனக்கு ஒண்ணும் புரியலையே...''

"நான் வந்து இவ்வளவு நேரம் ஆகும்னு....''

"நினைச்சிருக்க மாட்டீங்க; எனக்குத் தெரியாதா? உங்க காரியம் எப்படியாவது ஆனாச் சரி. மத்தவங்க சௌகரியம் எப்படியிருந்தாலும் உங்களுக்குக் கவலை இல்லை. வராந்தாவிலே படுக்கக்கூட இவ்வளவு பேசறேனேன்னு நீ நினைக்கலாம். நீங்களெல்லாம் அப்படித்தான் நெனைப்பீங்க. ஐ நோ யுவர் டைப். நான் சரின்னு சொல்லிட்டா, அதோட கான்ஸிக் வன்ஸ்–விளைவு எப்படியெல்லாம் போகும்னு ஏதேனும் ஐடியா இருக்கா உனக்கு? எஸ்... அதோ அந்த வண்டிதான்னு நினைக் கிறேன்... இல்லையே, அந்தப் பக்கமாப் போயிட்டுதே... பார்த்துக்க... போனிலே சொல்லியிருக்கப்பவே இந்தக் கதியா இருக்கு. நீ என்னான்னா திடீர்னு வந்து. நீ கேக்கறதுக்கெல்லாம் தலையை ஆட்டணும்னு நினைக்கிறே? அதானே?''

"நான் செய்தது தப்புத்தான். ஆனா வேணும்னு செய்யலை. அப்படி நேர்ந்து போச்சு. அதையும் அந்த லெட்டர்லே....''

"லெட்டர், லெட்டர்! சும்மா அதைப்பத்தி எங்கிட்டே பேசாதே. இந்த வண்டியும் சட்டுனு வந்து

நாலைக்காமசதி பண்ணுது. நீ என்ன
செய்வியோ, ஏது செய்வியோ,
னக்குத் தெரியாது. அக்கறையா
ருந்தா காலையிலே வந்து பாரு.
ல்லைன்னா வர வேண்டாம். ராத்திரி
ண்டிக்கே நீ ஊருக்குத் திரும்
டலாம். ஒம்பதே முக்காலுக்குத்
ான் வண்டி. சும்மா நின்னு என்
சிரை வாங்காதே..."

சுமதிக்கு அதற்குமேல் பொறுக்கவில்லை. வெள்ளம் தலைக்கு மல் போய்விட்டது. சாண் போனால் ன்ன, முழம் போனால் என்ன?

"வண்டிக்குக் காத்திருக்கிற நாத்துக்குள்ளே மூணுதரம் அந்த லட்டரைப் படிச்சுப் பார்த்திருக் லாம்!"

சாந்தா சாமிநாதன் முகத்தில் காபம் ஜொலித்தது.

"ஸோ...அதுக்குத் தண்டனை தாவது உண்டா?"

"நீங்க அந்த லெட்டருக்கு மதிப்புக் காடுப்பீங்கன்னு டாக்டர் சத்யபாமா ழுதிக் கொடுத்தாங்களே, அதை னைச்சுத்தான் வருத்தப்படறேன். ங்களைப் பத்தி அவங்களுக்கு ராம்ப உசத்தியான அபிப்பிராயம். ங்க கையாலே கூட லெட்டரை ாங்கிப் பார்க்கலைன்னு நான் போய்ச் சான்னா, அவங்க உங்களைப் பத்தி ன்ன நினைப்பாங்க? யோசிச்சுப் ார்த்தீங்களா?

"என்ன நினைப்பா? இனிமே உன் ாதிரி திமிர் பிடிச்சவங்களுக்கெல்லாம் யோரிக லெட்டர் எழுதி கொடுக்காமலாவது இருப்பாள். ங்கிட்டே நான் இவ்வளவு பேசியே இருக்கப்படாது. யூ ஹாவ் நோ னர்ஸ்..."

"மேடம், நான் தப்பாப் பேசியிருந்தா வு செஞ்சு மன்னிக்கணும். ன்னாலே உங்களுக்குள்ளே ஒரு ப்பிராயம் வந்துடப்படாது. நீங்க டெலிபோனிலே பேசிட்டு வந்தப்புறம் ான் உங்க மூடை அப்செட் பண்ணிட்டதா நினைக்கிறேன். இல்லாட்டா எங்கிட்டே பொறுமையா, அன்பாப் பேசியிருப்பீங்க. அதுக்கு நான் கொடுத்து வைக்கலை. நான் புறப்பட்டு வந்த நேரம் சரியில்லை. நான் வரேன்.. ரொம்ப தாங்க்ஸ்..." என்று சுமதி நகரத் தொடங்கினாள்.

"இரு இரு... எனக்கு ஒரு தாங்க்ஸும் வேண்டாம். நான் டெலிபோனிலே பேசினதை நீ ஒட்டுக் கேட்டுண்டு தான் இருந்தியா?"

"ஒட்டுக் கேக்கலை நான். உங்களுக்காகக் காத்திருந்தப்ப நீங்க பேசினது என் காதிலே தானா விழுந்தது."

"நான் பேசினதா?"

"நீங்க பேசினது, அதுக்கு முந்தி உங்ககிட்ட வேலை செய்யிற அந்தக்குட்டி அடியை வாங்கிண்டு அலறினது, எல்லாமே என் காதிலே விழுந்தது."

"இரு இரு.. நீ எல்லாத்தையும் கேட்டுண்டுதான் நின்னியா?"

திடீரென்று சாந்தா சாமிநாதனின் குரலில் ஒரு மாற்றம் தொனித்ததை நுணுக்கமாகக் கண்டாள் சுமதி. அது அவளுக்கு வேடிக்கையாக இருந்தது.

"நான் வாசல் கதவுலே சாய்ஞ்சிண்டு நின்னேன். காதிலே வந்து விழுந்தது. நான் வேணும்னு கேட்டுண்டு நிக்கலே."

"ம்.. ம்.. சரி.. இந்த லெட்டரைக் கொடு. வண்டி வராப்லே இருக்கு. இருந்தாலும் அதுக்குள்ளே ஒரு தடவை படிச்சுப் பார்த்துடறேன்!"

"எதுக்கு, பாவம்! நீங்க எங்கேயோ யாரோடயோ அவசரமாப் போறீங்க... இப்பப் போய்ப் படிப்பானேன்?"

அதற்குள் சாந்தா சாமிநாதன் எதிர்பார்த்திருந்த வண்டி வந்து விட்டது. அதை ஓட்டி வந்தவர் முன்பக்கக் கதவைத் திறந்து விட்டார்.

"ஸாரி சாந்தா, கொஞ்சம் டிலே ஆயிப் போச்சு. டிரைவரு இல்லாம நானே வண்டியை எடுத்துக்கினு புறப்பட்டா, வூட்லே பதில் சொல்ற பிராப்ளம் ஒண்ணு கீதே! எங்கே, எதுக்குன்னு புட்சிக்கிறாங்களே!"

"ஸ்.." என்று சாந்தா சாமிநாதன் அவர் வாயை அடக்கி விட்டு, சுமதி பக்கம் திரும்பினாள்.

"அப்ப–? எதுக்கும் நீ அந்த லெட்டரை இப்படிக் கொடு. நான் என்ன செய்யலாமோ, பார்க்கறேன்!"

"வேணாம்; அது எங்கிட்டேயே இருக்கட்டும்".

"அப்படீன்னா காலையிலே வருவியா?"

"மறுபடியுமா? இங்கேயா? ஊகும். இல்லை. ஒன்பதே முக்கால் மணி வண்டிக்கு ஊருக்குப் போறேன்!"


"ஏன் திடீர்னு புரோக்கிராம் மாறிப் போச்சு?"

"என்ன செய்யறது மேடம். நீங்க ரொம்பப் பெரியவங்க. என் ப்ராப்ளமோ ரொம்பச் சின்னது. உங்களுக்குத் தகுந்த மாதிரி என்னோட பிரச்னை அத்தனை பெரிசாக இருக்க வேணாமா? இது ரொம்பச் சின்னதாச்சே. அதான் என் புரோக்கிராம் மாறிப் போச்சு! நான் வரேன்!"

இப்படிச் சொல்லிவிட்டு, சுமதி விடுவிடென்று தெருவில் இறங்கி நடந்தாள்.

கற்பு

மங்கையர் செல்வன்



மாற்றானை உரசியதால்
மானம் போனதோ?
தீக்குளிக்கிறதே
தீக்குச்சி!


ஜோதிடரின் ஜோரான அனுபவங்கள்...

'தினமணி' பத்திரிகையில் நாற்பது வருடங்களாக தினப்பலன், வார ராசி பலன்கள் எழுதி ஜோதிட அபிமானிக ளிடையே புகழ் பெற்றவர் 'கணிதகலாநிதி' 'ஜோதிட வித்வான்' எஸ். ரெங்கனாத ஜோஸ்யர். சமீபத்தில் காலமான இவர் பற்றி இவரது புதல்வரும், பத்திரிகையாளருமான விஜயா கண்ணன், இங்கே பல சுவையான விஷயங் களையும், ஜோதிடர் சம்பந்தப்பட்ட சுவாரஸ்யமான.. ஜோரான சம்பவங்களையும் கூறுகிறார்...

என் தந்தை 'தினமணி'யில் ராசி பலன்கள் எழுதிப் புகழ் பெற்றதும் தமிழ்நாட்டின் பல ஊர்களுக்குச் சென்று ஒரு மாதம் முகாமிட்டு ஏழை முதல் வசதி படைத்தவர் வரை 'இவர் சொன்னால் சொன்னபடி நடக்கிறது' என்ற ஆழ்ந்த நம்பிக்கையைப் பெற்றார். என் தந்தையிடம் ஜோதிடம் பார்க்காத அரசியல்வாதிகள் யாருமிலர் என்றே சொல்லலாம். பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் நல்ல நண்பராகத் திகழ்ந்தவர் என் தந்தை. சுதந்தரப் போராட்டத்தில் தனது ஒரு கண்ணையே பறி கொடுத்த தியாகி. சிறுவயது முதல் இறக்கும் வரையில் கதர் ஆடை மட்டுமே அணிந்த தூய தேசியவாதி.

மதுரை நியூகாலேஜ் ஹவுஸ் ஹோட்டலில் அறுபத்தி ஆறாம் நம்பர் அறையில் நாற்பது வருடங்கள் ஜோதிட அலுவலகம் வைத்திருந்தார். அந்த அறை முன் சகல விவரங்களுடன் இருக்கும் போர்டுகள் எவரையும் அசர வைத்து விடும். திட சிந்தனை. தீர்க்கமான பேச்சு, அபாரமான ஞாபக சக்தி என் தந்தையிடம் இருந்தது. யுனானி, ஆயுர்வேதம், சித்த மருத்துவமும் முறைப்படி பயின்று டாக்டர் ஆகவும் என் தந்தை பலருக்குச் சிகிச்சை அளித்துப் பல நோய்களைக் குணப்படுத்தி இருக்கிறார். குறைந்த கட்டணத்தை போர்டில் எழுதி ஜோதிடத் தொழிலை நியாயமாகச் செய்தவர்.
கடைசி வரை வாடகை வீட்டிலேயே இருந்தவர். எளியோருக்கு வாரி வழங்கிய வள்ளல். எவரையும் சிரிக்க வைத்து விடும் நகைச்சுவைப் பேச்சாளர். திரைப்படக் கலைஞர்கள் பலரின் அபிமானத்தைப் பெற்றவர். 'அருட்செல்வர்' இயக்குநர் ஏ.பி. நாகராஜன் அவர்களின் ஆலோசகராகத் திகழ்ந்தவர். கைரேகை, ஜாதகப்படி பலருக்கு ஜோதிட பலன்களைச் சரிவரக் கணித்துக் கூறி பாராட்டுகள் பெற்றவர்.

பொறுப்பான, பாசமுள்ள குடும்பத் தலைவராகவும் என் தந்தை திகழ்ந்தவர். பத்து வயதில் உழைக்கத் தொடங்கி எழுபத்தி ஆறு வயது வரை, இறக்கும் வரை கடுமையாக உழைத்து எங்களை வாழ வைத்த என் தந்தையின் சுவையான ஜோதிட நிகழ்ச்சிகள் சிலவற்றை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.



'தினமணி' எஸ்.ரெங்கநாத ஜோஸ்யர்

போர்டுகளில் முழு விவரம்

விஜயா கண்ணன்

மதுரையில் நாற்பது வருடங்களுக்கு முன்பு மழை சிறிதும் இன்றி மக்கள் வாடியபோது 'இந்த மாதம் மழை உறுதியாகப் பெய்யும்' என்று என் தந்தை கூறிய ஜோதிடம் பலித்ததால் அப்போது மதுரையின் முக்கிய பிரமுகர்களாகத் திகழ்ந்த திரு. சிதம்பரம் முதலியார், திரு.பி.டி. ராஜன் (தற்போதைய தமிழகச் சட்டசபை சபாநாயகரின் தந்தை) ஆகியோர் ஒரு பெரிய விழா எடுத்து என் தந்தையைப் பாராட்டி 'கணித கலாநிதி' 'ஜோதிட வித்வான் எஸ். ரெங்கனாத ஜோஸ்யர்' என்ற பட்டம் அளித்துச் சிறப்பித்தனர்.

உயர் காவல்துறை அதிகாரி ஒருவர், போலீஸ் 'யூனிபார்முடன்' சிகரெட் புகைத்தபடி என் தந்தையிடம் ஜோதிடம் பார்க்க ஆபீஸ் உள்ளே வந்து அமர்ந்தார். 'சிகரெட் புகைக்கக் கூடாது' என்று அமைதியாக என் தந்தை அவரிடம் சொன்னார். அவரோ அலட்சியமாக 'உங்களுக்குத் தேவை ஜோதிடம் பார்க்கப் பணம்; தந்து விடுகிறேன். சிகரெட் புகைப்பது என் இஷ்டம்' என்று திமிராகக் கூறினார். அருகில் இருந்த எனக்குக் கோபம் வந்தது. ஆனால் என் தந்தை என்னைப் பேசக்கூடாது என்று தடுத்து அந்தக் காவல்துறை அதிகாரியிடம் 'அய்யா... உங்க இஷ்டப்படி சிகரெட் பிடிங்க. ஆனா நான் சொல்ற ஜோதிடப் பலன்கள் உங்களுக்குப் பலிக்காது' 'என்று நிதானமாக சொன்னதும் அந்த அதிகாரி என் அப்பாவிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, சிகரெட்டை வெளியே தூக்கி எறிந்து விட்டு, காலணிகளைக் கழற்றி வாசலில் வைத்து விட்டு பவ்யமாக வந்து அமர்ந்து ஜோதிடப் பலன்களைக் கேட்டார். 'ஜோதிடக்கலை தெய்விகக் கலை அதற்கு மரியாதை தாருங்கள்' என்று அறிவுரை கூறி அந்த காவல்துறை அதிகாரியைத் திருத்தி அனுப்பி வைத்தார் என் தந்தை.

● கோட், சூட் அணிந்து பெரிய மனிதர் போல் இருந்த ஒருவர், என் தந்தையிடம் ஒரு ஜாதகத்தைக் கொண்டு வந்து கொடுத்து பலன்கள் கேட்டார். என் தந்தை அந்த ஜாதகத்தைப் பார்த்த மறுநிமிடமே கோபமாக ஜாதகத்தைக் கிழித்து அந்தப் பெரிய மனிதர் முகத்தில் எறிந்தார். என் தந்தை அப்படி ஆவேசப்பட்டு அதுவரை பார்க்காத நான் அவரின் கோபத்தைக் கண்டு மிரண்டு விட்டேன். அந்த பெரிய மனிதரோ நிலை குலைந்து விட்டார். 'செத்துப்போன உன் பையன் ஜாதகத்துக்கு எதிர் கால பலன் கேட்டு என் ஜோஸ்யத்தைப் பரிட்சை பண்ண வந்தீரா? வெளியே போங்க' என்று அவரைப் பார்த்து என் தந்தை கர்ஜித்ததும், அந்தப் பெரிய மனிதர் என் தந்தையின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டு 'உண்மையிலேயே ஜோதிடம் பெரிய கலைதான். உங்களைப் போன்ற உண்மை ஜோதிடரை சோதிக்க நினைச்ச எனக்கு எந்த தண்டனையும் தாருங்கள் அய்யா' என்று அவர் கதறி அழுது விட்டார். பிறகு அவர் என் தந்தையிடம் தவறாமல் ஆலோசனை கேட்கும் ரசிகர் ஆகிவிட்டார்.

● அரசுத் துறை ஊழியர் ஒருவர் என் தந்தையிடம் தவறாமல் வந்து ஜோதிடம் பார்ப்பார். அவருக்கு இரண்டாவது மகன் பிறந்ததும் ஒரே வாரத்தில் ஜாதகம் எழுத வந்து விட்டார். என் தந்தையோ 'அடுத்த மாதம் வாருங்கள்' என்று கூறியனுப்பினார். 'ஏன் அவரை அப்படி திருப்பி அனுப்பினீர்கள்?' என்று என் தந்தையிடம் நான் கேட்டேன். 'அந்தக் குழந்தை அடுத்த மாதம் இருக்காது' என்று சர்வசாதாரணமாகக் கூறினார். என் தந்தை சொன்னது போல அந்த மாதக் கடைசியில் வந்த அந்த அரசு ஊழியர் தன் குழந்தை இறந்து போய்விட்ட சோகச் செய்தியை என் தந்தையிடம் சொல்லும்போது 'என் மூத்த பையனுக்கு பிறந்த உடனேயே ஜாதகம் எழுதித் தந்தீங்க.. இரண்டாவது பையனுக்கு மறுத்ததும் ஏதோ விஷயம் இருக்குன்னு அப்பவே நினைச்சேன்.. அது மாதிரியே நடந்திடுச்சு.. உங்களை மாதிரி ஜோஸ்யரைப் பார்க்கவே முடியாது' என்று சொல்லி விட்டுச் சென்றார்.

● தனியார் கம்பெனி உயர் அதிகாரி ஒருவர் ஜோதிடர் தன் பதவியைச் சரியாக சொல்கிறாரா பார்ப்போம் என்றெண்ணி தான் பியூனாக இருப்பதாக என் தந்தையிடம் சொன்னார். என் தந்தை சிரித்தபடி 'வீட்டிலே நீங்க பெண்டாட்டிக்குப் பியூன்தான். ஆனா ஆபீசிலே அதிகாரி' என்றதும் அவர் அசட்டுச் சிரிப்புடன், 'அய்யா.. சரியா சொல்லிட்டீங்க.. என் பெண்டாட்டி ராஜ்யம்தான் என் வீட்டில்...' என்றார். என் தந்தை சிரித்து அதை ரசித்தார்.

● பெருஞ் செல்வர் ஒருவர் மிக எளிமையான தோற்றமுடன் என் தந்தையிடம் ஜோதிடம் பார்க்க வந்தார். ஜோதிடம் பார்த்து முடித்ததும், 'அய்யா.. நான் பரம ஏழை.. உங்க ஜோஸ்ய பீஸை (பணத்தை)க் குறைச்சு வாங்கிக்கங்க' என்றார். என் தந்தை 'உங்க நெற்றி ரேகையே நீங்க வசதி உள்ளவர்னு காட்டுது. ஏழைன்னு சொன்னா ஏழையாகவே ஆயிடுவீங்க' என்றதும் அவர் துள்ளிக் குதித்து, 'சாமி.. அப்படியெல்லாம் சொல்லாதீங்க.. நான் வசதியுள்ளவன் தான். ஏழை ஆகக் கூடாதுன்னு ஆசீர்வாதம் பண்ணுங்க. உங்க பீஸைத் தந்துடறேன், குறைக்க வேணாம்' என்று தந்து விட்டுச் சென்றார்.

● ஒரு தம்பதி ஜோதிடம் பார்க்க வந்திருந்தனர். என் தந்தை அந்த கணவரிடம் 'இவங்க உங்க மூன்றாவது மனைவி' என்றார். அவர் 'ஆமாம்' என்று ஒப்புக் கொண்டார். அந்த மனைவியிடம், 'இவர் உங்க நாலாவது கணவர். சரிதானா?' என்றார். அந்தப் பெண்ணும் ஒப்புக் கொண்டார். ஜோதிடத்தில் என் தந்தை இப்படி பல விஷயங்களைத் துல்லியமாகக் கூறுவ...ப் பார்த்து நான் வியந்து போயிருக்கிறேன்.

● வரிசையாகத்தான் ஜோதிடம் பார்க்க அனுமதிப்பார். கலெக்டர், அதிகாரி என்றாலும் வரிசையில் தான் வர வேண்டும் என்பார். யாருக்கும் பயப்பட மாட்டார். ஜோதிட பலன்களைக் கைப்பட எழுதியே கொடுத்து விடுவார். 'நீங்க சொன்னபடி என் கடன் தீர்ந்தது.' என் மனைவிக்குக் குழந்தை பிறந்தது.. 'என் பையன் பரிட்சையில் பாஸ்

ஆயிட்டான்'. 'என் பெண்ணுக்கு வேலை கிடைச்சிடுச்சு' – இது போல பலர் என் தந்தையின் ஜோதிடம் பலித்துப் பாராட்டி செல்வதைப் பார்த்து வியந்திருக்கிறேன். வெளி நாட்டவரும் என் தந்தையிடம் ஜோதிடம் பார்த்துச் செல்வார்கள். என் தந்தையை பாராட்டி வந்த கடிதக் குவியல்களை அவர் வைத்துச் சென்ற சொத்தாகக் கருதுகிறேன். என் சகோதரன் ஆர். மோகன் என் தந்தைக்கு வாரிசாக ஜோதிடராக பலன்கள் சொல்லத் தொடங்கியிருக்கிறான். என் தந்தை பெற்ற நற்பெயரை என் தம்பி உறுதியாகக் காப்பாற்றுவான் என்று நம்புகிறேன்.

● அரசியல் நடப்புகள் பற்றி என் தந்தை சொன்ன ஜோதிடக் கருத்துகள் அப்படியேபலித்திருக்கின்றன. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். என் தந்தையிடம் ஜோதிடம் பார்த்து அவர் கூறிய ஜோதிடம் பலித்து, பாராட்டியுள்ளார். பாரதப் பிரதமர் ஆக இருந்து அனைவர் உள்ளங்களிலும் வாழும் திருமதி இந்திராகாந்தி, திரு. ராஜீவ்காந்தி என் தந்தைக்கு கைப்பட எழுதிய கடிதங்கள் உள்ளன. மறைந்த மதுரை மேயர் திரு. முத்து என் தந்தை மீது பாசம் கொண்டவர். தமிழக சட்டசபையின் தற்போதைய சபாநாயகர் திரு.பிடி.ஆர். பழனிவேல் ராஜன் என் தந்தையின் நல்ல நண்பராகப் பழகுபவர். என் தந்தை நல்ல ஜோதிடராக மட்டுமின்றி மனிதாபிமானம் மிக்க நல்ல மனிதராகவும் வாழ்ந்தவர் என்பதில்தான் எனக்குப் பெருமை. ●

நல்லதை நினை மனமே!

நிரம்பாத வயிறிலும் நிறைவாயிருப்பது நல்லது
நீங்காத் துயரினிலும் நீதிகளறிவது நல்லது
வரம்புகள் மீறாத வார்த்தையென்றும் நல்லது
வம்பு செய்வோரிடமும் அன்பு செய்வது நல்லது
அரும்புக்குள் மலருள்ளதை அறிந்திருப்பது நல்லது
அகிலமெங்கும் திறமையுள்ளதைப் புரிந்திருப்பது நல்லது
இரும்பைப் போலுறுதி மனத்திலிருப்பது நல்லது
இருளுக்குள்ளும் ஒளியைக் காண்பது நல்லது.

களங்கம் புறக்கணிக்கும் கண்ணுக்கு நிலவு நல்லது
கண்ணுக்குள் உண்மை காட்டிநிற்பது நல்லது
வளங்கள் நாட்டுக்கு வரமாயிருப்பது நல்லது
வறட்சி வரினும் உளம் சோராதிருப்பது நல்லது
குளத்து நீரில் தூய்மையிருப்பது குளிப்போர்க்கு நல்லது
குடியினில் அமைதி குலைவதையுணர்வது நல்லது
களத்தில் இறங்கிடின் கர்வம் துறப்பது நல்லது
கவனம் சிதறா நிலைதான் கற்பவர்க்கு நல்லது

தோல்வி யுற்றபின்மனம் துவளாதிருப்பது நல்லது
தொடர் முயற்சியில் வெற்றிபெறுவது நல்லது
வேள்வியாய் யாகமாய் வாழ்வைநினைப்பது நல்லது
வேகம் தவிர்த்து விவேகமாயிருப்பது நல்லது
கேள்விகள் கேட்டு தெளிந்துநடப்பது நல்லது
கேலிக்குள்ளாகித் தலை கவிழாதிருப்பது நல்லது
தோள்களில் பாரம் சுகமாயிருப்பது நல்லது
துன்பத்திலின்பம் காண்கின்ற மனது நல்லது.



பால சாண்டில்யன்

ரத் திருமகன் நேதாஜி

ஒரு நல்ல புத்தகத்தை ழுதிய ஆசிரியரைப் பாராட்ட ாய்ப்புக் கொடுத்தமைக்கு எனது ன்றி.

புத்தகத்தை எழுதியவர் ரதி காவலர் டாக்டர். ராமமூர்த்தி. வர் ஒரு பாரதி பக்தர் என்பது னைவருக்கும் தெரியும். ஒரு தீவிர தசியவாதி அவர். புத்தகத்தை வளியிட்ட கங்கை புத்தக நிலையம், திப்பாளர் திலகம் திரு. வானதி ருநாவுக்கரசு அவர்களுடையது. வரும் பழுத்த தேசியவாதி. தமிழில் திப்பாளர்கள் என்றால் முன்னணி ல் நிற்பவர் திரு வானதி திருநாவுக் ரசு என்று சிறுகுழந்தை கூடக் கூறி டும். ஆயிரக்கணக்கில் புத்தகங்களை வளியிட்டுள்ள அவர் பல தேசிய ாதிகளின் வரலாற்றைப் புத்தகமாக வளியிட்டுப் பெரும் பணியாற்றி வர். அவர் வெளியிட்ட தெய்வத் ன் குரல் அவரது Master Piece. அந்தப் ுத்தகத்தை வெளியிட்டமைக்காக ாசகர்கள் இன்றும் அவரை ாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த இருவரும் இணைந்து வளியிட்ட நல்ல நூல் வீரத்திருமகன் நதாஜி. எழுதியவரின் திறமும் வளியீட்டாளரின் திறமும் ுத்தகத்தில் தெரிகின்றன.


பொதுவாக வரலாற்று நூல் முதுவது மிகவும் கடினமான பணி. ருந்த ஆராய்ச்சி தேவைப்படும். திலும் இது போன்ற பிரபலமான மிப காலத்திய வரலாற்றை எழுதுவது கவும் கடினம். ஒரு சிறு முரண்பாடு ருந்தால் கூடத் தவறாகிவிடும். ரிந்து போய் விடும்.

நேதாஜியின் வரலாறும் ந்திய சுதந்திரப் போராட்டத்தின் ரலாறும் வேறு வேறு அல்ல. ரண்டும் ஒன்று தான். அந்த ளவுக்கு சுதந்திரப் போராட்டத்தில் டுபட்டவர் நேதாஜி அவர்கள். நதாஜி என்றால் தலைவர் என்று ான் அர்த்தம். யார் வேண்டு மானாலும் குறிக்கலாம். ஆனால் த்நாளில் காந்திஜி, நேரு, படேல், சித்தரஞ்சன்தாஸ், ராஜாஜி, மௌலானா அபுல் கலாம் ஆசாத் போன்ற மாபெரும் தலைவர்கள் அணிவகுத்து முன்னணியில் இருந்த பொழுது நேதாஜி என்றால் சுபாஷ் சந்திர போஸ் என்று Identify செய்யவும் அளவுக்கு தலைமைக்குணம் அவரிடம் பொதிந்து கிடந்தது என்பதை அறிகிற போது, அவர் மீதுள்ள பக்தி அதிகமாகிறது.

காந்திஜி போன்ற தலைவர்களின் தாக்கம் அவர் மீது ஏற்படும் முன்னரே வெள்ளையர் ஆதிக்கத்தின் மீது அவருக்கு வெறுப்பு ஏற்பட்டது. கல்லூரி நாள்களிலேயே ஓர் ஆங்கிலேயப் பேராசிரியரை எதிர்த்துப் போராட்டம் நிகழ்த்தியவர் சுபாஷ் சந்திர போஸ் என்று இந்தப் புத்தகத்தில் குறிப்பிடுகிறார் திரு ராமமூர்த்தி.

இன்னொரு விஷயம் இந்தப் புத்தகத்தில் கூறப்படுகிறது. சத்தியாகிரகப் போராட்ட முறையை காந்தியடிகள் தான் அறிமுகப்படுத்தினார் என்று கூறுவார்கள். ஆனால் அதற்கு முன்னரே, 1916ம் ஆண்டிலேயே சத்தியாகிரக இயக்கத்தை - ஒரு போராட்ட சாதனையைப் பயன்படுத்தி வெற்றி கண்டவர் சுபாஷ் சந்திரபோஸ் என்னும் விஷயத்தை இந்தப் புத்தகத்தில் கூறுகிறார் ராமமூர்த்தி.

சுபாஷ் சந்திர போஸ் ஓர் அரசியல் வீரர் மட்டுமல்ல. ஓர் ஆன்மீகவாதியும் கூட என்பதை மிக நயமாக இந்த நூலில் எடுத்துக் காட்டுகிறார். இமயமலைக் காடுகளில் துறவிகளைத் தேடி, வாழ்வின் பொருளை உணர, அலைந்திருக்கிறார். ராமகிருஷ்ணபரமஹம்ஸரின் உபதேசங்களை ஊன்றிப் படித்திருக்கிறார். ஆன்மீக அனுபவம் பெறுவதே அவரது ஆரம்பகால லட்சியமாய் இருந்திருக்கிறது. அப்போது திலகரும் விபின் சந்திர பாலும், லாலா லஜ்பதிராயும் மூட்டிய சுதந்தர வேள்வித்தீதான் போஸை, சுதந்தரப் போராட்ட வேள்வியில் ஈடுபடத்தூண்டியது, சுவாமி விவேகானந்தரின் போதனைகள் தாம்



நேதாஜியை

- ஓர் ஆன்மீகவாதியாக,
- அரசியல் நேர்மையாளராக
- கொள்கை வீரராக
- இயக்கத் தலைவராக
- படைத் தளபதியாக
- மாவீரராக

இந்தப் புத்தகத்தில் மிக நயமாகக் காட்டப் பட்டிருக்கின்றன.

நான் பள்ளியில் படிக்கிற போது Non-Detailed என்று ஒரு புத்தகம் உண்டு. இப்போது எப்படியோ தெரியவில்லை. இந்தப் புத்தகத்தை அப்படி ஒரு பாடப் புத்தகமாகப் பள்ளிகளில் வைக்க வேண்டும்.

நேதாஜியின் நூற்றாண்டு விழாவில் இது நிகழுமானால், வரும் தலைமுறையினருக்கு, அவரை நினைவு கூர வேறு சிறந்த முறை தேவையில்லை.

காந்தியடிகளின் மித வாதத்தில் நம்பிக்கை இல்லாவிடினும் அவரது தலைமையைப் பூரணமாக நம்பியவர் நேதாஜி. காந்திஜியின் தலைமை ஏற்றுப் போராட்டங்களில் ஈடுபட்டுப் பலமுறை சிறை சென்று சிறையின் பரிசாய்க் காசநோயைப் பெற்றுக் கொண்டவர். இப்போது இருப்பது போல் சிறைவாசம் என்பது ஒரு சௌக்யமான வசதியாக அந்தக் காலத்தில் இருக்கவில்லை. இப்போதெல்லாம் சிறையிலிருந்து வெளிவருகிறவர்கள், ஆரோக்யம் அபிவிருத்தியாகி, நன்றாக வெளிவருவதைப் பார்க்கிற நமக்கு, நமது தலைவர்கள் சிறையில்

எவ்வளவு பாடுபட்டிருக்கிறார்கள் என்று அறியத் துயரமாயிருக்கிறது.


இந்த நூலைப் படித்து முடித்ததும் மனத்தில் ஏக்கம் எழுகிறது. சுதந்தரப்போராட்டத்தில் அர்ஜுனராய் இருந்திருக்க வேண்டியவர், அநியாயமாய் அபிமன்யுவாய் மறைந்து போனாரே என்ற துக்கம் எழுகிறது. 48 ஆண்டுகளே வாழ்ந்த அவர் சாதனைகளைக் கண்டு பிரமிப்பு எழுகிறது. சுதந்தர இந்தியாவில் இவர் பதவி வகித்திருந்தால், இந்தியாவின் வளர்ச்சி வேறு விதமாய் இருந்திருக்குமோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

தனி ஒரு மனிதராய், ஒரு படை திரட்டுவதும், ஆஜாத் ஹிந்த் பாங்க் என்று ஒரு வங்கியைத் தொடங்குவதும், அவரது நிர்வாகத் திறனையும், பொருளாதாரப் புலமையையும் நமக்குத் தெளிவு படுத்துகின்றன.

ஒரு நல்ல புத்தகத்தை எழுதிய பாரதி காவலருக்கு எனது பாராட்டுகள். மேலும் இது போன்ற சுதந்தரப் போராட்ட வீரர்கள் பலரது வாழ்க்கை வரலாற்றை எழுத வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தலைவர்களை நாம் மறந்து விட்டோம். இலைகளாய், பூக்களாய், கனிகளாய் வெளியே தெரிந்தவர்களைத் தவிர, வேர்களாய்ச் சுதந்திரப் போராட்டத்திற்குப் பாடுபட்டவர்கள் எத்தனையோ பேர். அவர்களது வாழ்க்கை வரலாற்றினை புத்தகமாய் வெளியிட ராமமூர்த்தியும், வானதி திருநாவுக்கரசு அவர்களும் முனைய வேண்டும்.

இந்த நல்ல புத்தகத்தை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.


- ஜெயரதன்




பிறவியின் பாடு

ரமணன்

முற்றிய ஆசை முழுவினையாகி
முப்பெருமாயை மூண்டெழலாகி
விற்றனவெல்லாம் விழுதுயர்காண
வித்தெனுமாயம் மதிவிடுத்தோட
பற்றிய வாழ்வில் படுநெடுதூரம்
பத்துடன் ஆறு நதிகளைநாடி
பெற்றது எதனை பெருவழியாது
பித்தென நோகும் பிறவியின் பாடே...



சுற்றமுயர்ந்து சூழல் சிறந்து
சுத்தம் நிறைந்து சோகம் தவிர்த்து
முற்று முணர்ந்தோன் ஒருவன் என்னும்
முழுமை தெரிந்து முதுமை பணிந்து
வெற்றி விழைந்து வீரம் செறிந்து
வேகம்விவேகம் சேரவுயர்ந்தால்
பெற்றது பதவி பெருவழி நோன்பு
பித்து மறந்த பிறவியின் பாடே...



கற்றது கைம்மண் கருத்திலுறைந்து
கடுகளவாகித் தேய்ந்தது இங்கே
இற்றதகந்தை எதிர்த்தது ஞானம்
இடையிலுயர்ந்து வென்றது காலம்
உற்றது இன்பம் உருவகமென்னும்
உடைவிழலாக உதவிய கையால்
பெற்றது எதனை பெருவழி யாது
பிடியில் மயங்கும் பிறவியின் பாடே...

அற்றவை நீத்து அறவழி சேர்த்து
ஆர்வலரெல்லாம் அறிவு நிறைத்து
செற்றமுடைத்து சிறுமை பெயர்த்து
சேர்ந்துயர் மனிதம் செவ்வழி சென்று
நற்றவமென்றும் நாட்டுயர்வென்றும்
நட்புணர்வென்றும் நன்னெறி கண்டால்
பெற்றது பதவி பெருவழி நோன்பு
பிடியில் நிறைந்த பிறவியின் பாடே...

ஸ்ரீதேவி காமாட்சி கோயில்

சுவர்ண பந்தன கும்பாபிஷேகத் திருவிழா

லக்ஷ்மி விஸ்வநாதன்

தலைநகர் தில்லியிலே மிகப் பிரசித்தி பெற்ற அநேக கோயில்களுள் காஞ்சி காமகோடி பீடத்தின் தலைமையில் இருப்பது ஸ்ரீ காமாட்சி அம்மன் கோயிலும் ஒன்று.

இக்கோயிலில் நவம்பர் 9ஆம்தேதி சுவர்ண பந்தன கும்பாபிஷேகம் நடை பெற்றது. ஜகத்குரு ஸ்ரீ சங்கர ஜயேந்திரசுவாமிகள், பால பெரியவர் ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆகியோர் முன்னிலையில் கும்பாபிஷேகம் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது. பந்தனம் என்பது அம்பாளை கர்பக் கிருஹத்தில் பீடத்தில் அமர்த்தி ஸ்திரப்படுத்துவது. இந்த பந்தனத்தைச் செய்யாவிடில் அம்பாள் அமர்ந்திருக்கும் பீடம் தனியாகப் பிரிந்து விடுவதால், நாம் ஆகம விதிப்படி எவ்வளவோ பூஜைகள் செய்தும் ஒருவித பயனும், பலனும் இருக்காது. எனவே 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பந்தனம் செய்து அம்பாளை பீடத்தில் அமர்த்தி ஸ்திரப்படுத்த வேண்டும் என்று சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது. மூலிகைகள், வேர்களைக் கொண்டு பந்தனம் செய்து அம்பாளை பீடத்தில் அமர்த்தினால், அம்பாளுக்கு தெய்வீகம் கூடும்.

அதன்படி ஸ்ரீதேவி காமாட்சி அம்பாளுக்கு சுவர்ணத்தினால் பந்தனம் செய்து பீடத்தில் அமர்த்தி ஸ்திரப்படுத்தி, கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஒரு முறை சுவர்ணபந்தனம் செய்தால் 100 ஆண்டுகளுக்கு சுவர்ண பந்தனத்தின் மகிமை இருக்கும் என்று வாமதேவபத்ததி என்ற சாஸ்திரத்தில் சொல்லி இருக்கிறது. அன்பர்களும், பக்தர்களும், பொது மக்களும் தங்கமும், தனமும் நன்கொடையாகக் கொடுத்து மிகச் சிறப்பாக சுவர்ணபீடம் அமைத்து, வெகு சிறப்பாக கும்பாபிஷேகமும் நடத்தினார்கள். தில்லிக்கு விஜய யாத்திரையாக வந்த ஜகத்குரு ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளும், பால பெரியவர் ஜகத்குரு விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளும், தேவி காமாட்சி அம்பாளின் கோயிலில் தங்கி, சுவர்ணபந்தன கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தார்கள். சுவாமிகளின் முன்னிலையில் நடந்த கும்பாபிஷேகத்தையும், சுவர்ண பீடத்தில் அமர்ந்திருக்கும் தேவி காமாட்சியையும் தரிசிக்க மக்கள் திரளாகக் கூடி வந்தார்கள்.

கும்பாபிஷேகத்திற்கு முன்னாள் ஜனாதிபதி திரு.ஆர்.வெங்கட்ராமன், ஜஸ்டிஸ் ரங்கநாத் மிஸ்ரா போன்ற பிரமுகர்கள் பலரும் வந்து இரு சுவாமிகளையும் தரிசித்து அம்பாளையும் தரிசித்து அருளாசி பெற்று கும்பாபிஷேகத்திலும் கலந்து கொண்டனர்.

மிகச் சிறப்பாக, சிறந்த முறையில் நடைபெற்ற இந்த சுவர்ணபந்தன கும்பாபிஷேகத்தை நடத்திய தேவி காமாட்சி அம்மன் கோயில் நிர்வாகிகளும், அங்கத்தினர்களும், பொது மக்களின் ஒத்துழைப்புடன் சேர்த்து நடத்திய இந்தக் கும்பாபிஷேகத்தை எவ்வளவு பாராட்டினாலும் போதாது. மிகச் சிறப்பாக நடந்த சுவர்ணபந்தன கும்பாபிஷேகத்தினால் தில்லி வாழ் மக்கள் இரு சுவாமிகளின் நல் ஆசியும், அம்பாளின் அருளாசியும் பெற்று வளமுடனும், நலனுடனும் வாழ்வார்கள் என்பதில் ஐயமில்லை.

[பந்தனத்தைப் பற்றிய தகவலை எழுதியவர் டாக்டர் V. வைத்யநாதன், M.A., Phd. குருக்கள், மலைமந்திர்.]





தனிமையில் இனிமை கண்டேன்

6

கோயிலிலிருந்து வெளியே வந்தபோது அந்த உயரமான இளைஞன் எதிர்ப்பட்டான். அவன்தான் முதலில் வாணியை அடையாளம் தெரிந்து கொண்டான்.

"அட! நீங்களா? இங்கே எப்படி...?" என்று அவன் கேட்ட பிறகுதான் தன்னைக் குறுகுறுவென்று பார்த்துக் கொண்டிருந்த அந்த இளைஞன் யார் என்பது அவளுக்குப் புரிந்தது.

"அட குமார்! சவுக்கியமா?"

"சவுக்கியம். நீங்கல்லாம்?"

"நாங்களும் சவுக்கியம்."

"அதுசரி, எங்கே இப்படி மதுரைக்கு வந்தேள்? யாராவது சொந்தக்காரங்க இருக்காங்களா?"

"இல்லை. போனவாரம் நாங்க மதுரைக்கு வந்தோம். இங்க எனக்கு வேலை கிடைச்சிருக்கு, குமார்!" என்ற வாணி விஷயத்தைச் சொன்னாள். அவன் அவளிடம் முகவரியைக் கேட்டுத் தெரிந்து கொண்டான். தனது முகவரியையும் கொடுத்தான்.

'ஒரு நாள் ஆத்துக்கு வாங்களேன் எல்லாரும்.. நானும் ஞாயிற்றுக்கிழமையாப் பார்த்து வரேன். ஞாயிற்றுக்கிழமை லீவ்தானே?"

"ஆமா நீ முதல்லவா.அப்புறம் நாங்கவரோம்.'

"ஆகட்டும். அது சரி, பாட்டைக் கத்துண்டிருக்கேள் தானே? நிறுத்திடல்லையே?"

குமார் தன்னைப் பன்மையில் விளித்ததை அவள் மனத்தில் வாங்கித் தனக்குள் சிரித்துக்கொண்டாள்.

"ஊர்ல இருந்த வரையில சொல்லிண்டேன். இனிமே இங்க சேரணும். நீதான் ஏற்பாடு பண்ணணும், குமார்!"

"வர்ற ஞாயிற்றுக் கிழமையன்னைக்கு வரேன்.. அப்ப எல்லாம் விவரமாப் பேசலாம். அதுக்குள்ள நானும் பாட்டு வாத்தியார் பத்தி விசாரிச்சு வைக்கிறேன். சரியா?"

"சரி குமார். அப்ப நாங்க வரட்டுமா?"

அவன் கிளம்பியதும், "யாருடி அவன்?" என்று அம்புஜம் விசாரித்தாள்.

"நெடு நெடுன்னு ஒசந்துட்டான். அதான் உனக்கு அடையாளம் தெரியலை. ஊர்ல என்னோட கோயில் கச்சேரிக்கு மிருதங்கம் வாசிச்சானே அந்தப் பையன், அம்மா!"

"ஆமா. நீ சொன்னதுக்குப் பிறகுதான் அடையாளம் தெரியறது. என்ன வயசு இருக்கும் அவனுக்கு?"

அம்மாளின் மூளை சிந்திக்கத் தொடங்கிய கோணம் புரிய, வாணியின் மனத்தில் ஓர் எரிச்சல் பரவியது.

"என்னை விட ரெண்டு வயசு சின்னவன்!" என்றாள், சிரிப்பை அடக்கிக்கொண்டு.

"தெரியுமா உனக்கு?"

"தெரியும்."

"எப்படித் தெரியும்?"

"அவனோட அத்தைதான் சொன்னா. என் வயசைக்கேட்டா. சொன்னேன். சொன்னதும்

அமுதசுரபி – பார்க் டவுன் பெனிபிட் பண்ட் இணைந்து நடத்திய புதினப் போட்டியில் ரூ.10,000 பரிசு பெற்ற நாவல்

ஜோதிர்லதா கிரிஜா

அவனோட வயசைச் சொன்னா". தான் பொய் சொல்லிக் கொண்டிருந்தது தெரிந்தும் அவள், மேலும் சிரிப்பையடக்கியபடி அவ்வாறு கூறினாள்.

அவர்கள் வீட்டுக்குப் போக வாய்க்கும்போது தன் அம்மா தத்துப்பித்தென்று தன் திருமண விஷயமாக ஏதேனும் பேசிவிடப்போகிறாளே என்கிற அச்சத்தில் அவ்வாறு அவள் சொன்ன போதிலும், அது தவறல்லவா என்றும் தோன்றியது.

"வெத்திலைப்பட்டியில அன்னைக்கு அவனைப் பார்த்தப்ப பெரியவனாத் தெரிஞ்சானே!"

"அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்றே?"

"உனக்கு ஏண்டியம்மா இவ்வளவு கோவம் வருது?"

தாயும் மகளும் ஆடிய கண்ணாமூச்சி யாட்டத்தை ரசித்தபடி அனந்தராமன் அவர்களோடு நடந்தார். சாருமதியும் சிரிப்பையடக்கிக் கொண்டு நடந்தாள்.



... சொன்னபடியே ஞாயிற்றுக் கிழமையன்று குமார் வந்தான்.

வாணி அவன் விசாரித்தவற்றுக்கெல்லாம் பதில் சொல்லிவிட்டு, ''அது சரி. நீ இப்போ என்ன பண்ணிண்டிருக்கே?'' என்றாள்.

''நான் ஒரு ப்ரைவேட் கம்பெனியில ஸ்டெனோவா யிருக்கேன். ஐந்நூறு ரூபா சம்பளம். நீயும் ஷார்ட்ஹேண்ட் கத்துக்கோ... ஐம் ஸாரி... கத்துக்குங்கோ. வேலை சீக்கிரம் கிடைச்சுடும்.''



''நீங்க சொல்றபடியே செய்யறேன், மிஸ்டர் குமார்! மதுரையில நீங்கதான் எனக்கு வழிகாட்டி!''

என்று அவள் சிரித்தபடி பதிலிறுக்க, அவன் முகம் சிவந்து சிரித்தான்.

"லேடீஸ் கிட்ட வயசு கேக்கக்கூடாதும்பா. இருந்தாலும் கேக்கறேன்..."

"எனக்கு இருபத்திரண்டு முடிஞ்சு மூணுமாசம் நேத்தோட முடிஞ்சுது. அங்கே எப்படி?"

"எனக்கு நேத்து இருபத்திரண்டு முடிஞ்சு எழுபது நாள் ஆகிறது" என்றான் குமார், விரல் மடக்கிக் கணக்குப் போட்டு.

"அப்ப உன்னை விட நான் இருபதே நாள்தான் பெரியவ! இந்தச் சின்ன வித்தியாசத்துக்காக நீ என்னை வாங்க, போங்கங்கணுமாக்கும்! அழகுதான்! வாடி, போடின்னு சொல்லாம இருந்தாப் போறாதாக்கும்!"

"அதானே!" என்று அவனும் சிரித்தான்.

பொதுவாகப் பேசிக்கொண்டிருந்தபின், அவள் அவனை மேரி ஜார்ஜிடம் அழைத்துச் சென்றாள்.

கல்லூரிப் படிப்பை முடித்திருந்ததால் குமார் மேரி ஜார்ஜுடன் சரளமாக ஆங்கிலத்தில் உரையாடினான். படபடவென்று தமிழைப் பேசுவது போன்று அவன் ஆங்கிலத்தையும் கையாண்டது கண்டு அவளுக்கு வியப்பு ஏற்பட்டது.

"நீ ரொம்ப நன்னா இங்கிலீஷ் பேசறே குமார்!"

"பழகினா உனக்கும் வரும். இன்னும் சொல்லப்போனா பொம்பளைகளுக்கு ரொம்பவும் நன்னாவே பேசவரும்!" என்று அவன் குறும்பாய்க் கண் சிமிட்டினான்.

மேரி ஜார்ஜ் சிரித்தாள். "பொம்பளைகளைக் கேலி பண்றதுன்னா உங்களுக்கெல்லாம் குஷி!"

தான் அங்கு தட்டெழுத்துப் பொறியில் பயிற்சி பெற்று வருவது பற்றியும் வாணி அவனுக்குத் தெரிவித்தாள்.

"முப்பது வார்த்தையாவது ஸ்பீடு வந்துடுத்துன்னா ஒரு டைப்பிஸ்ட் வேலையில அமர்ந்துடலாம் நீ!" என்று சொல்லிவிட்டு அவன் நாக்கைக் கடித்துக் கொண்டான். மேரி ஜார்ஜ் என்ன நினைப்பாள்?

அவன் சற்றே அசடு தட்டிப்போன முகத்துடன் அவளை ஏறிட, அவளோ சிரித்தாள்: "ஆமா. டைப்பிங்ல எக்ஸாமும் பாஸ் பண்ணிட்டா கவர்ன்மென்ட் ஜாபே கிடைச்சுடும் வாணிக்கு!" என்றாள் பெருந்தன்மையாக.

"அது இப்போதைக்கு இல்லை, மிஸஸ் ஜார்ஜ்! நிறைய நாள் உங்களோட இருந்து உங்களுக்கு நிறைய அளவில உதவிகள் செஞ்சு முடிச்ச பிறகுதான் வேற வேலை தேடறதைப் பத்தி யோசிப்பேன்!" என்றாள் வாணி.

"சரி. நீங்க இரண்டு பேரும் பேசிட்டிருங்க. நான் மைக்கேலை டீ போடச் சொல்லிட்டு வரேன்."

மேரி ஜார்ஜ் அகன்றதும், "என்ன குமார்? பாட்டு வாத்தியார் பத்தி விசாரிச்சியா?" என்று கேட்டாள் வாணி.

"ஓ. இங்க பக்கத்துத் தெருவிலேயே சுந்தர பாகவதர்னு ஒருத்தர் இருக்கார். அவர் எங்கப்பாவுக்கெல்லாம் ரொம்பத் தெரிஞ்சவர். அவரைப் போய்ப் பார்த்துப் பேசினேன். உனக்குச் சொல்லித் தரேன்னிருக்கார்."

"சம்பளம் நிறைய கேப்பாரோ? இங்கெல்லாம் ஜாஸ்தியாயிருக்குமே, குமார்?"

"அதெல்லாம் நீ கவலையே படாதே, வாணி! சம்பளம் வாங்காமலே உனக்குச் சொல்லித்தர ஏற்பாடு பண்ணிட்டேன்."

"அய்யய்யோ! அது தப்பாச்சே! குரு தட்சிணைன்னு கொடுக்காம எந்த வித்தையையும் கத்துக்கக் கூடாது, குமார்!"

"நல்ல வசதிக்கு வந்தப்புறம் நீ என்ன ஏமாத்திடவா போறே? உங்க குடும்பத்து நிலைமை பத்தியெல்லாம் சொன்னேன். உன் பாட்டு ஜோரா யிருந்ததுன்னா சம்பளம் வாங்காம உன்னை முன்னுக்குக் கொண்டு வர்றதாச் சொல்லி யிருக்கார்.'"

"அப்ப என்னிக்கு என்னை அவர்கிட்ட கூட்டிண்டு போவே?"

"இன்னிக்கே கூட நீ வரத் தயாராயிருந்தா கூட்டிண்டு போறேன். உங்கப்பாவோ அம்மாவோ நம்ம கூட வந்தா நன்னாருக்கும். அதுதர்னே மரியாதை? சின்னப் பசங்களாப் போய்ப் பேசப்படாதில்லையா?"

"ஆமா. நான் எங்கப்பாவையே கூட்டிண்டு வரேன். எங்கம்மா லொடலொடன்னு எதையாவது உளறிவைப்பா!"

"சரி"

மைக்கேல் பின் தொடர, ஒரு தட்டில் தேநீரும் பிஸ்கட்களும் வந்தன. மூவரும் உண்டார்கள். சற்றுப் பொறுத்து மேரி ஜார்ஜிடம் விடை பெற்றுக்கொண்ட பின் வாணியும் குமாரும் வெளிவீட்டுக்குப் போனார்கள்.

"அப்பா! ட்யூஷன் ஃபீஸே இல்லாம நான் பாட்டுக் கத்துக்கறதுக்குக் குமார் சுந்தர பாகவதர்ங்கிற பாட்டு வாத்தியார் கிட்ட சொல்லி ஏற்பாடு பண்ணி யிருக்கானாம்ப்பா! இப்பவே வரச் சொல்றான். எங்க கூட வரேளாப்பா?"

"ஓ! பேஷா வரேன்!" என்ற அனந்தராமன் சட்டையை மாட்டிக்கொண்டு புறப்படத் தயாரானார்.

சொக்கி குளத்தில் இருந்த சுந்தரபாகவதர் அன்று பாட்டு வகுப்புக் கிடையாதாகையால் ஓய்வாகத் தம் வீட்டு வாசல் வராந்தாவில் உட்கார்ந்து மெல்லிய குரலில் காம்போதியை முனகிக் கொண்டிருந்தார்.

"சார்!"

கண்திறந்து பார்த்த சுந்தரபாகவதர், "அடடே. வாப்பா, வா. நீ சொன்ன பொண்ணு இவதானா? வாம்மா"

வாணி கை கூப்பினாள். அனந்தராமனும்.

"நமஸ்காரம்!"

"நீங்க பொண்ணோட தகப்பனாரா? வாங்கோ. உள்ளே போய் உக்காந்து பேசலாம்."

மூவரும் அவரைப் பின் தொடர்ந்து சென்றார்கள்.

"உக்காருங்கோ!"

சுந்தர பாகவதரும் அனந்தராமனும் நாற்காலிகளில் அமர, இருவருக்கும் சற்றே தள்ளி வாணியும் குமாரும் தரையில் அமர்ந்தார்கள்.

"குமார் எல்லா விஷயமும் சொன்னான். வாணிதானேம்மா உன்பேரு?"


சிறுவயல் செயமணி



அசுத்தம் நிறைந்த
மனிதர்களின்
வெப்ப மூச்சிலிருந்து
காற்று வெளி
தன்னை எப்படிக்
காப்பாற்றிக் கொள்ளும்?


கள்ள மனிதர்களின்
கொள்ளிக் கண் பார்வையால்
தனக்கேற்பட்டுவிட்ட
கண்ணேறுதனைக்
கதிரவன் எப்படிக் கழிப்பான்?

பாவம் சுமக்கும்
அவர்கள் உடல் குளிப்பில்
களங்கப்பட்ட நதிகள்
தங்களை எங்கே
கழுவிக் கொள்ளும்?



நச்சு மனிதர்கள்
நடந்து பதித்த வடுக்களைச்
சிகரங்கள் எப்படித்
தாங்கிக் கொள்ளும்?

ஓ! எல்லாவற்றிற்கும்
சேர்த்துத்தான்
பூமித்தாய்
பொங்குகிறாள் பூகம்பமாய்!



''ஆமா.''

''ஒரு பாட்டுப் பாடும்மா.''

வாணி சில நொடிகள் எடுத்துக் கொண்டபிறகு, 'உன்னையல்லால் வேறே கதி எனக்குண்டோ?' எனும் சிம்மேந்திர மத்தியம ராகப் பாடலைக் கணீரென்று பாடத் தொடங்கினாள். தமது நாற்காலியில் தளர்வாக உட்கார்ந்திருந்த சுந்தரபாகவதர் பல்லவியின் இரண்டாவது சங்கதியின் போதே விழிகள் விரிய நெட்டுக்குத்தானார். அவரது வீட்டின் உட்புறத்திலிருந்து ஒரு மாமியும் ஓர் இளநங்கையும் எட்டிப் பார்த்தார்கள். பார்த்தவர்கள் உள்ளே திரும்பிப் போய்விடாது அப்படியே நின்றார்கள்.

தம் மகளின் இசை எல்லாரையும் கட்டிப் போட்டுவிட்டதை அனந்தராமன் புரிந்துகொண்டு அப்படியே பூரித்துப் போனார். முகத்து மலர்ச்சியை மறைத்துக்கொள்ள முடியாமல் திண்டாடினார்.

வாணி பாடி முடித்ததும், ''பேஷ்! பேஷ்! ரொம்ப நல்ல குரல் அம்மா உனக்கு! இது மாதிரியான ஒரு குரல் எல்லாருக்கும் அமைஞ்சுடாது. பாடிப்பாடிப் பண்படுத்திக்க வேண்டிய அவசியமே இல்லாத வரப்பிரசாதக் குரல் உன்னோடது கொழந்தே! உனக்குச் சொல்லிக் குடுக்கிறதுக்கு யாருக்குத்தான் கசக்கும்? நீ நாளையிலேருந்தே வரலாம்மா!'' என்றார் சுந்தரபாகவதர் புன்முறுவலுடன்.

''ரொம்ப தேங்க்ஸ், மாமா!''

''பீஸ் எவ்வளவுன்னு..'' என்று இழுத்தார் அனந்தராமன்.

''இப்பசத்தியா ஃபீஸ் எதுவும் வேண்டாம், சார்! உங்க பொண்ணுக்கு ஒரு நல்ல வேலை கிடைச்சு, உங்க குடும்பமும் மதுரையில் கால் ஊன்றின பிற்பாடு குடுத்தாப் போதும்... கூச்சமில்லாம வந்து சொல்லிண்டு போம்மா. உங்க ஊர்ல யாரு உனக்குப் பாட்டுக் கத்துக் குடுத்தா?''

திண்டுக்கல்லிலிருந்து பிழைப்புக்காக ஊருக்கு வந்த வாத்தியார் பற்றியும், பெரும்பாலான பாட்டுகளைத் தன் கேள்விஞானத்தில்தான் கற்றுப் பாடிவருவதையும் மற்ற விவரங்களையும் வாணி அடக்கத்துடன் அவருக்குத் தெரிவித்தாள்.

வாணி சற்று நேரம் கழித்து அவருக்கு முன்னால் விழுந்து வணங்கியபிறகு அனந்தராமனுடனும் குமாருடனும் புறப்பட்டாள். அவளது உள்ளம் துள்ளிக்கொண்டிருந்தது. 'இனி என்ன! எனக்குப் பிடித்தமான வாழ்க்கை – இசை வாழ்க்கை அமையப்போகிறது!'

வழியில், ''குமார்! உனக்கு எப்படி என்னோட நன்றியைத் தெரிவிக்கிறதுன்னே தெரியலை. இது வாய் வார்த்தையாத் தெரிவிக்கக் கூடிய நன்றி இல்லை. நான் எப்படித்தான் இந்தக் கடனைத் தீர்க்கப் போறேனோ, தெரியலை!'' என்றாள் வாணி. அவளது குரல் தழுதழுத்தது. கண்கள் கலங்கியிருந்தன.

''என்னது நீ! நீ பெரிய பாடகியா வந்ததுக்கப்புறம் உன்னோட கச்சேரிகள்ல மிருதங்கம் வாசிக்கிறதுக்கு என்னை அனுமதிச்சியானா, அதுவே பெரிய உதவிதான்! செய்வியா, இல்ல, ரிஜெக்ட் பண்ணிடுவியா?'' என்று கேட்டுவிட்டு அவன் சிரித்தான்.

அனந்தராமனுக்கும் சிரிப்பு வந்தது. ''என்னப்பா இது? வாணி சங்கீத உலகத்துல முன்னுக்கு வந்தாள்னா, அதுக்குண்டான பெருமையெல்லாம் உனக்குத்தான். உன்னைப் புறக்கணிச்சுட்டு நாங்க எங்க போறது?''

''அது சரி, நீ மிருதங்கத்துல எந்த அளவுக்கு வந்திருக்கே?''

''கிட்டத்தட்ட எல்லாம் கத்துண்டாச்சு. என் வழியில நான் அப்பியாசம் பண்ணி உன்னை மாதிரி சீனியர் வித்துவான்களுக்கு வாசிக்க முடியணும்! அதுதான் இப்ப என்னோட கவலை!''

''அடிச்சேன்னா!''

''அது சரி. வாரம் மூணுநாள் க்ளாஸ் இருக்கும். மிஸஸ் ஜார்ஜ் உன்னை விடுவாங்களா?''

''அதெல்லாம் விடுவாங்க. நானென்ன எப்பவுமே அவங்களுக்கு எழுதிக் குடுத்துண்டா இருக்கப் போறேன்? நீ இப்ப யார் கச்சேரிக்கும் மிருதங்கம் வாசிக்கப் போறதில்லையா?''

''போறேனே! எப்பவானும்தான். அநேகமா உள்ளூர் வித்துவான்கள் எல்லாருக்குமே

வாசிச்சிருக்கேன். நீ சங்கீத உலகத்துல ஒரு நிலையான இடத்தைப் பிடிச்சுட்டியானா, அதுக்கப்புறம் நீ என்னை ஏத்துண்டா, உனக்கு மட்டும் நிரந்தர மிருதங்கிஸ்ட்டா இருந்துடலாம்னு!"

"உன் வாய்ப் பேச்சு பலிக்கட்டும்ப்பா!" என்றார் அனந்தராமன்.

"ஏய்! என்னது நீ? 'என்னை ஏத்துண்டா, அது இது'ங்கறே! இப்ப நான் கத்துக்கப்போற சங்கீதம் நீ போடற பிச்சை!"

"அப்படியெல்லாம் பேசாதே. எனக்குக் கோபம் வரும்!"

"சரி, சரி, ரெண்டு பேரும் சண்டை போட்டுக்காதேங்கோ!" வீடுவரை வந்தபின் அவன் விடைபெற்றான்.

...மேரி ஜார்ஜ் இரண்டு தலைமுறைகளாக இந்தியாவில் இருந்து வருபவளாதலால் கர்னாடக இசையை ரசிக்க அவளுக்குத் தெரிந்திருந்தது. அவளுக்கு ஆங்கில மரபு இசையில் பயிற்சி இருந்ததால் அவளால் கர்னாடக சங்கீதத்தின் நெளிவு சுளிவுகளை ஏற்க முடிந்தது. அதிலும் கர்நாடக இசைக்கே சொந்தமான கமகத்தை – அதைச் சொல்லிச் சொல்லி – அவள் ரசித்த அழகே தனி. இதனாலெல்லாம் வாணி வாரத்தில் மூன்று நாள்கள் பாட்டுச் சொல்லிக்கொள்ள மூன்று மணிநேரம் போல் சென்று வருவதற்கு அவளது அனுமதி மிக எளிதாய்க் கிடைத்து விட்டது.

..சுந்தர பாகவதரின் மாணவ மாணவிகளிடையே மிகக் குறுகிய காலத்துக்குள்ளேயே வாணி புகழ் பெற்றவளானாள். அவளது குரல்வளம் அப்படி ஈர்த்தது. சிலருடைய வியப்பையும் பலருடைய பொறாமையையும் சந்திக்க நேர்ந்தது

ஒருவாரம் கழித்து, குமார் வாணியையும் அம்புஜத்தையும் தன் வீட்டுக்கு அழைத்துப் போனான்.

அன்று ஞாயிற்றுக் கிழமையாதலால் எல்லாருமே வீட்டில் இருந்தார்கள். ஒருவருக்கொருவர் அறிமுகம் ஆனதன் பிறகு குமாரின் அம்மா பார்வதி, "உன் பாட்டைப் பத்தி உங்க ஊர்லேருந்து வந்ததுமே இவர் கிட்ட நான்

சொன்னேன். ஒரு குக்கிராமத்துல குடத்துக்குள்ள வெச்ச விளக்கா வெளியே தெரியாம உன்னோட சாமர்த்தியம் இப்படி மங்கிப் போறதேன்னு இவர் ரொம்ப வருத்தப் பட்டுண்டார். எங்கே? ஒரு பாட்டுப்பாடு, கேட்போம்!'' என்றாள்.

''ஒரு பாட்டா! சரியாப்போச்சு! ஒரு பாட்டோட இவளை விட்டுடறதா இருக்கியா என்ன? வாணியைப் பொறுத்த மட்டில யாரும் ஒரு பாட்டோட விடறதில்லை!''' என்று சிரித்தான் குமார்.

''பாடும்மா! இந்தாத்துல பெரியவன் மட்டுந்தான் பாட மாட்டான். ஆனா, பெரிய ரசிகன்.. பாடு!'''

பெரியவன் என்று குறிப்பிடப்பட்ட ரவிச்சந்திரன் – சுவர் ஓரம் இருந்த நாற்காலியில் அமர்ந்து கையிலிருந்த புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டிக்கொண்டிருந்தவன் – அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். அவனைக் கணநேரம் ஓரத்துப் பார்வை பார்த்த பின், வாணி தொண்டையைக் கனைத்துச் சரிப்படுத்திக்கொண்டாள். அவள் பாடத் தயாரானது தெரிந்ததும் சட்டென்று அங்கே ஓர் அமைதி நிலவிற்று.

'ரிகமபதநிஸா.. நிதபமகரிஸ..' என்று பொய்த் தொண்டையில் சன்னமாகக் கரகரப்பிரியாவின் சாயையை வெளிப்படுத்திய பிறகு வாணி, 'இந்த வரம் தருவாய்' என்னும் சுத்தானந்த பாரதியாரின் பாட்டைப் பாடத் தொடங்கினாள்.

என்.ஸி. வசந்தகோகிலம் பாடிய இனிய அந்தப்பாடலுக்கான இசைத் தட்டு வெளியாகிச் சில ஆண்டுகள் கடந்திருந்தன. அந்தப் பாடலையும் வாணி வெத்திலைப்பட்டியில் இருந்தபோது ஆனந்தவல்லியின் வீட்டு ரேடியோவில் கேட்டுக் கேட்டுத்தான் கற்றிருந்தாள். எனவே பாடல் தாளத்துக்குக் கட்டுப்பட்டது. நாகநாதன் தம் தொடையில் பட்பட்டென்று தாளம் போட்டார். அவள் பாடி முடித்ததும், ''பிரமாதம் என்.ஸி. வசந்தகோகிலம் பாடின மாதிரியே இருக்கு!'' என்றார் அவர், சிரிப்புடன்.

வாணிக்குப் பெருமையாக இருந்தாலும், ''அய்யோ! அப்படியெல்லாம் சொல்லாதங்கோ! அவா எவ்வளவு பெரிய பாடகி!'' என்றாள் வெட்கத்துடன்.

''இருக்கட்டுமே! அதுக்காக நான் பொய் சொல்லலாமா? உனக்கு ரொம்ப நல்ல குரல் இருக்கும்மா. வசந்தகோகிலத்தோட குரல்ல சலங்கையைக் குலுக்கினமாதிரி கூடவே ஒரு ரவை புரளும்மா. அது உன்னோட குரல்லேயும் இருக்கும்மா. சரி. இன்னொரு பாட்டுப் பாடு! தியாகராஜர், தீக்ஷிதர் கிருதிகள்ல ஏதானும் பாடேன்! தமிழ்தான் பாடுவியோ?''

''அப்படி இல்லை, மாமா! பாஷை புரியாமே பாடக்கூடாதுங்கிறது எங்கப்பாவுடைய எண்ணம். பாடினா, அட்சரங்களை யார்கிட்டயாவது கேட்டுத் தெரிஞ்சுண்டு தப்பில்லாம – விஷயம் தெரிஞ்சவா சிரிக்கக்கூடாதபடி சரியா – பாடணும்கிறது அவரோட கொள்கை. ஆனா, நீங்க சொன்னா பாடறேன். இங்க சொல்லிண்ட வசந்தாராகப் பாட்டைப் பாடறேன்!' என்ற வாணி, தீக்ஷிதரின் 'ராமச்சந்திரம் பாவயாமி' என்னும் பாட்டை – 'சமகமதநிஸா.. சாநிதநிதமகமகரிஸ...' என்று சன்னமாக மூடிய வாய்க்குள் இழுத்தபின் கணீரென்று பாடத் தொடங்கினாள்.

இரண்டாவது பாட்டின் குரல் இன்னும் அதிக நயத்துடன் ஒலிக்க எல்லாரும் பிரமித்துப் போனார்கள். அவள் பாடி முடித்ததும், ''அம்மா! எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை. இப்படி ஒரு குரலை நான் கேட்டதே இல்லைம்மா! கடவுளுடைய அருள் இருந்தாத்தான் இப்படி ஒரு குரல் யாருக்கும் அமையும். நீ ரொம்பவும் பாக்கியம் பண்ணியிருக்கேம்மா. சங்கீதம்கிறது பெரிய விஷயம். அது எல்லாருக்கும் வாய்ச்சுடாது. கடவுள் நமக்குன்னு கொடுக்கிற பிறவித் திறமை எதையும் நாம அலட்சியப்படுத்தக் கூடாது. அதை மேலமேல விருத்தி பண்ணிக்கணும். அதுதான் நாம அவருக்குச் செலுத்தற நன்றி. நீயும் விடாம கத்துண்டு பாடும்மா. மனசு சோர்வடையற நேரங்கள்ல சங்கீதம் மாதிரி நமக்கு ஆதரவு தர்றது வேற எதுவுமே கிடையாதும்மா. உடம்பையும் மனசையும் கெடுக்காத போதைம்மா அது!. இன்னும் சொல்லப் போனா உடம்பு, மனசு இரண்டையும் வளப்படுத்தற போதை. எக்காரணங்கொண்டும் அதை மட்டும் நீ விட்டுடாதேம்மா!''என்று நீளமாய்ப் பேசினார் நாகநாதன்.

"கல்யாணியிலே ஒரு பாட்டுப் பாடேன்!" என்று பார்வதி பணிக்க, வாணி சிரிப்புடன் பெரியவரை ஏறிட்டாள்.

"பாடும்மா. எங்காத்துல கல்யாணின்னா எல்லாருக்குமே ஒரு தனி பிரேமை! பாடு!"

'கமபதநிஸா.. ஸாநிதபமகரி நிரிஸா.' என்று வாய்க்குள் முனகிய பின்னர், "நீயே மனமகிழ்வோடு கருணை செய்வாயே" என்று தொடங்கினாள் வாணி. ஏராளமான பிர்க்காக்களுக்கு வழி செய்த அந்தப் பாட்டில் நாகநாதனின் குடும்பம் சொக்கியேபோனது.

அவள் பாடி நிறுத்தியதும். "நீ பாடிண்டே இருந்தா நாங்களும் கேட்டுண்டே இருப்போம். மழைவரும்போல இருட்டிண்டு வருது. டிபன், காப்பி சாப்பிட்டு சீக்கிரம் கெளம்பற வழியைப் பாருங்கோ" என்றார் நாகநாதன்.

"என்னப்பா இது? விரட்டறேள்?" என்றான் அதுகாறும் மவுனமாக இருந்த ரவிச்சந்திரன்.

"சேச்சே! விரட்டலைடா! மழை வரும்போல இருக்கே. அதான். நனைஞ்சுண்டு போனாப் பரவாயில்லைன்னா எனக்கு ஒண்ணுமில்லை. ஆனா தொண்டை கட்டிடும். அதுக்குத்தான் சொல்றேன். குரலை ஜாக்கிரதையா பாதுகாக்கணும்."

"தேங்க்ஸ், மாமா!" என்றாள் வாணி.

குமார் உள்ளே போய் எல்லாருக்கும் தட்டுகளில் போண்டா, சட்டினி எடுத்து வந்து கொடுத்தான். சற்றுப்பொறுத்து, அவனே காப்பியும் எடுத்து வந்தான். அப்போதுதான் அவர்கள் வீட்டில் சமையலுக்கு ஆள் இருந்தது வாணிக்குத் தெரியவந்தது. வீடும் பெரியதாக இருக்கவே 'குமாரின் குடும்பம் வசதியான குடும்பம்!' என்று அவள் தனக்குள் நினைத்துக்கொண்டாள்.

வழக்கமான பேச்சுகளுடன் சிற்றுண்டியருந்த முடிந்ததும், "அப்பாவையும் ஒரு நாள் கூட்டிண்டு வாம்மா!" என்றார் நாகநாதன்.

"அடிக்கடி வாம்மா. தவறாமே ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வந்து சாமி முன்னால உக்காந்து பாடினா எங்களுக்கெல்லாம் ரொம்ப சந்தோஷமாயிருக்கும்!" என்றாள் பார்வதி.

எல்லாரும் இந்நாட்டு மன்னர்

ஊரென்றும், உறவென்றும்,
உடையென்றும், வீடென்றும்,
ஏரென்றும், நிலமென்றும்,
இருக்க ஓர் இடமென்றும்,
பேரென்றும், பெருநாளென்றும்
பெண்டென்றும், பிள்ளையென்றும்,
வேறொன்றும் இல்லாதார்,
வெறுமனே மன்னரானார்!
கொட்டுகின்ற மழைக்கங்கே,
கூரை இரு கைகளென்றே,
வெட்டுகின்ற மின்னலுக்கோ,
விழி இமைகள் மூடியென்றே,
சுட்டெரிக்கும் வெயிலுக்கோ,
தோல்போர்வை குடையுமென்றே,
வெட்டவெளி வீடாக,
வெளிவானம் கூரையென்பார்!
பம்பரமாய் உழைத்திங்கே,
பட்டினியால் கெட்டலைந்தும்,
கொம்புத்தேன் குடிப்பதற்கோ
குள்ளநரிக் கூட்டங்களை
அம்பாரி மீதேற்றி,
அரசாளச் செய்யவைத்தே,
ஐம்பதாண்டு விடுதலையை
அடியோடு தொலைத்துவிட்டார்!
செல்லரித்த அரசியலை,
சீர்திருத்த முடியாமல்,
கொல்லாமல் கொல்லுமிந்த,
கொடுமைகளைக் களையாமல்,
எல்லாரும் வெட்கமின்றி.
இந்நாட்டு மன்னரென்று,
சொல்லாலே முழம்போட்டால்
சுதந்தரத்தால் பயன் என்னே?

சொ.பொ. சொக்கலிங்கம்

''அதுக்கென்ன! வரச்சொல்றேன். வந்து பாடுவள்!'' என்று கணமும் தாமதிக்காமல் அம்புஜம் பதிலிறுத்தாள். வாணி அவளை வியப்புடன் பார்த்தாள். அவர்களுடனான உறவை வலுப்படுத்திக்கொள்ளப் பார்க்கும் முயற்சி – அல்லது திட்டம் – அது என்று அவளுக்குத் தோன்றியது. தனக்கு இருக்கும் உள்ளுணர்வு அவர்களுக்கும் இருப்பின் அம்மாவைப் பற்றி எவ்வளவு மட்டமாக நினைப்பார்கள் என்று எண்ணிய வாணி தனக்குள் கசந்தாள். அவள் முகம் சிறுத்தது.

நாகநாதன், ''உனக்கு அசௌகரிய மாயிருக்கும்னா வேண்டாம்மா! எப்ப முடியுமோ அப்ப வா!'' என்றார்.

தன் முகச் சுருக்கத்தை வேறுவிதமாக அவர் பொருள் செய்துகொண்டதைப் புரிந்துகொண்ட வாணி, உடனே மலர்ந்து சிரித்து, ''கஷ்டமொண்ணு மில்லை, மாமா! என் பாட்டைக் கேக்கறது உங்களுக்கெல்லாம் அசௌகரியமில்லைன்னா நான் கண்டிப்பா வரேன்!'' என்றாள்.

''ரொம்ப ஹாஸ்யமாப் பேசறதா எண்ணமாக்கும்?'' என்றான் குமார்.

பிறகு எல்லாரிடமும் விடைபெற்றுக்கொண்டு இருவரும் கிளம்பினார்கள்.

அதன் பின்னர் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வாணி குமாரின் வீட்டுக்குப் போகலானாள். அவளது வருகைக்காக அவன் குடும்பத்து நபர்கள் அனைவரும் ஆவலுடன் காத்திருந்தனர்.

...இதற்கிடையே அனந்தராமனுக்கு ஒரு ஜவுளிக்கடையில் கணக்கெழுதும் வேலை கிடைத்தது. மாதம் இருநூறு ரூபாய் சம்பளம் தருவதாய்ச் சொல்லப்பட்டது. சாருமதியும் தட்டெழுத்து வகுப்பில் சேர்ந்து பயிற்சி பெறலானாள். கூடிய விரைவில் தன் குடும்பத்துக்கு விமோசனம் வரப்போகிறது என்று அம்புஜம் இன்பக் கனவு காணத் தொடங்கி யிருந்தாள்.

ஒரு ஞாயிறன்று மேரி ஜார்ஜின் வீட்டுத் தொலைபேசி மணியடித்தபோது வழக்கம் போல் வாணி ஒலிவாங்கியை எடுத்துப் பேசினாள்.

''யாரு? வாணிதானே பேசறது?''

''ஆமா? நீங்க யாரு?''

''தெரியல்லையா? குமார் பேசறேன்.''

''சொல்லு, குமார். என்ன விஷயம்? முக்கியமா ஏதானும் இருந்தாலொழியக்கூப்பிடமாட்டியே?''


''ஆமா, வாணி! ரொம்ப முக்கியமான விஷயந்தான். உன்னோட தனியா ஒரு பத்து நிமிஷம் நான் பேசணும், மிஸஸ் ஜார்ஜ் வீடு அதுக்கு வசதிப்படுமா? அல்லது அவங்க வீட்டுத் தோட்டத்துல நடந்துண்டே கூடப் பேசிட முடியும்!''

வாணி குழப்பத்தில் ஆழ்ந்தாள். 'என்ன பேசப்போகிறான் இந்தக் குமார்!' (தொடரும்)

கவிஞர் - எழுத்தாளர் புகழ் உயருமே!

கவிதைபாட மனமில்லை காரணம்?
  காலமாற்றம் உள்ளமெலாம் வேதனை!
புவிதனிலே இலக்கியத்துச் சிந்தனை!
  பூஜ்யமாகிப் போயிடுமோ நிந்தனை!
கவிஞர்க்கும் எழுத்தாளர்க் கும் வேலை!
  கவலையின்றி உணவுதேடும் கவலை!
தவிக்கின்ற இலக்கியத் தாகமே!
  தணியாத பணிதொடரும் மோகமே.

நீரோடா விட்டாலும் வைகைதான்
  நீள்புவியில் பெற்றபெயர் வைகையே!
    (பெறும்பெயரும்)



நாளோடும் போராடும் கவிஞர்
  நிழலாடும் நெஞ்சமதில் தெய்வம்
சூதாட்டத் திரைப்பாடல் இயற்ற
  சூழ்நிலைகா ணாதாரும் கவிஞர்
வேரோடு தீமைபோக்க எழுதும்
  வேகமிகு எழுத்தாளர் தெய்வமே!

எழுதுகோலால் எழுந்திட்ட புரட்சியை
  ஏதென்ஸ்,ந கரில்,எழுப்பி ய,சாக்ரடீஸ்!
விழுந்துவிட வில்லைபுக ழினிலே!
  விழுதுகளாய் நாமெழுவோம் இன்றே!
பழுதுபடா பாரதிபோல் எழுவோம்!
  பாழ்படாது பாரதத்தைக் காப்போம்!
உழுவோரின் கலப்பையும், நம் எழுதுகோல்
  உயர்படைப்பும் பொன்விழாவில் உயருமே.

வி.ஸ. காண்டேகர்
- நூறு வயது!



ஜனவரி 11, 1898ல் பிறந்த பிரபல மராத்தி எழுத்தாளர், கதாசிரியர் வி.ஸ. காண்டேகரின் நூற்றாண்டு விழா இவ்வாண்டு மகாராஷ்டிரா முழுவதும் கொண்டாடப்படுகிறது.

ஞானபீடம் பரிசுபெற்ற அவரை அச்சமயம் பிரபல மூன்று மராத்தி எழுத்தாளர்கள் வாழ்த்துக்கூறி இலக்கியம் பற்றி சர்ச்சை செய்து உரையாடினார்கள்.

அதிலிருந்து சில பகுதிகள் :

கே : நீங்கள் பேசுவது, எழுதுவது எல்லாம் கோல்ஹாட்கர், கட்கரி போன்ற பழமை எழுத்தாளர்களைப் பின்பற்றுவதாகவே இருக்கின்றன. நீங்களே உங்களைக் கோல்ஹாட்கரின் சிஷ்யன் என்று கூறியிருக்கிறீர்கள். இலக்கியத்தில் குரு-சிஷ்யன் பரம்பரை என்று ஒன்று இருக்கிறதா? இதை நீங்கள் எந்த அர்த்தத்தில் எடுத்துக் கொள்கிறீர்கள்?

ப: நான் என்னைப்பற்றிச் சொல்கிறேன். 1992இல் நான் ஷிரோடேவுக்குப் போனேன். எழுதணும் என்னும் ஆசை இருந்தது. நிறைய எழுதினேன். உண்மையில் என்ன எழுதினேன் என்று கற்பனை இல்லை. இந்தச் சமயத்தில் கோல்ஹாட்கருக்கு என்னுடைய கற்பனைவளம், எழுத்து, நடை இவையெல்லாம் பிடித்திருந்தன. நாலைந்து வருடங்கள் நான் எழுதுவதையெல்லாம் படித்துப் பாராட்டினார். சிலவற்றைத் திருத்தியும் எனக்கு வழி காட்டினார். எனவே எனக்கு எழுதுவதற்கு ஒரு தூண்டுகோலாக இருந்ததால் குரு என்றேன். அவருடைய படைப்புகளை நான் நிறையப் படித்து, அவரைப் போல எழுத வேண்டும் என்கிற அவா இளமையில் இருந்தது. கோல்ஹாட்கர், கட்கரி போன்றவர்களின் எழுத்து, கற்பனை வளம் மிகுந்ததாகவும், நடை அழகாகவும் இருந்ததால், முதல் 10 வருடங்கள் நான் அவர்களைப் பின்பற்றி எழுதிவந்தேன். பிறகு அதிலிருந்து விடுபட்டு, என் சொந்த நடையில் எழுதலானேன்.

கே : கோல்ஹாட்கரின் சிஷ்யன் என்கிறீர்களே. அப்படியென்றால் மாட்கோல்கரைப் பற்றி ...

ப : மாட்கோல்கர் நாக்பூரில் இருந்ததால் கோல்ஹாட்கரின் வீட்டிற்கு அடிக்கடி வந்ததால் நெருக்கமாயிற்று. கானோல்கர் தன்னுடைய புத்தகத்தில் இவ்வாறு எழுதியிருந்தார் : 'கோல்ஹாட்கருக்கு அநேக சிஷ்யர்கள் இருந்தாலும் அவர் கட்கரி, காண்டேகர் மற்றும் ஆனந்திபாய் ஷிர்கே இவர்களிடம் தான் மிகுந்த பாசம் காட்டினார்' எதை ஆதாரமாகக் கொண்டு இப்படி எழுதினார் என்று கானோல்கரைத்தான் கேட்கணும்.

கே : நீங்கள் குரு சிஷ்ய பரம்பரையில் வளர்ந்தீர்கள். அதைப்போல நீங்கள் ஏதேனும் குரு-சிஷ்யர் பரம்பரையைத் தோற்றுவித்தீர்களா? உங்களுடைய சிஷ்யர்களைப் பற்றி ...

ப : இல்லை. சிஷ்ய பரம்பரை ஒன்றுமில்லை.

கே : வேறு யாராவது உங்களைக் குருவாக மதித்து அணுகி இருக்கலாமல்லவா?

ப: அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. ரஞ்ஜித் தேசாய் என்னைக் குருவாக மதிப்பதாகக் கேள்விப்பட்டேன்.

கே : அப்படியென்றால் அவ
உங்கள் பரம்பரைதானே?

ப : என் பரம்பரை அல்ல
எழுதுவதற்கான சில நுணுக்கங்கள
உத்திகளை அவருக்குச் சொன்னே
அதற்காக அவர் என்னை
குருவாகப் பாவிக்கிறாரோ என்னவே
என நினைக்கிறேன்.

கே : இலக்கியத்தில் உயர்ந்
கண்ணோட்டத்துடன் சொல்லு
சிறந்த ஆலோசனை கேட்பவ
கள் உங்களை மானசிகக் குருவா
நினைக்கலாம் அன்றோ?

ப : இருக்கலாம். அந்
திருஷ்டியில் பார்த்தால்கூட எனக்கு
சிஷ்யர்கள் யாருமில்லை - மற்று
நான் யாருக்கும் குரு அல்லன்.

கே : இப்பொழுது இருக்கு
எழுத்தாளர்களின் தலைமுறை
கும் மற்றும் உங்கள் காலத்தி
எழுத்தாளர்களுக்கும் என
போட்டால் நிறைய வித்தியாச
இருக்கிறதே. அதைப் பற்றி உங்க
அபிப்ராயம் என்ன? நாங்க
புதுமையைச் செய்கிறோம் என்
ஏதேதோ எழுதுகிறோமே
உண்மையில் நாங்கள் முன்னே
கிறோம் என்று உங்களுக்கு
தோன்றுகிறதா? உங்களுக்கு
எங்கள் தலை முறைக்கும் நிறை
இடைவெளி இருப்பதாக நீங்க
நினைக்கிறீர்களா?

ப : எங்கள் தலைமுறைக்கும் ட்கரி போன்றவர்களின் தலை றைக்கும் இருந்த இடைவெளி யவிட, இப்பொழுது எழுதுபவர் ளின் இடைவெளி நிறைய ருக்கிறது. இலக்கியப் பிரச்னை யவிட சமூகப் பிரச்னைதான் - தற்குக் காரணம். சென்ற 50 ஆண்டுகளில் சமூகப்பிரச்னை ராம்பவும் மாறிவிட்டது. இன்று நான் ழுதினேன் என்றால் உங்களைப் பாலத்தான் எழுதுவேன். காலம் மாறிக் கொண்டே வருகிறது. மனிதன் டைசியில் தன்னுடைய காலத்திற்கு அடிமையாகிறான்.

கே : நீங்கள் ஓர் ஆதர்சவாதி ழுத்தாளர். உங்களுடைய ழுத்தின் தாக்கம் கடந்த 50 ருடங்களாக வாசகர்களைப் பாதிக்கிறது. இதனால் ஏதேனும் மூக மாற்றம் உண்டாகி இருப்பதாக நினைக்கிறீர்களா?

ப : உண்மையில் உலகம் எப்பொழுதும் போல்தானிருக்கிறது - மாறுவதில்லை. உலகம் மாற வேண்டும் என்கிற கனவுதான் நம்முன் நிற்கிறது. அதற்காக நாம் துடிதுடிக்கிறோம்.புத்தர்,இயேசுநாதர் வந்தும் உலகத்தை உய்விக்க முடிந்ததா?

கே : அந்த அர்த்தத்தில் கேட்கவில்லை. நாங்கள் என்ன கேட்கிறோம் என்றால் உங்கள் படைப்புக்களால் சென்ற 50 ஆண்டுகளில் மாற்றம் ஏதேனும் எதாவது ஒரு தலைமுறையினருக்கு ஏற்பட்டதா?

ப : ஞானபீட விருது கிடைத்ததும் எனக்கு நூறு, இருநூறு கடிதங்கள் வந்தன. அதில் சிலர், மனவேத னையில் இருந்தபோது உங்கள் நாவலைப்படித்தபிறகு நான் சமாதான மடைந்தேன். மனம் திருந்தினேன். ங்கள் வாழ்வை மாற்றி ஒளிபெறச் செய்தீர்கள் என்றெல்லாம் எழுதினார்கள். அவையெல்லாம் உண்மையா பொய்யா என்று நான் எப்படிச் சொல்ல முடியும்? வாழ்க்கையில் நல்லது செய்கிறேன் என்று சொல்லி நிறைய பேர் என்னை வந்து சந்திக்கிறார்கள். என்னை மகிழ்விப்பதற்காக சொல்கிறார்களா அல்லது அவையெல்லாம் பொய்யா என்று எனக்கு எப்படித் தெரியும்? அவர்கள் திருந்தி வாழ்க்கையில் முன்னேறினார்களா இல்லையா என்று எனக்குத் தெரியாதே!

கே : ஆனால் நீங்கள் உங்கள் வாசகர்களுக்கு அறிவுரைகூறும் உத்தேசத்துடன் எழுதுவதாகத் தெரிகிறதே!

ப : ஆமாம்! இப்படி எழுதுவது இலக்கியத்தில் இது ஒரு பாகம் என நான் நினைக்கிறேன்.

கே : நீங்கள் உஷாரான ஆசாமியாக இருந்தும், சமூக சேவை செய்வதற்காகத்தானே உபாத்தியயார் வேலைக்குக் கொங்கணுக்குச் சென்றீர்கள்?

ப : நானாக கொங்கணுக்குச் செல்லவில்லை. நான் தத்துப்பிள்ளை யாதலால் கொங்கணுக்கு அனுப்பப் பட்டேன்.

கே : சரி. கொங்கணுக்கு வந்ததும் விருப்பப்பட்டு ஆசிரியர் வேலையில் சேர்ந்தீர்கள். இன்று , உங்கள் பிள்ளையையோ, பேரனையோ பள்ளி ஆசிரியர் வேலைக்கு போகச் சொல்வீர்களா?

ப : மாட்டேன். அதுவும் இன்றைய நிலையில் பள்ளிக்கூட ஆசிரியர் வேலைக்குப் போகச் சொல்ல மாட்டேன். காரணம் நான் வேலை பார்த்த காலகட்டத்திற்கும் இப்போ தைய நிலைமைக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. இப்போ தைய பள்ளி, கல்லூரிகளில் ஜனங்கள் disillusioned ஆகிறார்கள். எங்களு டைய காலங்களில் நிதானமாக illusion செய்து கொண்டிருந்தார்கள்.

கே : சிலகாலம் முன்பு 'வக்கீலா? ஆசிரியரா?' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருந்தீர்கள். அதில் வக்கீலாக வேண்டாம், ஆசிரியராகி விடுங்கள் என்று எழுதியிருந்தீர்கள்.

ப : உண்மைதான். அது ரொம்ப வருடங்களுக்கு முன்பு நான் ஆரம்பகால எழுத்தாளனாக இருந்த போது எழுதின சங்கதி. அந்த சமயத்தில் அப்பேர்ப்பட்ட எண்ணம் எழுந்ததற்குக் காரணம், வக்கீல் பலவிதவேலைகள் செய்தார். பாவம் ஆசிரியர், அந்த மாதிரி வேலை களைச் செய்ய முடியாது. அதனால், அவர் எப்பொழுதும் ஏழையாகவே வாழ்ந்தார் - அவர் ஒரு பவித்திரப் பிராணி என்று அப்பொழுது எண்ணிக் கொண்டிருந்த சமயம். ஆனால் இப்பொழுது அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டு விட்டேன். எண்ணம் ஒரே மாதிரியாக இருக்க முடியாது. இல்லாவிட்டால் 50 வருடத்தில் எந்த அனுபவம் கிட்டிற்று என்று தோன்றும்.

கே : நடுவில் நீங்கள் மனத்தில் ஒருவித விரக்தி ஏற்பட்டு விட்ட தாகச் சொன்னீர்கள். காண்டேகர் ஓர் அதிசய வாழ்க்கை ஒப்பு நோக்குபவர். ஆனால் வாழ்க்கை வழிகாட்டி அல்லர் என்று ஒரு விமர்சகர் சொல்லி யிருக்கிறாரே ... அதைப் பற்றி ....

ப : நான் பதினெட்டு ஆண்டுகள் ஷிரோடேயில் ஐக்கியம் ஆகிவிட்டேன். வாழ்க்கையை அதன் போக்கில் வாழ்ந்துவிட்டேன். அதற்குள் எனக்கு நாற்பது வயதாகி சாலேஸ்வரம் வந்து விட்டது. அதுவரைக்கும் நான் கிராமத்தைத் தான் பார்த்துக் கொண்டிருந்தேன். உண்மையில் சொல்லப்போனால், என்னுடைய உடல்நிலை சரியாக இல்லாத காரணத்தால் எங்கும் போகமுடியவில்லை. பிரயாணம்

செய்ய முடியவில்லை. ஜனங்கள்கூட சேர்ந்து வாழமுடியவில்லை. அதனால் நான் வாழ்க்கையைத் தேடும் அறிவாளி - அறிவுஜீவி அல்ல! சரத் சந்திரர்தான் அறிவு ஜீவி!

கே : நீங்கள் பதினெட்டு வருடங்கள் ஷிரோடேயில் வாழ்ந்தீர்கள். நீங்கள் ஏன் கிராமக் கதைகள் எழுதும் எழுத்தாளனாக மாறவில்லை?

ப : நான் ஷிரோடே வருவதற்கு முன்பே என் நடையெல்லாம் கோல்ஹட்கர், கட்கரி - இவர்களைப் பின்பற்றித்தான் எழுதலானேன். இன்றைய கிராமிய எழுத்தாளர்கள் கிராமத்திலேயே பிறந்து வாழுபவர்கள். நான் கிராமத்தில் பிறந்தவன் அல்லன். தத்து எடுத்த பிறகு கிராமத்திற்குப் போன ஆள் நான்.

கே : மனத்தில் விசாரம் வந்தாலோ, கற்பனை எழுந்தாலோ அதை உடனே யாரிடமாவது சொல்லி விடணும் என்றோ அல்லது எழுதி யாரிடமாவது படித்துக் காட்ட வேண்டும் என்றோ நீங்கள் நினைத்ததுண்டா?

ப : இல்லை! இப்படி நான் எப்பொழுதும் செய்வதில்லை. சர்ச்சை, அலசல் எல்லாம் என்னுள்ளே செய்து கொள்வேன். எழுதி முடித்தவுடன், இது சரி என்று பட்டால், அதை நான் பிரசுரிப்பேன். அதற்கு வரும் புகழ் மாலைகளையோ, எதிர்ப்புகளையோ நாம் தாங்கிக் கொள்ள வேண்டும் என்று நினைப்பவன் நான். பிரசுரத்திற்கு முன், அதைப்பற்றிய சர்ச்சை, விமர்சனம் யாருடனும் வைத்துக் கொள்வதில்லை. ஷிரோடேயில் இருக்கும்போது என்னுடன் வேலை செய்த சக ஆசிரியர்களுடன்கூட என் படைப்பைப் பற்றிப்பேசுவதில்லை. பேசுவது எல்லாம் பள்ளியைப் பற்றியும், கிராமத்திலுள்ள மாணவர்களின் படிப்பைக் குறித்தும்தான்.

கே : உங்கள் வீட்டில் உள்ளவர்களுடன் குறிப்பாக மனைவியுடன் உங்களுடைய கதை, நாவல்களைப் படிக்கக் கொடுப்பதோ அல்லது அதைப் பற்றி விவாதிப்பதோ இல்லையா?

ப : என்னுடைய மனைவி அதிகம் படிக்கவில்லை. ஓரிரு சமயம் புருஷன் ஏதோ எழுதியிருக்கிறாரே என்று படித்துப் பார்ப்பாள். அவள் உத்தமமான குடும்பப்பெண். அவள் ஒருசமயம் என்னைப் பார்த்துச் சொன்னாள் : 'உங்களுக்கு எப்படி புத்தகமோ அப்படி எனக்கு சமையற்கட்டு' என்று. அவள் சம்சாரத்தில் மூழ்கிவிட்டாள். என் எழுத்தைப் பற்றியோ, படிப்பைப் பற்றியோ ஒருபொழுதும் அவளிடம் விவாதித்தது இல்லை. காரணம் அப்படி செய்யணும் என எனக்குத் தோன்றவில்லை. அவளும் கிராமத்துப்பெண். நானும் கிராமத்தில் வாழ்ந்ததால் ஒத்துப்போயிற்று. அப்பொழுதும் சரி, இப்பொழுதும் சரி, இருபத்திநாலு மணி நேரமும் நான் தனியாக இருப்பேன்.

கே : பையனுக்குப் பூணூல் போட்டீர்களா?

ப : இல்லை! எனக்கு எந்தவித தார்மீக பழக்க வழக்கமும் இல்லை. சிரார்த்தம், பக்ஷம் இல்லை. சத்யநாராயண் பூஜை இல்லை. தத்து எடுத்துப்போன வீட்டில் அவர்களுடைய குலதெய்வம் இருந்தது. கோல்ஹாபூரில் என்னுடைய குலதெய்வம் இருக்கிறது. அதற்கு மனைவிதான் பூ வைத்துப் பூஜை செய்வாள். நான் ஒன்றும் செய்வதில்லை.

கே : அப்படியென்றால் உங்களுக்குக் கண் பார்வை போய் குருடு ஆன பிறகு தனிமையில் இருக்கும்போது எந்தக் கடவுளை நினைக்கிறீர்கள்?

ப : எனக்குக் குழப்பத்
உண்டாக்கும் எந்தக் கடவுளைய
நான் நினைப்பதில்லை. உலகத்தி
மைய ஸ்தானத்தில் சைதன்
சக்தியைத்தான் நான் கடவுளா
பாவிக்கிறேன். ஆனால் பல
கடவுள்களில் கற்பனையினால் ம
சஞ்சலமடைந்து ஆன்மீகச் சர்ச்
எழுகிறது. இதனால் ஒரு நன்மைய
இல்லை.

கே : நீங்கள் முழுமையா
பார்வை இழந்த பிற
உங்களுடைய வாழ்நாள் மிகவ
பயமுள்ளதாக இருக்குமே?

ப : இல்லை. ஆபரேஷன் செய்
கண்ணில் மறுபடி கோளா
ஏற்பட்டபோது பார்வை சரியாக
தெரியுமோ தெரியாதோ என்
சொல்ல டாக்டர்கள் தயங்கினார்க
அதைப் புரிந்து கொண்டவுட
'கண்ணை எடுத்து விடுங்கள். எ
தலைவிதிப்படி நடக்கட்டும்' என்
நானே சொன்னேன்.

கே : உங்கள் கற்பனையி
வரும் எல்லா விஷயத்தையு
குறிப்பு எடுத்து வைப்பதுண்டா

ப : இல்லை. நான் கற்பனையி
உதிக்கும் எந்த விஷயத்தை
பற்றியும் பத்தில் ஒரு பங்குகூ
எழுதுவதில்லை. எந்த விஷயத்தை
பற்றியும் நீண்ட நாள்களுக்
மனதிலேயே அசைபோட்டு திரும்
திரும்ப யோசித்து, ஒரு முடிவுக்
வந்த பிறகுதான் எழுதுவேன்.

கே : நீங்கள் நாவ
எழுதுவதற்கு முன் ஏதேனு
குறிப்பு, ஆதாரம் இவைகளை
எடுத்துக் கொள்வதுண்டா?

ப : இல்லை, நாவலின் க
மனத்தில் உறுதியானவுடன், மேலு
அதைப் பற்றிய கதாபாத்திரங்க
மனத்தில் நிலைத்தவுடன் எழு
ஆரம்பித்துவிடுவேன். நாவலி
முழுமையான ஆதாரங்கள் கிடைக்
மலோ அல்லது என் தேகநி

ியாக இல்லாமல் போனாலோ, ாவல் எழுதுவது நடுவில் டைப்படும்.

கே : உங்களுடைய பழைய ாவல்களைப் படிக்கும்போது சயற்கையாகவோ அல்லது பாலியாகவோ தோன்றிய ுண்டா?

ப : என்னுடைய எந்த ாவலையும் நான் படித்ததில்லை. யாதி' நாவலைக்கூட பிரசுரமான ுடன் நான் படிக்கவில்லை.

கே : உங்கள் மனதில் ாந்தியவாதமும், மார்க்ஸிய ாதமும் கலந்து இருக்கின்றன. இது சாத்தியமாகுமா?

ப : வெளிப்படையாகச் சொல்வதென்றால் வெளி உலகத்தை மாற்றுவதற்கு மார்க்ஸியம் தேவை. ஆனால் மனிதர்களின் ஆன்மிகத்திற்குக் காந்தியம் தேவைப்படுகிறது.

கே : பாரதிய ஞானபீட பரிசு கிடைத்ததும் உங்களுடைய முதல் அனுபவம் எப்படியிருந்தது?

ப : மிகவும் சந்தோஷமாயிருந்தது. மராட்டியில் இந்தப் பரிசுக்கு என்னைத் தேர்ந்தெடுத்ததற்காக நான் மிகவும் சந்தோஷப்பட்டேன்.

கே : உங்களுக்கு இன்னும் இவ்வுலகில் வாழனும் என்கிற விருப்பம் உண்டா?

ப : எழுத முடிந்தால், உயிர்வாழ ஆசை.

கே : புனர் ஜென்மத்திலும் நீங்கள் மறுபடி கதாசிரியராக பிறந்தால் ...

ப : சந்தோஷப்படுவேன். தரித்திரக்காரனாக இருந்தாலும் அதிலும் நான் மகிழ்ச்சி அடைவேன். இலக்கியங்களைப் படைப்பதிலும், படிப்பதிலும் எண்ணற்றகோடி மகிழ்ச்சியடைகிறேன்.

பி.ஆர். ராஜாராம்

(நன்றி : லலித் (மராட்டி) வி.ஸ.காண்டேகர் சிறப்பிதழ்)

கன்னியரும் கத்திரிக்காயும்

"பாவாடை அணிவதால் பலநிறம் கொண்டதால்
நாவாட வரும் பேர்க்கு நல்ல சுவை யாவதால்
பூவாட வருவதால் பூரித்திருப்பதால்
பாவாலே கத்திரியும் கன்னியரும் நேர்"

பார்த்தால் ஒரே பாட்டு. பொருளோ இரண்டு. சிலேடை என்று சொல்கிறோம். நெய்வேலி எழுத்தாளர் திருமதி. வேதாத்மா நமக்குச் சிலேடைப் பாடல்களை வழங்குகிறார்.

பாடல்வரிகள்	கத்திரிக்காய்க்கு	கன்னியர்க்கு
பாவாடையணிவதால்	கத்திரிக்காயை மேல் பாகத்தில் பாவாடை என்னும் தோல் கவிழ்ந்து மூடி இருப்பதால்	பாவாடை என்னும் உடை உடுப்பதால்
பலநிறம் கொண்டதால்	நீலம், வெள்ளை, பச்சை என்று பல நிறங்களில் இருப்பதால்	கறுப்பு, சிவப்பு , வெளுப்பு என்று பல நிறங்களில் இருப்பதால்
நாவாட வரும் போக்கு	விருந்துண்ண வருபவர் களுக்கு	வம்பு பேச வருபவர் களுக்கு
நல்ல சுவையாவதால்	நல்ல சுவையான உணவாக இருப்பதால்	மிகவும் விரும்பத்தக்க ஒரு தலைப்பாக இருப்பதால்
பூவாட வருவதால்	பூ வானது வாடியபின் காய் வருவதால்	தலையில் வைத்துள்ள பூ ஆட வருவதால்
பூரித்திருப்பதால்	குண்டாக இருப்பதால்	சந்தோஷமாக இருப்பதால்

பாவாலே கத்திரியும் கன்னியரும் நேர்: இந்தப் பாடலின் மூலம் கத்தரிக்காயும் கன்னிப்பெண்களும் ஒன்று.

'வேதாத்மா'

இரத்தக் கொழுநீருக்குப் பவழம்

கடினமான தசையால் உருவான இருதயம் நோயுற்றால் அது குணமாவது கடினமாக இருக்கிறது. மாற்று இருதயம் பதித்தல், இரண்டு இருதயம் வைத்தல் என்றெல்லாம் அறுவை முறையில் இருதயத்தைப் பேண நவீன மருத்துவம் இன்று பல வழிகளைக் கடைப்பிடிக்கிறது. ஆனால் பழங்காலத்தில் வருமுன் காக்கும் முறையில், இருதய நோய்கள் வராமல் இருதயத்தைப் பாதுகாக்கும் மருந்து முறைகளைச் சித்தர்கள் கண்டனர். அத்தகைய மருத்துவ முறைகளுள் பவழத்தை மருந்தாகத் தருவதும் ஒன்று.

'எலக்ட்ரோ கார்டியோகிராம்' போன்ற நவீன கருவிகள் இல்லாமல் நாடியின் மூலம் மட்டுமே இருதயத்தின் முழு விவரத்தையும் அறிந்து கொள்ளும் திறமை, பழைய சித்த மருத்துவர்களிடம் இருந்தது. பேணிக் காக்காததால் இந்தக் கலை அழிந்து வருகிறது. சித்த மருத்துவத்தில் பவழம் மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது. நவரத்தினங்களில் ஒன்றான இதைப் பல்லாண்டு காலமாக மருந்தாகப் பயன்படுத்தியதில் சித்தர்கள் முதல் இடம் பெற்றார்கள். இன்று 'மரைன் பயாலஜி' என்று புதிய பிரிவை நவீன மருத்துவம் பிரித்துப் பார்க்கத் தொடங்கியுள்ளது. அன்றே கடல்வாழ் பிராணிகள் பலவற்றை - சங்கு, முத்து, சிப்பி போன்றவற்றைப் பயன்படுத்தி வெற்றி பெற்ற மருத்துவம், சித்த மருத்துவம். பசிபிக் பெருங்கடலிலும், இந்துமாக் கடலிலும் பரவலாகக் கடற்கரையில் கிடைப்பது பவழம். கடல் வாழ் பிராணி ஒன்று உற்பத்தி செய்து தரும் பொருளே பவழம்.

கடற்கரையில் உள்ள பவழப் பாறைகள் பல நிறங்களில் கண்ணுக்கு இனிமையான தோற்றத்தைத் தரக் கூடியவை. கடற்கரையிலும், ஓரளவு கரையை ஒட்டிய கடலிலும் இது பரவலாகக் கிடைக்கிறது. இதனைப் பார்ப்பதற்காக வெளிநாட்டுப் பயணிகள் வருகிறார்கள். இலங்கையிலும் பவழப் பாறைகளைக் காண வெளிநாட்டினர் அங்கு வருகிறார்கள். கண்ணுக்கு அரிய காட்சியாக அமைந்து, மனத்திற்கு மகிழ்ச்சி தரும் - இருதயத்திற்கும் இதம் தரும்- மருத்துவக் குணங்களைப் பெற்றிருக்கிறது. இருதயத் தசைகளைச் சிதைவுறச் செய்யும் முன் அதற்கு முன்னோடி நோயாக இரத்தக் குழாய் குறுகிப் போவதற்கு மூலகாரணமாக இருப்பதற்கு இரத்தத்தில் அதிக கொழுப்புநீர் இருப்பது காரணமாக இருக்கிறது. இரத்தக் கொழுப்பு நீரை 'கொலஸ்டிரால்' என்று கூறுவார்கள்.

இரத்தக் கொழுப்புக்கு மருந்து

கொலஸ்டிரால் எனப்படும் இரத்தக் கொழுப்பு நீரைக் குறைக்கும் சிகிச்சையில் பவழம் முதல் இடம் பெறுகிறது. இதர மருந்துகள் செய்யும் குணத்தின் அளவு ஒரு பங்காக இருந்தால், பவழம் உட்கொள்வதால் கிடைக்கும் குணம் நான்கு முதல் ஐந்து மடங்காக இருந்தது. பவழம் கொலஸ்டிராலைக் கட்டுப் படுத்துகிறது. இருதய நோய் வராமல் பாதுகாக்க விரும்புவோர்க்கு ரஷ்ய கடல்வாழ் பிராணிகளின் மருத்துவக் குணங்களை ஆராயும் பிரிவு கண்டுபிடித்து வெளியிட்டுள்ள மிக இனிப்பான செய்தி இது.

பவழத்தில் 'ப்ராஸ்டோ கிளாண்டைன்' என்ற பொருள் நிறைய உள்ளது. இந்தப் பொருள் இருதயத்தில் இரத்தம் உறைவதைத் தடுப்பதில், நிச்சயமாகக் குணமளிக்கக் கூடியதாக மருத்துவர்கள் கருதுகிறார்கள். பவழப் பூச்சிகள், உற்பத்தி செய்யும் கசிவிலிருந்து உற்பத்தியாவது பவழப்பாறை. இதில் மிகுந்த அளவு 'ப்ராஸ்டோ கிளாண்டைன்' என்ற பொருள்



இருக்கிறது. மனிதனின் விந்தில் உள்ள பொருள்களில் ப்ராஸ்டே கிளாண்டைனும் ஒன்று. பவழ வயிற்றுப் புண்ணையும் ஆற்று தன்மை வாய்ந்ததாக உள்ளத அதிகப்படும் இரத்த அழுத்தத்தையு இது கட்டுப்படுத்தக் கூடியதா இருக்கிறது.

க்ஷயரோக (டி.பி) கிருமிகளை கொல்லக் கூடிய வன்மையு பவழத்திற்கு உள்ளது. க்ஷயரோக கிருமிகளைக் கொல்வது முதல் இரத்தம் உறைவதைத் தடுப்பது வ உள்ள பவழத்தின் நற்குணங்கள ரஷ்யக்கடல் மற்றும் உப்புநீர் மீ பிடிப்புத் துறை ஆராய்ச்சி நிலைய (யு.எஸ்.எஸ்.ஆர். ரிசர்ச் இன்ஸ்டிட்யூ ஆஃப் சால்ட் வாட்டர் ஃபிஷ்ஷி அண்ட் ஓஷனோகிராபி) ஆராய்ந் கண்டு பிடித்திருக்கிறது.

சித்த மருத்துவத்தில் ...

பவழத்தைப் பஸ்பமாக் உபயோகிப்பது சித்த மருத்துவமு முயல் இரத்தத்துடன் நற்பவழத்தை கலந்து பஸ்பம் தயாரிப்பது சித்

சித்தமருத்துவ நிபுணர்
டாக்டர் சுப. சதாசிவம்


வைத்தியத்திற்கே உரிய தனிமுறை. இதை, இருதய நோய் முதல் க்ஷயரோகம், இருமல், மூலம் போன்ற நோய்களில் சித்த வைத்தியர்கள் நம்பிக்கையுடன் உபயோகிக்கிறார்கள். பல்வேறு பலமூட்டும் மருந்துகளில் பவழம் சேருகிறது. தனியாகவும் இது ஒரு சிறப்பு மருந்து. மூலநோய், அஜீரண பேதி, இருமல், ஆஸ்துமா நோய்களைக் குணமாக்கும் என்பது சித்த வைத்தியர்களின் முடிவு. பவழத்தில் அதிக சுண்ணாம்புச்சத்தும், குறைந்த அளவில் மாக்னீசியம், பாஸ்பரஸ், இரும்புச்சத்துகளும் உள்ளன. பவழத்தைப் பஸ்பம் செய்யாமல் அப்படியே கல்வத்திலிட்டு, நன்றாக அரைத்து " பிஸ்டி." என்ற பெயரில் உபயோகிப்பது ஆயுர்வேத முறைகளில் ஒன்று. அன்று சித்தர்கள் பவழத்தில் கண்டு தெரிந்த குணங்கள் எல்லாம் இன்று நவீன விஞ்ஞான சோதனைகளில் உறுதிப்பட்டுவிட்டன. பவழம் இருதய நோய்க்கு உபயோகமுள்ள மருந்து என்று ரஷிய மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு கண்டு பிடித்திருக்கிறது.

பவழ வாழ்வு

பவழக் குடியிருப்புகளில் இருக்கும் பவழப் பூச்சிகள், முட்டையையும், வித்தையும் உற்பத்தி செய்கின்றன. வித்து முதலில் நீரில் புகுந்து பின்னர் வேறு வழிகளில் அடுத்து குடியிருக்கும். அங்குள்ள பவழப்பூச்சியும் ஆண் அல்லது பெண் பூச்சியாகச் செயல்படும். அரிதாக ஒரு பூச்சியே ஆணாகவும், பெண்ணாகவும் இரண்டு வேலையையும் ஒருங்கே செய்வதும் உண்டு. கருவுற்ற முட்டை புழுவாக மாறுகிறது. புழுவாக மாறிய நிலையில் இது கடல் நீரில் நீந்திச்செல்லும். ஏராளமான பவழக் குடியிருப்புகளில் உலவும் போது அவை கடல் மீன்களுக்கும், கரைப்பிராணிகளுக்கும் இரையாகி விடுகின்றன. அப்படிக் கழிந்தவை போக மீந்து வளர்ந்து தேறிய ஒரு பவழப் பூச்சி, ஓர் இடத்தில் கடற்கரையில் தன் குடியிருப்பைத் தொடங்கும்.

சில மணி நேரத்திலேயே வெள்ளையான, பளபளப்பான பொருள், பவழப்பூச்சியின் உட்பகுதியிலும் அதன் அடியிலும் உருவாகும். அது சிமெண்ட் பூசியது போல இருப்பிடத்தை மாற்றித் தருகிறது. சில நாள்களில் பவழப் பூச்சி வெளியாக்கும் கசிவு உறைந்து சிறிய எரிமலையின் சிதறல் போன்ற ஒன்றை உருவாக்கும். ஆறு அடுக்குகளோடு அவை கோபுரவடிவில் அமையும். பவழப்பூச்சி, தான் போய்வர அமைந்துள்ள குழியிலும், ஒரு பாதுகாப்பு மூடியைத் தன் கசிவால் உருவாக்குகிறது. இந்தப் பாதுகாப்பு மூடியும் ஒரு கோபுர வடிவில் ஆறு அடுக்குகளுடன் அமைந்திருக்கும். பட்டுப்பூச்சியும், குழவியும் கூண்டுகளைத் தயாரிப்பது போல பவழப்பூச்சி, வேறொரு வழியில் தனது குடியிருப்பைப் பல வண்ணங்களில் சிமெண்ட் போன்ற தன் கசிவுப் பொருளால் உருவாக்கிக் கொள்கிறது.

பூச்சிகள் முன் கூறியவாறு பெருக்கமடையும்போது விரைவில் தனியாகப் பிரியும். அப்போது தனது வீட்டை, முந்திய வீட்டின் பக்கம் உருவாக்கிக் கொள்கிறது. சில வாரங்களில் பவழக் குடியிருப்பு தொடர்ச்சியாக கடற்கரையில் சங்கிலித் தொடர் போல் ஏற்பட்டு விடுகிறது. பவழக் குடியிருப்பு, கரையில் கடலால், ஏற்படும் அரிப்பைத் தவிர்க்க உதவுகிறது. சமப்படுத்தாத சிமெண்ட் ரோடு கடற்கரையில் போட்டதுபோல் தொடர்ச்சியாக இது அமைந்து விடுகிறது. கடற்கரைப் பவழங்கள் உள்நாட்டில் ஏற்படும் மாற்றங்களால் பாதகம் அடைகின்றன. மண் அரிப்பு கடலுக்கு வந்து பவழப் பாறைகளில் புகுந்துவிடுகிறது. அதனால் பவழப் பூச்சிகள் திக்குமுக்காடி அழிகின்றன. பவழப்பூச்சிகள் வளர இயற்கைச் சூழ்நிலை அவற்றுக்குச் சாதகமாக அமையவேண்டும். ஆற்று அரிப்பால் வரும் கழிவுகள், பவழக் குடியிருப்பில் புகுந்தால், அவை வளர்வதில்லை. பவழங்களில் சில, ஐந்து வருடங்கள் இருக்கின்றன. சில 200 வருடங்கள் வரை அழிவதில்லை. சில அதற்கு மேற்பட்டும் அழியாமல் இருக்கின்றன.



பவளம்

பவழப்பூச்சிகள் பல நிறங்களைக் கடற்கரையில் உற்பத்தி செய்யும். சித்த மருத்துவத்தில் சிவப்பு நிற, இளஞ்சிவப்பு நிறப் பவழங்களை உபயோகிக்கிறார்கள். சிவப்புப் பவழத்திற்கு விலை அதிகம். இதைச் சிவப்புத் தங்கம் என்று வியாபாரிகள் கூறுகிறார்கள். பவழங்கள் பல வண்ணங்களில் உருவாகின்றன. பலவிதப் பூக்களின் வடிவிலும் அவை அமைவது கண்ணுக்கும் விருந்து. மான் கொம்பு வடிவிலும், கடல் நீர் வற்றிய பகுதியில் பவழங்கள் அமைவதுண்டு. மயிலைப் போலவும், தேன்கூடு போலவும் உருவ அமைப்பில் தோற்றமளிக்கும். பவழப் படிவுகள் ஆரஞ்சு, அல்ட்ராவயலெட், வெள்ளை நிறங்களை இடையிடையே பெற்றுத் தோற்றமளிக்கும். வெயில் நேரத்திலும், இரவிலும் அவை பட்டொளி வீசும் அழகு, பல வண்ணங்களைத் தாங்கிய கலர்ப்படம் (மார்வோ) பார்க்கும் நினைவைத் தரும்.

நல்ல தமிழ்

வித்துவான்
தி. முத்து கண்ணப்பர்

(குறிப்பு : ஜனவரி 98, இதழ் 'நல்ல தமிழ்' பற்றிய கட்டுரையில், அச்சுப்பிழை திருத்தலின் கவனக் குறைவாய் சில பிழைகள் நேர்ந்துள்ளன. 'நல்லதமிழில்' பிழைகள் உள்ளன என்னும் குறைபாட்டுக்கு இடந்தரல் கூடாது என்னும் காரணத்தால் அப்பிழைகளின் திருத்தங்களைக் கீழே தருகிறோம். வாசக அன்பர்கள் அறிந்துகொள்ள வேண்டுகிறோம்.

தலைப்பு : போன் சட்டி வரி 4, தவறு 'போகை' திருத்தம் : 'போனக'

மங்கலம் : வரி 6, தவறு : 'திரிந்து என்று,' திருத்தம் : 'திரிந்து மங்களம் என்று.'

மங்கலம் : வரி 13, தவறு : ஏற்கனவே. திருத்தம் : ஏற்கெனவே.

மங்கலம் : வரி 22, தவறு : அப்பத்தி முழுவதும் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :

இறைவழிபாட்டுக் குழுவினர், பஜனை, காலட்சேபம் முதலியன செய்பவர், அந்நிகழ்ச்சிகளின் முடிவு என்பதைக் குறிக்க 'மங்களம்' என்று பாடுகிறார்கள். அதுகூட 'மங்கலம் பாடுகிறார்கள்' என்று இருப்பதுதான் தக்கது.

இரண்டு, மூன்று இடங்களில் 'எழுத்துக்கள்' என்று 'க்' மிகுந்துள்ளது. அது தவறு 'எழுத்துகள்' என்றிருத்தலே தக்கது.

I. பிழைகளும், திருத்தங்களும்

1. பஞ்ச சயனம் : மார்கழி மாதம், விடியற்காலையில் திருப்பாவை திருவெம்பாவை பாடி, இறைவனை வழிபடுவது வழக்கமாக உள்ளது. திருப்பாவையில் ஒரு பாடலில் (19) ''குத்துவிளக்கு எரிய'' என்று தொடங்கும் பாசுரத்தில் 'பஞ்சசயனத்தின்' மீது கண்ணன் உறங்குவதாக வருகிறது. அது ஒரு நண்பரின் ஐயத்தைக் கிளறியுள்ளது. அது 'பஞ்சு சயனம்' என்றுதானே இருக்க வேண்டும் என்று கூறினார். 'சயனம்' என்றால் படுக்கை. பஞ்சு மெத்தைக் கட்டிலில் தான் உறங்குவார்கள். அந்த எண்ணம் அவருக்கு. ஆனால் அது 'பஞ்ச' சயனம்தான்.

பஞ்ச சயனம் என்றால் அதற்கு இரண்டு வகையான பொருள்களைக் கொள்ளலாம். ஒன்று அன்னத்தூவி, பூ, இலவம் பஞ்சு, கோரை, மயிர் ஆகிய ஐந்தாலும் நிரப்பப்பட்ட மெத்தை என்பது. மற்றொன்று அழகு, குளிர்ச்சி, மெத்தென்ற தன்மை, பரிமளம், வெண்மை ஆகிய ஐந்து வகைத் தன்மைகளைக் கொண்ட படுக்கை என்று பொருள்படும். எனவே, அது பஞ்ச சயனம்தான்.

ஆயர்குலத் தலைவன் நந்தகோபன் மனையில் வளர்ந்த தெய்வக்குமரன் கண்ணன் சாதாரணப் பஞ்சு மெத்தைக் கட்டிலிலா உறங்குவான்?

2) பெரியார் அணை : இப்படி வழங்குவது தவறு. இதன் சரியான சொல் 'பெரியாறு அணை' என்பதுதான். சிலர் இதனைப் பெரியாரின் பெயரால் வழங்கப்படுகிறது போலும் என்று கருதுகிறார்கள். அது சரியன்று.

இந்தப் பெரியாறு மேற்குத் தொடர்ச்சி மலையில், கன்னிமலை என்னும் இடத்தில் உற்பத்தியாகி, கேரள மாநிலத்தில் கொச்சிக்கு வடக்கே ஓடி மேலைக்கடலில் கலக்கிறது. அந்தப் பெரியாற்றில் அணை கட்டப்பட்டு நீர் தேக்கி வைக்கப்பட்டு, ஓர் உடன்படிகை - ஒப்பந்தத்தின்படி கேரளம், தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களு பயன்படுத்தி வருகின்றன. நீர் மி சக்தியும் பெறப்படுகிறது போலும்.

இந்தப் பெரியாறு தா சிலப்பதிகாரத்தில் 'பேரியாறு' எ வழங்கப்படுகிறது. (சிலம்பு : 25:23 24). இதன் கரையில் சேர செங்குட்டுவன் அடிக்கடி சென் தங்கும் செய்தியும் குறிப்பிட பட்டுள்ளது.

பொதுவாக 'ஆறு' என்னு சொல்லைப் பெரும்பாலும் 'ஆர் என்றே வழங்குகிறார்கள். இ முரணானது. அப்படி வழங்குவதா பொருளே மாறிவிடும்.

(எ-கு) செய்யார், திருவையார் அடையார், பாலார் முதலியன இவற்றை முறையே செய்யாறு திருவையாறு, அடையாறு, பாலாறு என்றுதானே வழங்க வேண்டும்' அவ்வாறின்றிச் 'செய்யார்' என்றா 'செய்ய மாட்டார்' என்றும் 'திருவையார்' என்றால் திரு செல்வம், பெருமை அல்லது மதிப் வையார் (தரமாட்டார்) என்றும் 'அடையார்' என்றா 'அடையமாட்டார்' என்றும், 'பாலா என்றால் 'பாலையுடையார்' அல்ல 'பகுதியார்' என்றுமல்லவ விபரீதமான பொருள்களைத் தரும்

எனவே 'பெரியார்' என்பது தவறு பெரியாறு என்றுதான் வழங்கப்ப வேண்டும். இன்னும் நல்ல தமிழி மரபுப்படி 'பெரியாற்று அணை என்றுதான் சொல்ல வேண்டும் அந்தச் சந்தியைக் கூறிச் சந்திக் இழுக்க வேண்டாம். 'பெரியாறு அணை' என்றாலும் ஏற்போம் உண்மையை உணர்த்த வேண்டு என்பதுதான் நமது நோக்கம்.

3) சாப்பிடுதல், குடித்தல் :

'சாப்பிடுதல்' என்பதற்கு 'குடித்தல்' என்பதற்கும் வேறுபா உள்ளது. 'சாப்பாடு, சோ சாப்பிட்டேன்', 'பண்டங்களை

ாப்பிட்டேன்' என்று சொல்வது சரி. ஆனால் 'பால் சாப்பிட்டேன்' 'டீ' (தேநீர்) சாப்பிட்டேன்', 'காஃபி சாப்பிடுங்கள்' என்று நீர் ஆகாரங்களைச் 'சாப்பிடு' என்று வழங்குவது தவறு.

கடினமான உணவுப் பொருள்களை (Solid Food) - அதாவது மென்று விழுங்கக் கூடியவற்றைச் சாப்பிட்டேன், உண்டேன், புசித்தேன் என்று சொல்ல வேண்டும். அருந்தினேன் என்றும் சொல்லலாம். நீரான உணவுகளை (Liquid Food) குடித்தேன், பருகினேன், உண்டேன் என்றும், அருந்தினேன் என்றும் சொல்ல வேண்டும்.

'உண்ணுதல்' நீராகாரத்துக்கும் வரலாம். (எ-டு) 'நெய்யுண்ணோம், பாலுண்ணோம்' என்று திருப்பாவையில் (2) வருகிறது. கிராமப்புறங்களில் இன்னும் மக்கள், பால்குடித்தேன், டீ குடித்தேன், கஞ்சி குடித்தேன் என்று மரபு மாறாமல் சொல்வது குறிப்பிடத்தக்கது.

4) பட்டினம் - பட்டணம் : இவ்விரு சொற்களுக்கும் பொருள் வேறுபாடு இருக்கிறது. 'பட்டினம்' என்றால் கடற்கரை ஊர் அல்லது நகர் என்பது பொருள். இலக்கியங்களில் இச்சொல் 'நெய்தல் நிலம்' என்றும் வழங்கப்படுகிறது. பட்டினங்கள் சில துறைமுகங்களாகவும் இருக்கும். (எ-டு) சென்னைப் பட்டினம், காவிரிப்பூம் பட்டினம், நாகப்பட்டினம், விசாகப்பட்டினம், மசூலிப்பட்டினம் முதலியன. இன்னும் புதுப்பட்டினம், தூரங்கப்பட்டினம், மல்லிப்பட்டினம் என்று பல கடற்கரையூர்கள் வழங்கப்படுகின்றன.

'பட்டணம்' என்பது நாட்டின் உட்பகுதியிலுள்ள ஊர்களை அல்லது நகர்களைக் குறிக்க வழங்கப்படுவது. ஆனால், இப்போது 'பட்டினங்களையும்' 'பட்டணங்கள்' என்றே பெரும்பாலும் வழங்குகிறார்கள். இது மரபுக்கு மாறானதென்னும் உண்மையைக் கூறுவதன்றித் தடை செய்ய முடியுமா?

II. வலி மிகும் இடங்கள் :

இனி வலி மிகும் இடங்கள் சிலவற்றையும் அறிவோம்.

பெயரெச்சத்தின் முன் மிகாது. 'அ'கர 'இ'கரங்களை ஈற்றில் பெற்றுள்ள வினையெச்சத்தின் பின் மிகும். பெயரெச்சம், வினையெச்சம் என்பவற்றை நினைவு படுத்திக் கொள்ள வேண்டும்.

பெயரெச்சம் : முற்றுப்பெறாத வினைச் சொல்.

(எ-டு) வந்த, செய்த, நடந்த, இருந்த, ஓடின முதலியன. இத்தகைய பெயரெச்சச் சொற்களோடு அடுத்து வரும் சொல்லின் (வருமொழியின்) முதல் எழுத்துகள் க, ச,ட, த, ப, -வும் இவற்றின் இன எழுத்துகளும் சேர்ந்தால் மிகக்கூடாது.

(எ-டு) வந்த + பசு = வந்த பசு

செய்த + தொழில் = செய்த தொழில்

நடந்த + கதை = நடந்த கதை

இருந்த + செல்வம் = இருந்த செல்வம்

- பிறவும் இவ்வாறே. எனவே பெயரெச்சங்களுக்கு முன் மிகா.

ஆனால் ஒரே ஒரு பெயரெச்சத்தின் முன்னர் மட்டும் மிகும். அதாவது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் முன் மிகும். ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்றால் நிலை மொழியின் இறுதி எழுத்து மறைந்து அல்லது கெட்டு இருக்கும்.


(எ-டு) வாடா, எழுதா, பிறவா, தேடா, சேரா, மாறா - இவை போல்வன. இவற்றின் இறுதி எழுத்து 'த' என்பது மறைந்து அல்லது கெட்டு விட்டது. இவை முறையே 'எழுதாத', 'பிறவாத', 'தேடாத', 'சேராத', 'மாறாத' என்று இருத்தல் வேண்டுமல்லவா? எனவே இவை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள் எனப்படும். இவற்றின் முன் வல்லெழுத்து மிகும்.

(எ-டு) வாடா + பூ = வாடாப்பூ, எழுதா + சொல் = எழுதாச்சொல், பிறவா + தவத்தோர் = பிறவாத்தவத்தோர், தேடா + செல்வம் = தேடாச்செல்வம், சேரா + பகை = சேராப்பகை, மாறா + காசு = மாறாக்காசு என இரு சொற்களுக்கும் இடையில் வல்லெழுத்து மிகுந்துள்ளதல்லவா? இவ்வாறு உள்ள ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்களின் முன் மிகும்.

'அ'கர 'இ'கரங்களை இறுதியில் பெற்றுள்ள வினையெச்சங்களின் முன் மிகும்.

(எ-டு) பாட + கேட்டேன் = பாடக்கேட்டேன், படிக்க + சொன்னார் = படிக்கச்சொன்னார், தேடி + பார் = தேடிப்பார், ஊன்றி + படி = ஊன்றிப்படி.. இவ்வாறே பிறவும்.

பார்வை



கவி. இளங்கதிரவன்

அறிஞர் நா. கிரிதாரி பிரசாத்

✍ குன்றக்குடி பெரியபெருமாள்

இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட, வந்தனைக்குரிய சிந்தனையாளர் அறிஞர் நாகிரிதாரி பிரசாத்தின் இல்லத்து மேன் மாடியில் அமைந்துள்ள கீதை அரங்கத்தில் நுழைந்ததும், அருட்செல்வர் நாமகாலிங்கம் ஒரு நூலினுடைய முன்னுரையில், குறிப்பிட்டிருந்த நெஞ்சார்ந்த வாசகம் நம் நினைவுள் நீந்தியது!

"கீதை தேவலோகத்துத் தேராக இருந்தது. அதைப் பூமியில் இழுத்துப் போட்டு, மனிதனின் நடைபாதையாகச் செய்திருக்கிறார் திரு. கிரிதாரி பிரசாத். பழுத்த பழமாக முதிர்ந்த அனுபவத்துடன், தெளிந்த அறிவுடன் ஒரு ஸ்திதபிரக்ஞன் போல வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவருடைய தோற்றம் தெய்வீகப் பொலிவுடன் விளங்குகிறது. ஒரு ரிஷியைப் போலக் காட்சி தருகிறார்."

ஆம்; அருட்செல்வர் நா.ம. உணர்ந்து எழுதிய உருவப் பொலிவையே நாமும் கண்டு உவந்தோம். அறிஞர் பிரசாத், ஒரு முனிவரைப் போலவே நமக்குக் காட்சி அளித்தார். அதுவும் ஒரு தமிழ் முனிவரைப் போலவே வீற்றிருந்தார். எதிரே உள்ள மேசையில் திருமந்திரம், திவ்யப் பிரபந்தம், சிவஞானபோதம், பெரியபுராணம், திருவருட்பா, தேவாரம், திருவாசகம், கீதை முதலிய தெய்வப் பனுவல்களும், அப் பெருமகனாரைச் சுற்றியுள்ள தாங்கு தளங்களில் சங்க நூல்கள் முதலான பன்னூறு பன்மொழி நூல்களும் வரிசை வரிசையாக இடம் பெற்றிருந்த பான்மை, அப் பேரறிவாளரின் மேன்மையை உணர்த்தியதோடு, அப் பெருந் தகையை ஒரு தமிழ் முனிவராகவே நினைக்கத் தக்க கருத்தை நெஞ்சுள் விதைத்தது.

தொண்ணூறு வயதைத் தொட்டுக் கொண்டிருக்கும் அறிஞர் கிரிதாரி பிரசாத், பல்லாண்டுகளாக ஞாயிறு தோறும், தம் இல்லத்து மேன் மாடிக் கீதை அரங்கில், பெரிய புராணம் சொல்கிறார்; அருளமு தான திருவருட்பாவைப் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பகர்கிறார்; இனித்த தமிழில் கீதையின் மெய்ப் பொருளை எடுத்தியம்புகிறார்; திருமந்திரம் முதலான நமது தெய்வ அருள் நூல்களின் திட்பத்தையும், நுட்பத் தையும் தெளிவிக்கிறார். வருகை தருவோரின் மன வளத்தை வாரந் தோறும் செழிக்கச் செய்யும் செயற்கரிய செயலை, மூச்சுள்ள வரையும் முனைந்து செய்வே னெனக் கூறும் மூதறிஞர் பிரசாத்தின் பெருவாழ்வு - நினைந்து நினைந்து போற்றத் தக்கது; நெகிழ்ந்து பாராட்டத் தக்கது.

வயது காரணமாகப் பயணங் களைத் தவிர்த்து, வாழும் இல்லத்திலேயே, வாழ்வாங்கு வாழ வழிகாட்டிக் கொண்டிருக்கும் அறிஞர் பிரசாத்தின் அரிய பொழிவுகளைச் செவிமடுத்துச் சிந்தையில் கொள்ளும் கோவை வாழ் அன்பர்கள் கொடுத்து வைத்தவர்கள்.சொல்லப்போனால் பேறு பெற்றவர்கள்!



"புனைந்துரையேன், பொய் புகலேன், சத்தியம் சொல்கின்றேன்" எனப் பேசிய வள்ளல் பெருமான் இராமலிங்கர், "நானுரைக்கும் வார்த்தையெலாம் நாயகன்தன் வார்த்தை" என்றார். எனவேதான் பெருமான் இராமலிங்கர் அருளிய செய்யுள்களெல்லாம் 'அருட்பா' ஆயின. அவை 'திரு அருட்பா' என அழைக்கவும், போற்றவும் பெற்றன. இயல்பாகவே இறையுணர்வு மிக்க மனநலம் பெற்றிருந்த அறிஞர் கிரிதாரி பிரசாத், அவல வயிற்றை வளர்ப்பதற்கே அல்லும் பகலும் அதில் நினைவாய்க் கவலைப் படுவதை ஒதுக்கி வைத்து, அருள் நூல்களை ஓதி உணரத் தொடங்கியபோது, 'திருவருட்பா' பிரசாத்தின் பேருள்ளதைச் 'சிக்'கெனப் பிடித்துக் கொண்டது!

கோவையில் வாழ்ந்த பெருநிலக் கிழார் வி.சி.சுப்பையா

கவுண்டரின் பரிவும், அன்பும், அருட்செல்வர் நாமவின் அன்பும், தொடர்பும் வள்ளல் பெருமான் நிறுவிய ஆன்மநேய ஒருமைப் பாட்டுச் சன்மார்க்க நெறியை ஆழ்ந்து உணருதற்கும், அகில மெங்கும் பரப்புதற்கும் அறிஞர் பிரசாத்திற்கு அரிய வாய்ப்பை அளித்தன. திருவருட்பாவைப் படித்துப் படித்து, உள்ளத்துள் பதித்துப் பதித்துத் திளைத்த அறிஞர் கிரிதாரி பிரசாத், தாம் சுற்றுத் தெளிந்திருந்த உலக சமய ஞானத் தத்துவங்களையெல்லாம் திருவருட்பாவுடன் இணைத்து இணைத்துப் பார்த்து, மானு டத்தின் மலர்ச்சிக்கு வள்ளல் பெருமான் நிறுவிய சன்மார்க்க நெறி எத்தகைய ஒளியை ஊட்டுகிறதென்பதை நினைந்து, நெகிழ்ந்து மகிழ்ந்தார். தாம் பெற்ற மகிழ்வு, மனம் பெற்ற அனைத்து மக்களுக்கும் சென்று சேர வேண்டும் என்ற சீரிய நோக்கில், தித்திப்புத் தமிழால் திருவருட்பாச் சிறப்பை 1940 ஆம் ஆண்டு வாக்கி லேயே நாடெங்கும் உரைத்து, உணர்த்தத் தொடங்கினார் அறிஞர் பிரசாத்.

கோவையில் சன்மார்க்க சங்க மாளிகை எழவும், அதனருகே அறிஞர் பிரசாத்தின் இல்லம் உருவாகவும் இடமளித்து உதவிய பெருநிலக் கிழார் விசி சுப்பையா கவுண்டர், சங்கத் தலைவராகப் பொறுப்பேற்றிருந்த காலத்தில், சங்கச் செயலாளராக வீற்றிருந்த பிரசாத், வாரந்தோறும் பயனுள்ள சொற்பொழிவு, பிரார்த்தனை நிகழ்ச்சிகளை ஏற்படுத்தி, சன்மார்க்க நெறியின் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உணர்வைத் தழைத்துச் செழிக்கச் செய்தார். கோவை சன்மார்க்க சங்கம் அக்டோபரில் நடத்தும் ஆண்டு விழா நிகழ்ச்சி, தமிழகம் அறிந்தது: தலை சிறந்த அறிஞர் பெரு மக்களின் சங்கமமாகத் திகழும் ஆண்டுவிழா பெரும் பயன் ஊட்டியது; பெரும் புகழ் ஈட்டியது! 1950 ஆம் ஆண்டு, இலங்கை சென்ற கிரிதாரி பிரசாத் யாழ்ப்பாணத்தில் இராமலிங்கர் பணி மன்றத்தை நிறுவியது குறிப்பிடத் தக்கது. பெருநிலக் கிழார் விசி. சுப்பையா கவுண்டரின் மறைவுக்குப் பின்னர், 1958இல் அருட்செல்வர் நா.ம. கோவை சன்மார்க்க சங்கத் தலைவர் பொறுப்பேற்றார். அப்போதும் பிரசாத் சங்கச் செயலாளர் ஆனார். ஐம்பது ஆண்டுகளாக, கோவை சன்மார்க்க சங்கம் ஆற்றி வரும் அரிய பணிகளுக்கு அச்சாணி யாகவும், வள்ளல் பெருமானின் உள்ளக் கிடக்கையை உணர்த்தி வரும் உரிய செயல்களுக்கு உந்து சக்தியாகவும் அறிஞர் பிரசாத் திகழ்ந்து வருகிறார்.

உள்ளம் கனிய, உணர்வு ஓங்க, உயிர் தழைக்க மணிவாசகப் பெருமான் அருளிய திருவாச கத்தை ஓதி, ஓதி, உணர்ந்து உணர்ந்து, திளைத்த அறிஞர் கிரிதாரி பிரசாத். பல்லாண்டுகளாக நிகழ்த்தியுள்ள திருவாசக உரை வரலாற்றுச் சிறப்பிற்குரியது. அரங்கம் நிரம்பிய அன்பர் பல்லாயிரவர், பயன்பெற்ற அந்நிகழ்ச்சிகள், உள்ளார்ந்த உணர்வுடன் வெண்கலக் குரலில் திருவாசகத்தை உணர்த்தும் பிரசாத்தின் பன்னூல் திறத்தை, பன்மொழி ஞானத்தை எடுத்தியம்பு வதாய் அமைவன. கேட்பவர் மனங்கொள்ளுமாறும், பின்பற்றுமாறும் ஆற்றும் உரைகளின் அருமை - அறிஞர் பிரசாத் பெற்ற தனிப் பெருமை.

உலக மொழிகள் அனைத் திலும் மொழி பெயர்க்கப் பெற்றுள்ள கீதை, இந்திய நாட்டின் மாபெரும் சொத்து. "எண்ணரும் புகழ்க் கீதை" என மகாகவி பாரதி பேசுவான். கீதையில் கொண்ட ஈடுபாட்டுணர்வால், கீதை ஸ்லோகங்களை, அவற்றின் ஆற்றல் சிறிதும் குறையாமல், மகாகவி தமிழில் மொழி பெயர்த்துள்ளான். கீதையை மாணவப் பருவத்தி லேயே படித்து, அதன் உள்ளீடான கருத்துகளில் உள்ளம் பறி கொடுத்த கிரிதாரி பிரசாத்தின் பேச்சும், மூச்சும், சிந்தனையும் சித்தமும் இளமைக் காலம் முதலாகவே கீதை பற்றியே, சுழல்வதாயின. கீதை பற்றி எழுதிய வியாக்யானங்கள், விளக்கங்கள் அனைத்தையும் ஓர் ஆவேசத் துடன் படித்தார் அப்பெருமகனார். அருட்செல்வர் நா.மகாலிங்கம் பல்லாண்டுகளாகச் சென்னையில் நடத்தி வரும் காந்தி - வள்ளலார் தொடர் விழாவில், அதிகாலை 7.30 மணிக்கு அறிஞர் கிரிதாரி பிரசாத்தின் 'கீதைப் பேருரை' நிகழ்ச்சி இடம் பெறும். சென்னையில் காலை 7 மணிக்கே அரங்கம் நிறைந்து விடும். குற்றால அருவிபோல, ஒரு மணி நேரம் கொட்டுகொட்டெனக்கொட்டும் பிரசாத்தின் தமிழருவியில் பல்லாயிரவர் நாள்தோறும் நனைந்து பயன்பெறுவர். இல்லம் சென்று நினைந்து நலம் பெறுவர். அது ஓர் அற்புத அனுபவம்! அனுபவித்தவரே அறிஞர் பிரசாத்தின் அற்புதக் கீதைப் பேருரையை உணர முடியும்.

அருட்செல்வர் நா.ம. தலைமையில், இராமலிங்கர் பணி மன்றம் பல்லாண்டுகளாகச் சென்னையில் நடத்திய காந்தி - வள்ளலார் விழாவின் காலைப் பேருரைகள் - ஆம், அறிஞர் கிரிதாரி பிரசாத்தின் அற்புதப் பொழிவுகள் - அரிய நூலாக

உருவாக்கம் பெற்றுள்ளன. 'கீதைப் பேருரை' எனத் தலைப்பிட்டு, 500 பக்கங்களுக்கு மேல் உள்ள இத் திருநூல், பிரசாத்தின் உரை ஒலிப்பதிவு நாடாக்களை, என்றும் நின்று பயன்தர-எழுத்தில் கொண்டு வந்த அறிஞர் பகீரதனின் அபூர்வக் கொடை! "நூலைப் படிக்க ஆரம்பித்தவுடன் அதைக் கீழே வைக்கவே தோன்றவில்லை. இனிய எளிய தமிழில் ஒரு சுவையான நாவலைப் படிப்பது போல அவ்வளவு சிறப்பாக இருந்தது." என முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார் அருட்செல்வர் நா.மகாலிங்கம் அவர்கள்.

எழுபது ஆண்டுகளாக தமிழ்நாடு, இந்தியத் துணைக் கண்டம் முழுவதுமாகப் பயணம் செய்து உன்னதமான உரைப் பொழிவுகளை வழங்கியிருப்பதோடு, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா, லண்டன், ஜெர்மனி முதலான அயல் நாடுகளுக்கும் பன்முறை சென்று தமிழின் அருள் நூல்களை, இந்திய நாட்டின் ஆன்மிகப் பனுவல்களை தமிழிலும், ஆங்கிலத்திலும் உரை நிகழ்த்தி உலகமறியச் செய்துள்ள அறிஞர் கிரிதாரி பிரசாத்தின் ஒரே திருநூல் 'கீதைப் பேருரை' மட்டுமே! அதனால் என்ன? "நாராய்! நாராய் செங்கால் நாராய் - பனம்படு ப்ழத்தின் கிழங்கு பிளந்தன்ன பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!" எனத் தொடங்கும் ஒரே ஒரு பாடலைப் பாடிய சத்திமுற்றத்துப் புலவர் தமிழின் இலக்கியச் சரித்திரத்தில் சிரஞ்சீவியாய் நிற்பதுபோல, அறிஞர் பிரசாத், 'கீதைப் பேருரை' என்னும் திருநூலின் மூலம் என்றென்றும் பெரும்புகழோடு நிற்பார்! பல்லாயிரக் கணக்கான தமிழ் இல்லங்களில் குடியேறியுள்ள இத் திருநூல் - தலைமுறை தலைமுறையாகப் படிக்கப் பெறும். தலை சிறந்த ஆன்மிகக் கருவூலமாகப் பேணப்பெறும்.

"அருட்பா அரசர்"

"கீதாபோதகர்" எனப் போற்றிச் சிறப்பிக்கப் பெற்றுள்ள அறிஞர் கிரிதாரி பிரசாத், தொழில் காரணமாக வட நாட்டிலிருந்து வாணியம்பாடிக்குக் குடியேறிய— இந்தியைத் தாய் மொழியாகக் கொண்ட— ஒரு குடும்பத்தில் பிறந்தவராவார். வாணியம்பாடியில் வசித்த நாராயண பிரசாத் - இரத்தினாபாய் புதல்வராக 1908 ஆம் ஆண்டு பிறந்த பிரசாத், தொடக்கக் கல்வியை வாணியம்பாடி லண்டன் மிஷன் பள்ளியிலும், உயர் நிலைக் கல்வியை இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளியிலும் பயின்று, இஸ்லாமியா கல்லூரியில் இண்டர் மீடியட் முடித்து, சென்னை பச்சையப்பா கல்லூரியில் பி.ஏ. பட்டம் பெற்றார். பச்சையப்பா கல்லூரியில் உடன் பயின்ற மாணவராக பேரறிஞர் அண்ணாவுடன் கற்றதை, பிரசாத், பெருமகிழ்ச்சியுடன் எடுத்துரைக்கிறார்.

பட்டம் பெற்ற பின்னர், கோயம்புத்தூர் மாவட்டக் கழகத்தில், 1940 ஆம் ஆண்டு முதல் இரண்டு ஆண்டுகள் பி.எல். படித்து வழக்கறிஞரானார்.


மாவட்டக் கழகத்தில் மீண்டும் இணையாது, 'ஹைவேஸ் காண்ட்ராக்டராகப்' பணி தொடங்கிய பிரசாத்திற்கு, பெருநிலக் கிழார் வி.சி. சுப்பையா கவுண்டரின் தொடர்பு, வாழ்வுப் பாதையில் பெருந் திருப்பமாக அமைந்தது.

அருட்செல்வர்களான இராம, கிருஷ்ணர், விவேகானந்தர் வாழ்வுப் பணிகளை, வழங்கிய அருள்மொழிகளை இளமை முதலாகவே படித்துணர்ந்திருந்த பிரசாத் திருவருட்பாவை, திருவாசகத் தையும் ஈடுபாட்டுணர்வுடன் எழுத்தெண்ணிக் கற்றார் இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றின் மூல நூல்களையும் கம்பன், வியாசரையும் ஆழ்ந்து கற்றுணர்ந்த இப்பேரறிவாளர் பகவத் கீதையை நாளும் ஓதி ஓதி உள்ளுணர்வைச் செழிக்கச் செய்தார். உலகளாவிய ஆங்கிலத் தத்துவ நூல்களை ஆர்வத்துடன் கற்றுத் தேர்ந்த அறிஞர் கிரிதாரி பிரசாத், உரையாற்றுகிறபோது கற்றுணர்ந்த உயர் கருத்துகளையெல்லாம், செவிமடுப்போர் சிந்தையுள் புகுத்திவிடும் அற்புதத் திறன் பெற்றவர்; அரிய வித்தகம் உடையவர். அப்பெருமகனாரது உரை, கவின்மிகு கருத்துக் களஞ்சியமாகவே மிளிரும். எழுபது ஆண்டுகளாக, இலட்சக் கணக்கான மேடைகளில் பன்னூறு கோடி மக்களின் மனங்களைப் பக்குவப்படுத்த தமது சுவையும் பயனுமிக்க உரைகளைப் பயன்படுத்தி வந்துள்ள அறிஞர் பிரசாத், தமதுள்ளம் பக்குவப்பட அருள்பாலித்த சுவாமி அபேதானந்த மகராஜ், தமது வாழ்விற்குத் தக்கதொரு திருப்பம் அளித்த பெருநிலக்கிழார் வி.சி.சுப்பையா கவுண்டர், தமது வாழ்வுப் பாதைக்கு உரியதோர் ஒளி ஊட்டி வருகின்ற அருட் செல்வர் நா.மகாலிங்கம் ஆகிய பெருமக்களை நன்றிப் பெருக் கோடு கூறிக் கண்களை நனைத்துக் கொள்ளும்போது, அப்பெரு மகனாரின் உன்னத உள்ளத்தைத் தரிசித்து மகிழ்ந்தோம்.

❋❋❋


வேண்டும் ஒரு புது வேள்வி

- நா.சி. வரதராஜன் -



தில்லியிலே வெடிகுண்டு! தெருமுனையில் வெடிகுண்டு!
சொல்லவொணாச் சோகங்கள்! தொடர்கதையாய்த் தினந்தினமும்
நெஞ்சு பதைபதைக்க நேர்மையிங்கு வாழ்வதற்கே
அஞ்சியெங்கோ ஓடிவிட்ட அவலமென - ஈதென்ன..?
தெருவினிலே பட்டாசைத் தீபாவளியன்று
சிறுவர்கள் கொளுத்துகையில் செவிப்பறையை அவ்வோசை
மோதுவதைக் கேட்டே நாம் முணுமுணுப்போம்! இந்நாட்டில்
வீதியிலே நடப்பதற்கும் வெளியூர்க்குப் பயணமெனப்
பேருந்தில் செல்வதற்கும் பெரிதாக ரயிலென்னும்
தேரொன்றில் போவதற்கும் சீறும் வானூர்தியிலே
ஏறிப் பறப்பதற்கும் - என்றுமிலா ஒரு பீதி!
சிறிவரும் வெடிகுண்டுச் செய்திகளால் தினந்தோறும்
நெஞ்சில் இடி விழ, நம் நிம்மதியே செத்துவிட,
கொஞ்சமுமே அர்த்தமின்றிக் கொலையிங்கோர் கலையாக,
ஏதோ சில வெறியர் இனம்புரியாக் கோபத்தில்
தீதேதும் செய்யாத சிலபேரை, அப்பாவி
மக்களினை அங்கங்கே மாய்க்கும்பேய் ஆட்டமிது!
பொக்கிஷமாய் நாமிங்கே போற்றிவந்தோம் பண்பாட்டை!
விடுதலைப்போர் கூட ஒரு விந்தை அகிம்சை நெறியில்
கெடுதலையே செய்யாத கிளர்ச்சியெனும் புதுப்பாட்டை
தன்னில் நடக்க வைத்த தலைவர்கள் வாழ்ந்த நிலம்
இந்நாளை இக் குண்டர்களின் இழிசெயலால் நிலைகெட்டு
வெடிகுண்டுக் கலாசாரம் வெற்றிநடை போடுவதா?
படைகொண்டு இதை நம்மால் தடை செய்ய முடியாது!
பாரதத்து மக்களெலாம் பண்புடனே ஒற்றுமையாய்
வீரமுடன் இதையெதிர்க்க வீறுகொண்டே எழ வேண்டும்!
பண்பாட்டுச் சீர்கேடாம் பகைமையினை வேரறுக்கத்
தென்போடு பாரதமே திரண்டெழுந்து வர வேண்டும்!
இந்தவொரு சீர்கேட்டை எரிப்போம்! இவ் வேள்வியினால்
சந்ததியைக் காக்க மக்கள் சக்தியினைத் திரட்டிடுவோம்!

காந்திஜியின் இரு சொட்டுக் கண்ணீர்



பாரதி காவலர் டாக்டர் கே. ராமமூர்த்தி.

அன்று மகா சிவராத்திரி.

ஜோதிர்லிங்க ஸ்தலமான பீமா சங்கர் அண்மையில் உள்ள அஷ்டவிநாயக க்ஷேத்திரங்களை நாற்புறமும் கொண்டிலங்கும் அந்தப் புனே நகரில்....

சமயத்துறவி தியானேஷ்வர் வாழ்ந்த ஆலந்தியும், கவிஞர் துக்காராம் பிறந்து வளர்ந்த தெஹு-வும் அருகிலேயே உள்ள தெய்வீகம் நிறைந்த புனே நகரில்...

சத்ரபதி சிவாஜி மகாராஜின் நினைவுகளை எழுப்பும் நகரமான புனேயில் இந்திய சுதந்தரத்தின் முதல் புரட்சி வீரன் வாசுதேவ ப்லவந்த பட்கே பிறந்தான். காங்கிரஸ் மகாசபையின் பத்தாவது ஆண்டு கோலாகல எழுச்சியுடன் கொண்டாடப் பட்டதும் புனேயில் தான். வீரமும் தேசப் பற்றும் ஒன்றிய இடமே புனே நகரம்.

அவ்வாறான தேசியமும், தெய்விகமும் உறைந்த புனே நகரில், அன்றைய மகாசிவராத்திரி நாளில் காந்தியடிகளின் கண்களில் நீர் மல்கியது.

பதினெட்டு வயதில் கப்பலேறி தென் ஆப்பிரிக்கா சென்று அங்கே நிறவெறிக் கொடுமை கண்டு கொதித்தெழுந்து, சத்யாக்ரஹம் புரிந்த புனித காந்தி, புனே நகரில், சிவராத்திரி அன்று, துயர் வடிவாய்ச் சோர்ந்து, கண்களில் நீர் மல்க...

சுதந்தர வேள்வியில் ஒத்துழையாமை, சிவில் கீழ்ப்படியாமை, இயக்கங்களும், உப்பு சத்தியாகிரகமும் நடந்த போதெல்லாம் கலங்காதவர் காந்தியடிகள். வாழ்வில் எத்தனையோ சோதனைகள்! அத்தனையும் கண் கலங்காமல் கருத்துடன் எண்ணிச் சிந்தித்து வழி நடத்திச் சென்றவர்.

1942ஆம் ஆண்டில் சுதந்தரம் பெறுவதற்கான மகத்தான போராட்டத்தை மேற்கொண்டார். 'வெள்ளையனே வெளியேறு' (Quit India) இயக்கத்தை 'செய் அல்லது செத்து மடி' என்னும் மந்திரத்துடன் நிகழ்த்தினார். அப்போதும் காந்தியடிகள் கண்ட கொடூரங்கள் கொடுமைகள் எண்ணிறந்தனவாக இருந்தும் கண் கலங்காதவர் அவர்.

முன்னைவிட, 1942 ஆகஸ்ட் புரட்சி இந்தியாவெங்கும் எழுச்சியுடன் பரவியது. நேருஜி, பட்டேல், ஆஸாத் மற்றும் தேசத் தலைவர்கள் எல்லாரும் சிறைச் சாலையில் அடைக்கப்பட்டனர். நாடே பெரும் கொந்தளிப்பில் மூழ்கியது. காந்தியடிகள் கலங்கவில்லை.

9-8-42 காலை மகாத்மா காந்தியடிகளையும் பிரிட்டிஷ் அரசு கைது செய்தது. பிர்லா மாளிகையில் கஸ்தூரிபாவுடன் இரு காந்தியடிகளை, போலீஸ் கை செய்து அழைத்துக் கொண் போய்விட்டார்கள்.

அன்று மாலை சிவாஜி பார்க்கி காந்தியடிகள் உரையாற்றுவத நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட் ருந்தது. அதற்குள் அண்ணலை கைது செய்துவிட்டனர்.

ஆனால், அன்னை கஸ்தூரி அன்றைய மாலைக் கூட்டத்தி உரை நிகழ்த்தத் தீர்மானித்துவிட்ட அவ்வாறு கஸ்தூரிபா கூட்டத்தி பேசினால் அவரையும் கை செய்வார்கள் என்று உட இருந்தோர் சொல்லியும் கஸ்தூரி கேட்கவில்லை.

பதின்மூன்று வயதி திருமணமான நாளிலிருந் காந்தியடிகளுடன் ஒன்றியு போராடியும், பலவற்றைக் கற்று சோதனைகளுக்கு ஆட்பட் துயருற்றவர் கஸ்தூரிபா! தெ ஆப்பிரிக்காவில் கணவருட வாழ்ந்த போதே சத்யாக்கிரஹத்தி ஈடுபட்ட வீராங்கனை அன்ன கஸ்தூரிபா. தியாக உள்ள கொண்ட கஸ்தூரிபா அன்னையா சுதந்தர வேள்வியில் கலந் கொள்ளாமல் இருக்க முடி வில்லை.

அண்ணலுடன் அறுபது ஆண் காலப் பிணைப்பு கொண் அன்னை கஸ்தூரிபா, கணவருக் நேரும் கஷ்டங்களை எண்ணி கண் கலங்கினார். அன்றே கஸ்து பாவையும் போலீஸார் கை செய்தனர்.

கஸ்தூரிபாவுடன் இரு பியாரிலால், சுசீலா நய்யாரைய கைது செய்தனர். கூட்டத்தி பேசுவதாக இருந்த கஸ்தூரிப கைதானதும் பரபரப்பு மிகுந்தது.

காந்தியடிகளைக் கைது செய் ஏற்கெனவே புனேக்குக் கொண் சென்றிருந்தனர். கஸ்தூரிப பியாரேலால், சுசீலா நய்ய

ூதியோரையும் புனே நகரில் றைவாசத்திற்குக் கொண்டு சென்றனர். நாடெங்கும் ஊர்வலங் ள், கூட்டங்கள் கொந்தளிப்பின் டிவமாகி சுதந்தரக் கனல் எங்கும் ரவிற்று.

புனே நகரில் உள்ள ஆகாகான் ாளிகையைச் சிறைக்கோட்டமாக்கி, ங்கே அனைவரையும் அடைத்து வைத்தார்கள். சிறைச் சாலையின் டம் என்னவோ அரண்மனை ான். ஆனால் அடைபட்டவர் ளைக் கைதிகளாகத் தான் வைத்திருந்தார்கள். அங்கிருந்து ங்கும் செல்ல முடியாது. தந்தரமாக எதுவும் செய்ய டியாது.

முன்பு பலமுறை புனே நகரில் ள்ள எரவாடா சிறைவாசத்தை ந்தியடிகள் அனுபவித்திருக்கிறார்.

புனேயில் உள்ள ஆகாகான் ரண்மனைக் கைதிகளின் காவல் ட்டுப்பாட்டுப் பாசறையாக ாறியது. பாதுகாப்புக் காவல் கதிகளாக தேசபக்தர்கள் அங்கே ந்தர வேள்விக்காகத் தங்களை ர்ப்பணித்த வண்ணம் இருந் ர்கள்.

அங்கே மீராபென், பிரபாவதி ராயன் ஓர் அறையில் இருந்தனர். விக்குயில் சரோஜினி தேவி ஓர் றையில், காந்திஜியின் காரியதரிசி ஹாதேவ தேசாய் ஓர் அறையில், ந்தியடிகளும், கஸ்தூரிபாவும் ன்னோர் அறையில் அலுவலக க இருந்த அறையில் கில்டரும் பாரேலாலும் இருந்தனர்.

காந்தியடிகள் ஒவ்வொரு டத்தையும் பயனுள்ளதாகவே த்து வந்தார். அந்த அரண்மனை மாம் சுல்தான் ஷா கரீம் காகானு(நான்காவது)க்குச் ந்தமானது.

இமாம் சுல்தான் ஷா கரீம் காகான் (மூன்றாவது) 1877இல் ந்தனர். தமது எட்டாவது வயதில் ட்டம் ஏற்ற சுல்தான் அதன் பிறகு



ஏழு ஆண்டுகள் கழித்து 1892இல் இந்த ஆகாகான் மாளிகை கட்டப்பட்டது.

சுதந்தரப் போராட்டத்தின் இறுதித் திருப்புமுனையாக 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் நாடெங்கும் மிகத் தீவிரமாகப் பரவிய கால கட்டத்தில் காந்தியடிகள் புனே நகரில் பாதுகாப்பு காவல் கைதியாக்கப் பட்டு செயலிழக்கும்படி செய்து விட்டார்கள்.

அதனை எண்ணி காந்தியடிகள் கண்ணீர் விடவில்லை. இங்கு வந்ததும் கூடவே கஸ்தூரிபாவையும் கைது செய்து பிரிட்டிஷார் இங்கு அனுப்பிவிட்டார்களே என்று துயரப்பட்டார். காலமெல்லாம் தனக்கு உறுதுணையாக இருந்து, சுகமே கண்டறியாத அந்தத் தாய் வடிவான கஸ்தூரியை நினைத்துக் கூட காந்தியடிகள் கண்ணீர் விடவில்லை.

வந்த சில நாள்களிலேயே மஹாதேவ தேசாய் மரண மடைந்துவிட்டார். 15-8-42இல் அந்தச் சோகம் காந்தியடிகளை ஓர் உலுக்கு உலுக்கிவிட்டது.

மஹாதேவ தேசாய் காந்தியடிகளின் நிழல்; அந்த சத்திய நாயகனை பா-பாபு தங்கள் பிள்ளை போல் நேசித்து வந்தார்கள். அப்படி நேசித்து வந்த மஹாதேவ தேசாயின் மறைவால் காந்தியடிகள் அதிர்ந்து போனார். தமது திட்டங்களுக்கும், சுதந்தரப் போரில் முன்நின்ற தமக்கு வடிவமைப்புகள் தந்து சத்தியக் கேடயமாக இருந்த தேசாய் மறைவைக் காந்தியடிகளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. துயர் மண்டி, சோகம் நெஞ்சை அடைத்து இதயத்தைக் கவ்வி நின்றது. சுதந்தரம் பெறும் வாய்ப்பு நெருங்கும் நிலையில், வழிகாட்ட வேண்டிய தேசப்பிதா காந்தியடிகளின் இதயத்தில் சோக இருள் படர்ந்துவிட்டது. பிரியமான தேசாயை நினைக்க நினைக்க விம்மல் நெஞ்சை அடைத்தது.

கண்களில் மல்கிய கண்ணீரை அடக்கிக் கொண்டார். பிரிவென்னும் துயரத்தை உள்ளத்தின் வாட்டத்தை திடமனம் கொண்டு, தேற்றிக் கொண்டார். காந்தியடிகள் கண்ணீர் சிந்தவில்லை.

தேசத்தின் கொந்தளிப்பில், மனத்தின் கொந்தளிப்பைக் கரைத்துக் கொண்ட காந்தியடிகள் கொழுந்து விட்டெரியும் சுதந்தரக் கனலிலேயே ஆழ்ந்திருந்தார். வெள்ளையரின் கொடுமைகள் பன்மடங்காயின. புனே ஆகாகான் சிறையிலேயே அண்ணல் உண்ணாநோன்பு மேற்கொண்டார்.

எழுபத்து நான்கு வயதில் உடலை வருத்திக் கொள்ளும் காந்தியடிகளின் நிலையை எண்ணி கஸ்தூரிபா கவலை கொண்டார். தேசம் தேசம் என்று தன் தேகத்தை வருத்திக் கொள்ளும் காந்தியடிகளின் அருகிலிருந்து கஸ்தூரிபா அனைத்துப் பணி விடைகளையும் செய்து வந்தார். அதே வயதுடையவர் தான் கஸ்தூரிபாவும். அன்னை போல் உதவும் மனைவியின் துயர் கண்டு காந்தியடிகள் கலங்கினார். கண்ணீர் சிந்தவில்லை.

21ஆம் நாள் உண்ணாவிரதம் முடியும் போது காந்தியடிகளுக்கு இச்சிலிப்பழ ரசம் கொடுத்தவர் கஸ்தூரிபா தான்.

முதிர்ந்த வயதில் அதனால் விளையும் சரீர உபாதைகள் பற்றி நினைத்தே கஸ்தூரிபா கவலை கொண்டார். அன்னையின் உடல்

நிலையும் மிகவும் மோசமாகியது.

1943ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் தேதி அங்கே, காந்தியடிகள் நமது தேசியக் கொடியை ஏற்றினார். 1944ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் தேதி அங்கே காங்கிரஸின் இராட்டைக் கொடியை ஏற்றினார். கொடியேற்றிக் கொடியேற்றி சிறையிலிருந்தே தேசத்திற்கு வழி காட்டினார்.

வெளிப்பார்வைக்குக் கலங்காமல் கண்ணீர் விடாமலிருந்தாலும் காந்தியடிகளின் தேகநிலை மிகமிக பலவீனமானது. கூடவே இருந்த கஸ்தூரிபா மனந்தளர்ந்து, மனந்தளர்ந்து, உடல் நலிவுற்று நோய்வாய்ப்பட்டார்.

இருவரையும் விடுதலை செய்ய எவ்வளவோ குரல்கள் வலுத்தும் பிரிட்டிஷ் அரசு செவி சாய்க்க வில்லை. கஸ்தூரிபாவின் உடல் நிலை நாளுக்கு நாள் மோசமாகியது. முன்பு சரோஜினி தேவியை உடல்நிலை கருதி விடுதலை செய்தது போல் இவரையும் விடுதலை செய்யப் பலர் கோரியும் வெள்ளையர்கள் அதற்கு இணங்கவில்லை.

காந்தியடிகள் கஸ்தூரிபாவின் அருகில் இருந்தார். அன்னலின் அகநயனம் எத்தனையோ முன் நிகழ்வுகளைக் காட்சிகளாகக் கண்டு கொண்டிருந்தது. காந்தியடிகளைப் பார்த்து, கஸ்தூரிபா தமது கைகளை உயர்த்தினார்.

அன்று மகா சிவராத்திரி. அன்று தான் 1944ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22ஆம் தேதி காந்தியடிகள் தம் மகன் தேவதாஸ் காந்தியிடம் சொன்னார் :

“இருதினங்களாக உன் தாயார் எதுவும் சாப்பிடவில்லை. மருந்து இனி என்ன செய்யும்? இப்பொழுது அவள் ஈஸ்வரன் கையில் இருக்கிறாள். சரீர வேதனை செய்ய வேண்டாம்”.

உயர்த்திய கைகளைக் கூப்பியபடி, தலை வணங்குவது போல் சில நிமிடங்கள் பிரார்த்தனை செய்த அன்னை கஸ்தூரிபா உதடுகளிலிருந்து எழுந்த,

“பகவான் என் அடைக்கலம் ஈச்வரா, உன் கிருபைக்காக மன்றாடுகிறேன்.”



என்ற வார்த்தைகள் எங்கும் ஒலித்தன.

காந்தியடிகளின் வலது மடியில் தலையைச் சாய்த்தபடி, கணவரின் அன்பு வருடலுடன் அன்னை கஸ்தூரிபா மறைந்து விட்டார். ஆம்; அன்று மஹா சிவராத்திரி, அந்த நாளில் ஆகாகான் சிறையில் அன்னை பூதஉடல் நீத்தார்.

பா மறைவால் பாபு அடைந்த மனத் துயரத்தை என் சொல்ல! கண் முன்னே கஸ்தூரிபா உடலை சிதையிலே கனல் கவ்வ .... தியாக உடல் செந்தீயில்...

கட்டுண்ட மனத்துடன் கனல் கவ்வும் கஸ்தூரிபா உடலைக் கண்ணுற்ற காந்தியடிகளுக்கு விம்மிவிம்மி, விம்மிவிம்மி அழுகை நீர்வீழ்ச்சியாக உருவெடுத்து வரக் கிளம்பியது. தேசத்தையும் நெருங்கி வரும் சுதந்தரத்தையும் ஒளியாகக் காண்கிற காந்தியடிகள் கண்களில் குளமாக வர யத்தனித்தது.

கஸ்தூரிபா, கணவரைத் தெய்வமாகக் காண்பவர். பதித்தொண்டே பெரும் தொண்டாகக் கொண்டு வாழ்பவர். படித்தறியாத அப்பெண்மணி காந்தியடிகள் என்ற பள்ளியில் படித்துப் பட்டம் பெற்ற பெண்ணரசி ஆவார்.

காந்தியடிகளுக்கு, தாம் தொடங்கிய “வெள்ளையனே வெளியேறு” இயக்கத்தைத் தீவிரப் படுத்த மக்கள் மத்தியில் தாம் இல்லையே என்ற வருத்தம் ஒரு புறம். தன் நிழலாக இருந்த மஹாதேவ தேசாய் எல்லாவற்றிலும் உடனிருந்து கைகொடுக்கும் கஸ்தூரிபா மறைவு ஏற்படுத்திய மாளாத் துயரம் இப்போது. முப்புறமும் முன்னின்று இதயத்தை வருடிக்கொண்டிருக்கும் சோக இருளில் சிக்கிய காந்தியடிகளுக்கு கண்ணீர் வராமல் இருக்குமா?

பந்தத்தில் நிலை குலைந்தால், பாரத நாட்டின் விடுதலையின் நிலை என்ன? ஒரு கணத்தில் தேசப்பிதா தமக்குத் தாமே ஆறுதலை வர வழைத்துக் கொண்டார். கண்ணீர் சிந்தவில்லை.

பதின்மூன்று வயதில் கஸ்தூரி பாவை மணம் புரிந்து, அறுபத்து இரண்டு வருட கால இல்லற வாழ்வை எண்ணிப் பார்த்தார். அப்பப்பா! சோதனைகள், வேதனைகள் ஒன்றா, இரண்டா? ‘பதித்தொண்டு புரிந்த பாவிற்கு நான் என்ன சுகம் தந்தேன்? எவ்வளவு கஷ்டங்கள் தந்திருக்கிறேன்’ என்று எண்ணி எண்ணி உள்ளுக்குள் ளேயே வருந்தினார்.

நிகழ்வுகள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக மனம் கொண்டு வந்து முன் நிறுத்தினாலும் அந்த எல்லா நிகழ்வுகளையும் ஓரளவு மறக்க முயன்றாலும் அந்தத் தென்னாப்பிரிக்க நினைவு மட்டும் காந்தியடிகளின் மன•பீட்டில் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டே யிருந்தது. கடல் அலைபோல் வந்த கண்ணீரின் பெருக்கை, வெளியில் வந்து விடாதபடி சிரமப்பட்டு, நிறுத்திக் கொண்டார்.

தம் மனைவியைப் பிரிந்ததற்காக காந்தியடிகள் வருந்தவில்லை. வாழ்க்கைத் துணை நலம் என்பதன் உண்மையான உரைகல்

தம்மிடமிருந்து போய்விட்டதே என்று கண்ணீர் கிளம்பி வந்தது. எனினும் அவர் கண்ணீர் சிந்தவில்லை. சத்தியங்களைச் சோதனை செய்து கஷ்ட நிஷ்டூரமான அனுஷ்டானங் களுக்காகவெல்லாம் தன்னுடன் சேர்ந்து வாழ்க்கைப் பயணம் செய்து சத்திய சோதனைக்குக் கருவி யாகத் திகழ்ந்த மகா உத்தமி ஒருவர் மறைந்துவிட்டாரே என்று தான் கண்ணீர் வந்தது. என்றாலும் உருக்கவில்லை அவர்.

தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பும் போது தமக்குக் கிடைத்த பொன், தங்கப் பரிசுப் பொருள்களை, ஆபரணங்களை எல்லாம் அங்கேயே விட்டுவிட்டு வரவேண்டுமென்று கஸ்தூரிபா விடம் கூறியதை நினைத்துப் பார்த்தார்.

'எல்லாவற்றையுமா' என்று கேட்ட மனைவியிடம் 'ஆம் எல்லாவற்றையும் தான்' என்று நிர்தாட்சண்யமாகக் கூறியதும் கஸ்தூரிபா கண்களில் நீர்மல்கியதை நினைத்துப் பார்த்தார். மறுகணம் காந்தியடிகளின் கண்களில் நீர் சுரந்தது. அடக்கிக் கொண்டார் அவர்.

'மருமகள்களுக்காகவாவது எடுத்துக் கொள்ளக் கூடாதா' என்று மன்றாடிய பாவிடம், "கூடவே கூடாது" என்று தாம் அன்று சொன்ன தையும் எண்ணிப் பார்த்தார். அன்று மனைவியின் கண்களில் நீர் நிறைந் தது. ஆனாலும் கண்ணீரைச் சிந்தா மல் கவலையைச் சிறைப்படுத்திக் கொண்டார், தம் மனவீட்டுக் குள்ளேயே. கஸ்தூரி பாவும் ஒரு பெண் தானே? பொன் நகைகளில் ஆசை இருக்காதா? என்று அன்னையின் மனம் இப்போது விம்மி விம்மி எழுந்த சிந்தனையைச் சமன் செய்து கொண்டது. கண்ணீர் கடலாக வரும் போலிருந்தது.

மீண்டும் மீண்டும் காந்தி யடிகளின் மனம் அலை பாய்ந்தது. எல்லாப் பொருள்களையும், விலை உயர்ந்த அனைத்தையும் துறந்து விட்ட கஸ்தூரிபா, கடைசியில் தனக்கு வெகுமதியாக தென் ஆப்பிரிக்க மக்கள் அளித்த நெக்லஸ் ஒன்றை மட்டும் எடுத்துக் கொள்ள விரும்பியதையும் காந்தியடிகள் ஏற்கவில்லை. கோபித்தார். குற்றம் என்றார்.

ஐம்பத்திரண்டு பவுன் பெறுமானமுள்ள தங்க நெக்லஸ் அது. அந்த ஒன்றையாவது அதுவும் தனக்கென்று அளித்ததைக் கூட கஸ்தூரிபா எடுத்துக் கொள்ளக் கூடாது என்று கண்டிப்பாகக் கூறியதை காந்தியடிகளின் மனமே இன்று நினைத்துக் கொண்டது. மனம் நெகிழ்ந்தது. நெக்லஸ் பற்றி இருவருக்கும் அன்று வாதம் நிகழ்ந்தது. கஸ்தூரிபா எவ்வளவு பணிந்தும், கெஞ்சியும், வேண்டியும் காந்தியடிகள் அறவே மறுத்து விட்டார். கஸ்தூரிபாவும் கணவர் கூற்றை ஏற்று அதன்படியே சரியென்று நடந்து கொண்டார். நெஞ்சில் நெருடிய, அந்தக் காட்சி காந்தியடிகளின் உள் மனத்தை உலுக்கிற்று. அடி மனத்தில் அது ஆழமாக நின்று அண்ணலை ஆட்டியது. வாட்டியது. சடலமாகி விட்ட மனைவியைப் பார்த்துப் பார்த்துச் சங்கடப்பட்டார்.

கடைசியில், அந்த நெக்லஸ் ஒன்றையேனும் ஒரு ஞாபகார்த் தமாக எடுத்துக் கொள்ளக் கூட அனுமதியாத தம் கண்டிப்புக்கும் உடன்பட்ட கஸ்தூரிபாயின் மகோன்னதமான தியாகம் நிறைந்த பெண் உள்ளத்தை எண்ணி எண்ணி அதிலேயே ஆழ்ந்து தோய்ந்த காந்தியடிகள் ஒரு விநாடிப் பொழுதில் தம்மையே மறந்தவராக மாறிவிட்டார்.

அந்தக் கணப்பொழுதில் காந்தியடிகளின் கண்கள் இரு சொட்டுக் கண்ணீரைச் சிந்தின.

ஆம். காந்தியடிகள் இரு சொட்டுக் கண்ணீர் தான் சிந்தினார்.

6-5-1944இல் ஆகாகான் சிறையிலிருந்து காந்தியடிகளையும் மற்றவர்களையும் பிரிட்டிஷ் அரசு விடுதலை செய்தது.

பாரத விடுதலை பெற சுதந்தரப் பயிரைத் தண்ணீர்விட்டா வளர்த் தார்கள்? கண்ணீரால் அன்றோ காத்தார்கள்? ●



உங்கள் ராசி பலன்

ஜோதிஷ பூஷணம் வித்வான் வே. லட்சுமணன்

ிரக பாதசாரம்
ூரியன் - அவிட்டம் 3
ந்திரன் - பூசம் 2
ிசவ்வாய் - பூரட்டாதி 1
தன - திருவோணம் 4
ரு - சதயம் 1
க்கிரன் - பூராடம் 4
னி - ரேவதி 2
ாகு - பூரம் 2
கது - சதயம் 4.

சனி			
சூரி செவ் குரு கேது	இம்மாத		
புத	கிரக நிலை		ராகு
சுக்			

கிரக மாறுதல்

16-2-1998 முதல் கும்ப-புதன்.
23-2-1998 முதல் மகர-சுக்கிரன்
24-2-1998 முதல் மீன-செவ்வாய்
5-3-1998 முதல் மீன-புதன்.

மேஷம் : (அசுவினி, பரணி, கிருத்திகை 1-ஆம் பாதம் முடிய)

ராசிநாதன் செவ்வாய் லாப ஸ்தானத்தில் சூரியன், குரு, து ஆகியோருடன் கூடியிருப்பதாலும், சுக்கிரன், புதன் கியோரது சஞ்சாரம் சிறப்பாக இருப்பதாலும் உங்கள் ்ணங்கள் எளிதில் நிறைவேறும். எதிர்ப்புக்கள் விலகும். டும்பத்தில் மங்கள காரியங்கள் நிகழும். திருமணம் ஆகாத ர்களுக்கு அதற்கான வாய்ப்புக் கூடிவரும். திருமணம் னவர்களுக்கு இல்வாழ்வு சிறக்கும். வியாபாரிகள் லாபம் டப் பெறுவார்கள். உடன்பிறந்தவர்களால் உங்களுக்கும், களால் அவர்களுக்கும் அனுகூலம் உண்டாகும். அரசியல் திகளுக்கு வரவேற்பு கூடும். அரசுப்பணியாளர்கள் தங்கள் ாக்கம் நிறைவேறப் பெறுவார்கள். பொருளாதாரநிலை ருப்தி தரும். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களால் ஆதாயம் ந்துசேரும். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் ான்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு வெற்றி ய்ப்புக்கள் கூடும்.

அரசாங்கத்தாரால் எதிர்பார்த்திருந்த காரியங்கள் றைவேறும். வழக்கு, விவகாரங்களில் வெற்றி காணச் ர்ப்பம் கூடிவரும். தந்தையால் அனுகூலம் உண்டாகும். ூர்ஜிதச் சொத்துக்களைப் பெறச் சந்தர்ப்பம் உருவாகும். கள்நலம் சீராக இருந்துவரும். வாழ்க்கைத்துணைவரால் ரு எண்ணங்கள் நிறைவேறும். 23-ஆம் தேதி முதல் லைத்துறையினருக்கும், மாதர்களுக்கும் சிறுசிறு ச்சினைகள் தலைதூக்கும். 24-ஆம் தேதி முதல் சிநாதன் விரயம் புகுவதாலும், சனியுடன் கூடுவதாலும் ஆரோக்கியம் கவனிக்கப்பட வேண்டிவரும். எதிலும் சரப்படாமல் நிதானமாக ஈடுபடுவது நல்லது. வீண் லவுகளைத் தவிர்ப்பது அவசியமாகும். கைப்பொருளைப் திரப்படுத்தி வைத்துக் கொள்வது முக்கியம். மார்ச் 5-ஆம் தி முதல் புதபலம் குறைவதால் வியாபாரிகள் அகலக்கால் வைக்கலாகாது. உடன்பிறந்தவர்களது நலனில் கவனம் தேவை. உடல் ஆரோக்கியத்திற்காகச் செலவு செய்ய வேண்டிவரும். பிப்ரவரி *15, 16, 18, 22, 25* (முற்பகல்), *26* (முற்பகல்), மார்ச் *1, 2, 4, 8, 9, 11, 13* தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தெற்கு, வடமேற்கு, கிழக்குத்திசைகள் அனுகூல மானவை. மகர, கும்ப ராசிக்காரர்கள் உதவுவார்கள். *1, 3, 5, 6, 7, 9* எண்கள் அதிர்ஷ்டமானவை.

ரிஷபம் : (கிருத்திகை 2-ஆம் பாதம் முதல், ரோகிணி, மிருகசீரிஷம் 2-ஆம் பாதம் முடிய)

ராசிநாதன் சுக்கிரன் அனுகூலமாக உலவுவதாலும் சூரியன், செவ்வாய், சனி, கேது ஆகியோரது பலம் கூடியிருப்பதாலும் உங்கள் பராக்கிரமம் வெளிப்படும். பேச்சில் இனிமை கூடும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நிகழும். கலைத்துறையினருக்கு வெற்றி வாய்ப்புக்கள் கூடிவரும். மாதர்கள் தங்கள் நோக்கம் நிறைவேறப் பெறுவார்கள். வாழ்க்கைத்துணைவரால் அனுகூலம் உண்டாகும். அரசியல்வாதிகள், அரசுப்பணியாளர்கள், நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்கள் ஆகியோருக்கெல்லாம் செழிப்பான பாதை புலப்படும். எதிரிகள் ஓடி ஒளிவார்கள். இயந்திரப்பணியாளர்களுக்கும், இஞ்சினியர்களுக்கும் செழிப்பான சூழ்நிலை நிலவிவரும். நிலபுலங்கள் ஆதாயம் கொண்டுவரும். வெளியூர், வெளிநாட்டுத் தொடர்பு பயன்படும். செந்நிறப் பொருட்கள் லாபம் தரும். வேலையில்லாதவர்கள் தகுந்ததொரு வாய்ப்பைப் பெறுவார்கள். ஏற்கெனவே வேலையில் உள்ளவர்களுக்கு இடமாற்றம், நிலைமாற்றம் ஆகியவை கிட்டும்.

தொழிலாளர்களது பிரச்சினைகள் தீரும். பொதுநலப் பணியாளர்கள் பாராட்டுக்களுக்கு உரியவர்களாவார்கள். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு முன்னேற்றமான போக்கு நிலவிவரும்.

16-ஆம் தேதி முதல் வியாபாரிகளுக்கு வளர்ச்சி தெரியவரும். மக்களால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படும். என்றாலும் சமாளித்து வருவீர்கள். அலைச்சலைத் தவிர்க்க இயலாமல் போகும். தொழில்துறையில் வளர்ச்சிக்கான ஒரிரு செலவுகளை மேற்கொள்ள நேரலாம். மூத்த சகோதரர்களால் அதிகம் நலமிராது. மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் ஓரளவு வளர்ச்சி காண்பார்கள். நெருங்கிய நண்பர்கள் உதவுவார்கள். பொருளாதாரநிலை சீராக இருந்துவரும். பக்தி மார்க்கத்திலும், ஞானமார்க்கத்திலும் நாட்டம் உண்டாகும். பிப்ரவரி *15, 16, 18, 25* (முற்பகல்), *26* (முற்பகல்), மார்ச் *1, 2, 4, 8, 9, 11, 13* தேதிகள் சிறப்பானவை. மேற்கு, வடமேற்கு, தெற்கு, தென்கிழக்குத்திசைகள் அனுகூலமானவை. மகர, கும்ப, மீன ராசிக்காரர்கள் உதவுவார்கள். *1, 6, 7, 8, 9* எண்கள் அதிர்ஷ்டமானவை.

மிதுனம் : (மிருகசீரிஷம் 3-ஆம் பாதம் முதல், திருவாதிரை, புனர்பூசம் 3-ஆம் பாதம் முடிய)

புதன், குரு, சனி, ராகு ஆகியோரது அனுகூலமான சஞ்சாரம் காரணமாக உங்கள் அறிவாற்றல், செயல்திறமை ஆகியவை பளிச்சிடும். எதிர்ப்புக்களைக் கடந்து வாழ்வில் முன்னேற்றம் காண்பீர்கள். பொருளாதாரநிலை உயரும். நற்பணிகளில் பங்கு கொள்ளச் சந்தர்ப்பம் கூடிவரும். வேற்று மொழி, மதக்காரர்களால் அனுகூலம் பெற வாய்ப்புண்டாகும். பயணத்தால் ஒரு எண்ணம் நிறைவேறும். வியாபாரிகள் வெற்றி நடைபோடுவார்கள். எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோருக்கெல்லாம் வரவேற்பு கூடும். தொலை தூரத் தொடர்பு பயன்படும். ஆன்மிகவாதிகள் பாராட்டுக்களுக்கு உரியவர்களாவார்கள். வேலையில்லாதவர்களுக்குத் தகுந்ததொரு வாய்ப்புக் கூடிவரும். ஏற்கெனவே வேலையில் உள்ளவர்கள் பதவி உயர்வு, இடமாற்றம், ஊதிய உயர்வு ஆகியவற்றைப் பெறுவார்கள். அரசியல்வாதிகளுக்கு அனுகூலமான போக்குத் தென்படும். வழக்கு, விவகாரங்களில் நல்ல திருப்பத்தைக் காணலாம்.

பொருள் கொடுக்கல்-வாங்கல் இனங்கள் லாபம் தரும். தொழிலாளர்களுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் முன்னேற்றமான பாதை புலப்படும். உடன்பிறந்தவர்கள் உதவுவார்கள். *16*-ஆம் தேதி முதல் புனிதப்பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். *23*-ஆம் தேதி முதல் சுக்கிர பலம் கூடுவதால் கலைத்துறையினருக்கு மந்தநிலை விலகும். மாதர்களது நோக்கம் நிறைவேற வாய்ப்புக் கூடிவரும். *24*-ஆம் தேதி முதல் செவ்வாய் *10*-ஆமிடம் மாறுவதால் உங்கள் ஆற்றல் கூடும். துணிச்சலான காரியங்களில் ஈடுபாடு உண்டாகும். நிலம், மனை, வீடு, வாகனங்களால் அளவோடு ஆதாயம் கிடைத்துவரும். மார்ச் *5*-ஆம் தேதி முதல் புதபலம் குறைவதால் வியாபாரிகள் விழிப்புடன் இருப்பது நல்லது. மாணவர்கள் படிப்பில் முழுமையான அக்கறை செலுத்தவேண்டிவரும். தாய்நலனில் கவனம் தேவை. உடல் ஆரோக்கியம் கவனிக்கப்பட வேண்டிவரும். பிப்ரவரி *15, 16, 18, 22, 26* (முற்பகல்), மார்ச் *1, 2, 4, 8, 9, 11,* தேதிகள் சிறப்பானவை. தென்மேற்கு, வடகிழக்கு, கிழக்கு, மேற்குத்திசைகள் அனுகூலமானவை. சிம்ம, கும்ப, மீ[ன] ராசிக்காரர்கள் உதவுவார்கள். *1, 3, 4, 5, 8* எண்க[ள்] அதிர்ஷ்டமானவை.

கடகம் : (புனர்பூசம் 4-ஆம் பாதம் முதல், பூசம், ஆயில்யம் முடிய)

கோசாரப்படி கிரகநிலை திருப்திகரமாக இல்லாததா[ல்] நீங்கள் எதிலும் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது. அலட்சிய[ப்] போக்கு அடியோடு கூடாது. விபத்துக்கு இடமுண்டு என[த்] தெரிவதால் எச்சரிக்கை தேவை. குடும்பத்தில் சலசலப்புக்கு[ம்] உண்டாகும். பெரியவர்களது அதிருப்திக்கு ஆட்பட நேரலா[ம்]. மாதர்களால் தொல்லைகள் சூழும். கலைஞர்களுக்[கு] முன்னேற்றம் தடைப்படும். அரசியல், நிர்வாகம், மருத்துவ[ம்], இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மிகம் போன்ற துறைகளை[ச்] சேர்ந்தவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் விரும்பத்தகா[த] இடமாற்றமோ, நிலைமாற்றமோ ஏற்படும். வேலைப் பளு அதிகரிக்கும். பொருளாதாரநிலையில் விசேடமா[ன] அபிவிருத்திக்கு இடமிராது. மக்களால் மனச்சலனம் ஏற்படு[ம்]. தந்தை நலனில் அக்கறை தேவைப்படும்.

எதிர்ப்புக்களின் கரம் வலுக்கும் எனத் தெரிவதா[ல்] யாரிடத்திலும் வெளிப்படையாகப் பழகாமல் இருப்பது நல்லது. வீண்வம்பு, வழக்குகளில் ஈடுபடலாகாது. தீயவர்களின் சகவாசத்தை விட்டு விலகுவதன் மூலம் சங்கடங்களுக்[கு] ஆளாகாமல் தப்பலாம். உங்கள் ஜனன கால ஜாதகப்ப[டி] தற்சமயம் யோக பலம் உள்ள தசை, புக்தி, அந்தரங்க[ள்] நடைபெறுமானால் சங்கடங்கள் விலகும். அப்படியில்லா[த]வர்கள் இறைச்சக்தியை முழுநம்பிக்கையுடன் பிரார்த்திப்ப[து] நல்லது. அதன்மூலம் அமைதி பெறலாம். நூதனமா[ன] முயற்சிகளில் பிரவேசிக்காமல் இருப்பது அவசியமாகு[ம்]. மாமூலாகச் செய்துவரும் காரியங்களிலும் கூட அதிக[ம்] அக்கறை செலுத்துவது நல்லது. தேக ஆரோக்கிய[ம்], கௌரவம், அந்தஸ்து, வாழ்க்கை வசதிகள் யாவும் சாதாரண[]மாகவே காணப்படும். பிப்ரவரி *15, 16, 18, 22, 25* (முற்பகல்), மார்ச் *1, 2, 4, 8, 9, 11, 13* தேதிகள் சுமாரானவை. வடமேற்[கு], தெற்குத்திசைகள் அளவோடு நலம் தரும். விருச்சிக, மீன, மேஷ ராசிக்காரர்கள் உதவுவார்கள். *2, 9* எண்கள் ஓரள[வு] பயன்படும்.

சிம்மம் : (மகம், பூரம், உத்திரம் 1-ஆம் பாதம் முடிய)

புதன், குரு, சுக்கிரன், ஆகிய சுபக்கிரகங்கள் அனுகூலமா[க] உலவுவதால் உங்கள் மனத்தில் நல்ல எண்ணங்க[ள்] உருவாகும். அவை நிறைவேறவும் வாய்ப்புக் கூடிவரு[ம்]. பொருள் திரட்டுவதில் ஆர்வம் கூடும். முக்கியமான ஒரிரு எண்ணங்கள் இனிது நிறைவேறும். நல்ல தகவல் வந்துசேரு[ம்]. சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்[ற] கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்குச் செழிப்பான பாதை

படும். வேலையில்லாதவர்கள் தகுந்ததொரு வாய்ப்பைப் றுவார்கள். ஏற்கெனவே வேலையில் இருப்பவர்களுக்குப் தவி உயர்வு, ஊதிய உயர்வு, இடமாற்றம் ஆகியவை ட்டும். குடும்பத்தில் குதூகலம் கூடும். திருமணம் ஆகாதவர்கள் அதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள். ருமணம் ஆனவர்களுக்கு வாழ்க்கைத்துணைவரால் னுகூலம் உண்டாகும். மக்களால் நலம் விளையும். பாருளாதாரநிலையில் அபிவிருத்தி காணச் சந்தர்ப்பம் டிவரும்.

ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்கள் லாபம் ரும். அரசியல்வாதிகளுக்கு மதிப்பு உயரும். அறிவாற்றல் ளிச்சிடும். வெளியூர், வெளிநாட்டுத் தொடர்பு அளவோடு பன்படும். சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேது கியோரது சஞ்சாரம் சிறப்பாக இல்லாததால் அலைச்சல், டல்நலக்குறைவு, மனச்சலனம் ஆகியவையும் இருந்துவரும். ழைப்பிற்குப் பின்வாங்காமல் கடுமையாகப் பாடுபட்டால் ன்கூடப் பெறலாம். பயணத்தின்போது எச்சரிக்கையுடன் ருப்பது நல்லது. 16-ஆம் தேதி முதல் வியாபாரிகள் கலக்கால வைக்கலாகாது. 23-ஆம் தேதி முதல் லைஞர்களுக்கும், மாதர்களுக்கும் பிரச்சினைகள் சூழும். ழ்க்கைத்துணைநலனில் கவனம் தேவைப்படும். 24-ஆம் தி முதல் செவ்வாய் 8-ஆமிடம் மாறிச் சனியுடன் டுவதால் பெற்றோர் நலனில் அக்கறை தேவைப்படும். பத்துக்கு ஆட்பட நேரலாம்; எச்சரிக்கை. பிப்ரவரி 16, 18, 22, 26 (முற்பகல்), மார்ச் 2, 4, 8, 9, 11, 13 தேதிகள் றப்பானவை. வடகிழக்குத்திசை விசேடமானது. தனுசு, ம்ப, மிதுன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3, 6 எண்கள் திர்ஷ்டமானவை.

கன்னி: (உத்திரம் 2-ஆம் பாதம் முதல், ஹஸ்தம், சித்திரை 2-ஆம் பாதம் முடிய)

சூரியன், செவ்வாய், சுக்கிரன் கேது ஆகியோர் னுகூலமாக உலவுவதால் உங்கள் பராக்கிரமம் கூடும். தாற்றப்பொலிவு பளிச்சிடும். அரசியல், நிர்வாகம், த்துவம், இரசாயனம், விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சார்ந்தவர்களுக்கு வெற்றி வாய்ப்புக்கள் கூடும். யந்திரப்பணியாளர்கள் ஏற்றம் பெறுவார்கள். அரசியலில் க்கியப் பொறுப்பு கிடைப்பதற்கு வாய்ப்புக் கூடிவரும். ரசாங்கத்தாரால் எதிர்பார்த்திருந்த காரியம் இப்போது றைவேறும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு மாதம் ழுவதும் சிறப்பாக இருந்துவரும். மாதர்களது குறிக்கோள் றைவேறும். விருந்து உபசாரங்களிலும்; கேளிக்கை, லாசங்களிலும் பங்கு கொள்ளச் சந்தர்ப்பம் கூடிவரும். லம், மனை, வீடு, வாகனம் போன்ற ஸ்திரச்சொத்துக்களின் ர்க்கையோ, அல்லது அவற்றால் ஆதாயமோ பெற ய்ப்புண்டாகும்.

கணவன், மனைவியரிடையே சிறுசிறு சலசலப்புக்கள் ட்டு, விலகும். சட்டம், காவல், இராணுவம் போன்ற றைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். 16-ஆம் தி முதல் வியாபாரிகளுக்கு நல்ல திருப்பம் உண்டாகும். 24-ஆம் தேதி முதல் செவ்வாய் பலம் குறைவதால் எதிலும் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது. பயணத்தின்போதும், இயந்திரங்களில் பணிபுரியும்போதும் எச்சரிக்கை தேவை. குரு 6-லும், ராகு 12-லும் உலவுவதால் பொருளாதார நிலையில் விசேடமான அபிவிருத்திக்கு இடமிராது. ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்களில் எச்சரிக்கையுடன் ஈடுபடுவது அவசியமாகும். செலவுகள், இழப்புக்கள் ஆகியவை ஏற்படுமாதலால் கைப்பொருளைப் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்வது நல்லது. வாழ்க்கைத் துணைநலனுக்காகச் செலவு செய்ய நேரலாம். பிப்ரவரி 15, 16, 18, 22, 25 (முற்பகல்), 26 (முற்பகல்), மார்ச் 1 (பகல்), 4, 8, 9, 11, 13 தேதிகள் சுமாரானவை. தென்கிழக்கு, வடமேற்கு, கிழக்கு, தெற்குத்திசைகள் அனுகூலமானவை. தனுசு, கும்ப, மிதுன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1, 6, 7, 9 எண்கள் அதிர்ஷடமானவை.

துலாம்: (சித்திரை 3-ஆம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3-ஆம் பாதம் முடிய)

புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு ஆகிய கிரகங்கள் அனுகூலமாக உலவுவதால் உங்கள் அறிவாற்றல், தோற்றப் பொலிவு, செயல்திறமை ஆகியவை பளிச்சிடும். நல்ல தகவல் வந்துசேரும். நண்பர்கள், உற்றார், உறவினர்களது தொடர்பு ஆக்கம் தரும். வியாபாரத்தில் வளர்ச்சி காண வழிபிறக்கும். சிந்தனைத்திறன் கூடும். எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோருக்கெல்லாம் செழிப்பான பாதை புலப்படும். ஆசிரியர்கள், பேராசிரியர்கள், மதபோதகர்கள, சட்ட வல்லுநர்கள் ஆகியோருக்கெல்லாம் உற்சாகமான சூழ்நிலை உருவாகும். அலுவலகப்பணியாளர்கள் ஏற்றம் பெறுவார்கள். தொழிலாளர்களது நோக்கம் நிறைவேறும். வேற்றுமொழி, மதக்காரர்கள் உங்களுக்கு உதவ முன்வருவார்கள். பயணத்தால் அளவோடு நலம் உண்டாகும். உடன்பிறந்தவர்கள் உதவிக்கரம் நீட்டுவார்கள்.

எதிர்ப்புக்கள் கட்டுக்குள் அடங்கியிருக்கும். பொதுநலப் பணியாளர்கள் புகழ் கூடப் பெறுவார்கள். தோல் பொருட்கள், ஏற்றுமதி-இறக்குமதி இனங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் ஆகியவை லாபம் தரும். 16-ஆம் தேதி முதல் வியாபாரிகளுக்கு முன்னேற்றம் காணக் குறுக்கீடுகள் முளைக்கும். 24-ஆம் தேதி முதல் செவ்வாய் பலம் கூடுவதால் இயந்திரப்பணியாளர்களுக்கும், இஞ்சினீயர்களுக்கும் சுபிட்சம் உண்டாகும். நிலபுலங்கள் ஆதாயம் தரும். 5-ல் சூரியன், கேது ஆகியோர் உலவுவதால் சிறுசிறு குழப்பங்கள் சூழும். மக்களால் சலனம் ஏற்படும் என்றாலும் சமாளித்து வருவீர்கள். தெய்வப்பணிகளிலும், தருமப்பணிகளிலும் பங்கு கொள்ளச் சந்தர்ப்பம் கூடிவரும். அதனால் மனத்தெளிவும் உண்டாகும். பொருளாதாரநிலை திருப்திகரமாக இருந்துவரும் என்றாலும் எதிர்பாராத செலவுகளும் அவ்வப்போது ஏற்படும். சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. பிப்ரவரி 16, 18, 22, 25 (பிற்பகல்), 26 (முற்பகல்), மார்ச் 1, 2, 8, 9, 11, 13 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, மேற்குத்திசைகள் அனுகூல

மானவை. தனுசு, கும்ப, சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். *3, 4, 5, 6, 8* எண்கள் அதிர்ஷ்டமானவை.

விருச்சிகம் : *(விசாகம் 4-ஆம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய)*

கோசாரப்படி சுக்கிரன், ராகு ஆகியோர் மட்டுமே அனுகூலமாக உலவுகிறார்கள். இதர கிரகங்களின் சஞ்சாரம் சிறப்பாக இல்லை. ஆகையால் எதிலும் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது. வீண் அலைச்சலைத் தவிர்ப்பதன் மூலம் உடல் அசைதியைக் குறைத்துக கொள்ளலாம். மக்கள் நலனில் கவனம் தேவைப்படும். தொழிலாளர்களுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் முன்னேற்றம் காணக் குறுக்கீடுகள் முளைக்கும். மனத்தில் சிறுசிறு கவலைகள் குடிகொள்ளும். தாய்நலனில் கவனம் தேவைப்படும். இயந்திரப்பணியாளர்கள் விழிப்புடன் காரியமாற்றுவது நல்லது. எதிலும் அவசரம் கூடாது. ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடுவது அவசியமாகும். கலைஞர்கள், மாதர்கள், ஆகியோருக்கெல்லாம் அனுகூலமான போக்கு நிலவிவரும். வாழ்க்கைத்துணைநலம் சீராக இருந்து வரும். போக்குவரத்துச் சாதனங்கள், ஏற்றுமதி-இறக்குமதி இனங்கள் தோல் பொருட்கள் ஆகியவை லாபம் தரும்.

16-ஆம் தேதி முதல் வியாபாரிகள் மந்தநிலை விலகப் பெறுவார்கள். மாணவர்களது நிலையில் அபிவிருத்தி தெரியவரும். நிலம், மனை, வீடு, வாகனங்களால் அளவோடு ஆதாயம் கிடைத்துவரும். அரசியல், நிர்வாகம், மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் பொறுப்புடன் செயல்பட்டால் வளர்ச்சி காண வழிபிறக்கும். புதிய ஆடை, அணிமணிகள், அலங்காரப் பொருட்கள், வாசனைத் திரவியங்கள் ஆகியவற்றின் சேர்க்கையோ, அல்லது அவற்றால் ஆதாயமோ கிடைத்து வரும். உங்கள் ஜனன கால ஜாதகப்படி யோக பலம் உள்ள தசை, புக்தி, அந்தரங்கள் தற்சமயம நடக்குமானால் நற்பலன்கள் கூடவும் துர்ப்பலன்கள் குறையவும் சந்தர்ப்பம் உண்டாகும். பிப்ரவரி *15, 16 (பகல்), 22, 25 (முற்பகல்), 26 (முற்பகல்)*, மார்ச் *1, 2, 4, 9, 11, 13* தேதிகள் சுமாரானவை. தென்கிழக்கு, தென்மேற்குத்திசைகள் நலம் தரும். தனுசு, சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். *4, 6* எண்கள் அதிர்ஷ்டமானவை.

தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் 1-ஆம் பாதம் முடிய)*

சூரியன், செவ்வாய், புதன், சுக்கிரன், கேது ஆகியோர் அனுகூலமாக உலவுவதால் உங்கள் பராக்கிரமம் கூடும். தோற்றப்பொலிவு பளிச்சிடும். எடுத்த காரியங்களை எப்பாடு பட்டாவது நிறைவேற்றி வருவீர்கள். தெய்வப்பணிகளிலும், தருமப்பணிகளிலும் நாட்டம் கூடும். பொறியியல் துறை லாபம் தரும். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு வெற்றி வாய்ப்புக்கள் கூடும். அரசியல் ஈடுபாடு ஆக்கம் தரும். அரசாங்கத்தாரால் எதிர்பார்த்திருந்த காரியம் இப்போது நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் ஓரளவு உதவுவார்கள். நண்பர்களாலு பங்குதாரர்களாலும் அனுகூலம் உண்டாகும். மாதர்கள குறிக்கோள் நிறைவேறும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்க சுபிட்சம் காண்பார்கள். எதிர்ப்புக்கள் விலகும். போட் பந்தயங்களிலும்; வழக்கு விவகாரங்களிலும் அனுகூலமா திருப்பம் உண்டாகும்.

பக்தி மார்க்கத்திலும், ஞானமார்க்கத்திலும் தெளி பிறக்கும். முயற்சி வீண்போகாது. முக்கியஸ்தர்களது தொட ஆக்கம் தரும். *16*-ஆம் தேதி முதல் புதபலம் குறைவத வியாபாரிகள் விழிப்புடன் இருப்பது நல்லது. மாணவர்க படிப்பில் முழுமையான அக்கறை செலுத்துவது அவசியமாகு புதிய துறைகளில் முதலீடு செய்ய இந்த நே விசேடமானதாகாது. *24*-ஆம் தேதி முதல் செவ்வாய் ப குறைவதாலும், குரு, சனி ஆகியோர் அனுகூலமா உலவாததாலும் எதிலும் அவசரப்படாமல் பொறுமையுட ஈடுபடுவது நல்லது. வீண் அலைச்சலைத் தவிர்ப் அவசியமாகும். பயணத்தின்போது பாதுகாப்புத் தேவை. உட நலனில் கவனம் செலுத்திவருவது நல்லது. நண்பர்க உற்றார், உறவினர்கள் ஆகியோரால் பிரச்சினைகளுக் ஆட்பட வேண்டிவரும். நிலபுலங்கள் விஷயத்தில் கவன தேவை. பிப்ரவரி *15, 16, 18, 22, 25 (முற்பகல்), 26 (முற்பக* மார்ச் *1, 2, 4, 11, 13* தேதிகள் சுமாரானவை. தென்கிழக் வடமேற்கு, தெற்கு, கிழக்குத்திசைகள் அனுகூலமானவை கும்ப, சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். *1, 6, 7, 9* எண்க அதிர்ஷ்டமானவை.

மகரம் : *(உத்திராடம் 2-ஆம் பாதம் முத திருவோணம், அவிட்டம் 2-ஆம் பாதம் முடிய)*

குரு, சுக்கிரன், சனி ஆகியோர் அனுகூலமாக உலவுவதா உங்கள் பேச்சாற்றல் வெளிப்படும். குடும்பத்தில் நற்காரியங்க நிகழும். விருந்து உபசாரங்களிலும், கேளிக்கை, உல்லாச களிலும் ஈடுபடச் சந்தர்ப்பம் கூடிவரும். உடன்பிறந்தவர்களா உங்களுக்கும், உங்களால் அவர்களுக்கும் அனுகூல உண்டாகும். தகவல் தொடர்புத் துறைகளைச் சேர்ந்தவ களுக்குச் செழிப்பான பாதை புலப்படும். சினிமா, நாடக நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவ களுக்கு வெற்றி வாய்ப்புக்கள் கூடும். அலுவலகங்களி பணிபுரிபவர்கள் தங்கள் நிலை உயரப் பெறுவார்க மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மிகம் போன் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு உற்சாகமான சூழ்நி உருவாகும். பொருளாதாரநிலையில் அபிவிருத்தி காண சந்தர்பபம் கூடிவரும். கொடுக்கல்- வாங்கல், ஸ்பெகுலேஷ துறைகள் லாபம் தரும்.

தொழிலாளர்கள் நலம் பெறுவார்கள். தெய்வப்பணிகளிலு தருமப்பணிகளிலும் ஈடுபடச் சந்தர்ப்பம் கூடிவரும். எதிரிக அடங்கிப் போவார்கள். சூரியன், செவ்வாய், புதன், ராகு கேது ஆகியோர் அனுகூலமாக உலவாததால் குடும்பத்தி சிறுசிறு பிரச்சினைகள் சூழும். பேச்சில் கடுமையை

குறைத்து. இனிமையைக் கூட்டிக் கொண்டால் அமைதி காணலாம். எரிபொருட்கள், கூரிய ஆயுதங்கள், மின்சாரம் ஆகியவற்றின் பக்கம் நெருங்கும்போது விழிப்புடன் இருப்பது நல்லது. முன்பின் அறிமுகம் இல்லாதவர்களிடம் அதிகம் நெருக்கம் வேண்டாம். *24*-ஆம் தேதி முதல் செவ்வாய் பலம் கூடுவதால் ரியல் எஸ்டேட் இனங்கள் லாபம் தரும். இயந்திரப்பணியாளர்களுக்கு முன்னேற்றமான சூழ்நிலை உருவாகும். வியாபாரிகள் பொறுப்புடன் காரியமாற்றுவது நல்லது. பிப்ரவரி *15, 16, 18, 25* (முற்பகல்), *26* (முற்பகல்), மார்ச் *1, 2, 4, 8, 9* தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, மேற்கு, தென்கிழக்குத்திசைகள் அனுகூலமானவை. கும்ப, மீன, துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். *3, 6, 8* எண்கள் அதிர்ஷ்டமானவை.

கும்பம் : (அவிட்டம் *3*-ஆம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி *3*-ஆம் பாதம் முடிய)

கோசாரப்படி சுக்கிரன் ஒருவரே அனுகூலமாக உலவுகிறார். இதர கிரகங்களின் சஞ்சாரம் திருப்திகரமாக இல்லை. ஆகையால் நீங்கள் எதிலும் யோசித்து ஈடுபடுவது நல்லது. புதிய முயற்சிகளில் ஈடுபட இந்த நேரம் விசேடமானதாகாது. உடல் ஆரோக்கியம் கவனிக்கப்பட வேண்டிவரும். உஷ்ணாதிக்கத்தால் பாதிக்கப்பட நேரலாம். அலைச்சலைக் குறைத்துக் கொள்வது நல்லது. மற்றவரிடம் பேசும்போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது அவசியமாகும். அதன்மூலம் அவர்களது அதிருப்திக்கு ஆளாகாமல் தப்பலாம். உணவுப் பழக்கத்தில் கட்டுப்பாடு தேவை. தீயோர் தொடர்பை அகற்ற, நல்லவர்களின் நட்புறவை நாடிப்பெறுவது நல்லது. சோர்வுக்கு இடம் தராமல் கடுமையாகப் பாடுபட்டால் பயன்கூடப் பெறலாம். பணநடமாட்டம் சாதாரணமாகவே காணப்படும்.

ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்களால் அதிகம் ஆதாயத்தை எதிர்பார்க்க இயலாது. குடும்பநலனில் கவனம் தேவைப்படும். வியாபாரிகள் அகலக்கால் வைக்கக்கூடாது. உத்தியோகஸ்தர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் பொறுப்புடன் செயல்பட்டால் சோதனைகளுக்கு ஆளாகாமல் தப்பலாம். மக்களால் அளவோடு நலம் உண்டாகும். வாழ்க்கைத்துணைநலம் கவனிப்பின் பேரில் சீராக இருந்துவரும். மாதர்கள், கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் ஆகியோருக்கெல்லாம் மாமூலான வளர்ச்சி பாதிக்கப்படாது. உங்கள் ஜனன கால ஜாதகப்படி தற்சமயம் யோக பலம் உள்ள தசை, புக்தி, அந்தரங்கள் நடைபெறுமானால் சங்கடங்கள் குறையும். இறைவழிபாட்டில் ஈடுபடுவதன் மூலம் அமைதி காணலாம். பிப்ரவரி *16* (இரவு), *18, 22, 26* (முற்பகல்), மார்ச் *1, 2, 4, 8, 9, 11* தேதிகள் சுமாரானவை. தனுசு ராசிக்காரர்கள் உதவுவார்கள். தென்கிழக்குத்திசை நலம் தரும். *6*-ஆம் எண் அதிர்ஷ்டமானது.

மீனம் : (பூரட்டாதி *4*-ஆம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

குரு, செவ்வாய், சனி ஆகிய முக்கியமான கிரகங்கள் அனுகூலமாக உலவாததால் உங்கள் எண்ணங்கள் நிறைவேறக் குறுக்கீடுகள் இருந்துவரும். எடுத்த காரியங்களை நிறைவேற்ற அரும்பாடுபட வேண்டிவரும். அலைச்சல் கூடும். உடல் ஆரோக்கியம் கவனிக்கப்பட வேண்டிவரும். பணவரவைக் காட்டிலும் செலவுகள் கூடும். சிக்கன நடிவடிக்கை அவசியம் தேவை. கைப்பொருளைப் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்வதும் அவசியமாகும். ஸ்பெகுலேஷன் கொடுக்கல்-வாங்கல் இனங்களில் ஈடுபடலாகாது. எதிர்ப்புக்களின் கரம் வலுக்குமாகையால் விழிப்புடன் இருப்பது அவசியமாகும். வீண்வம்பு, வழக்குகளில் ஈடுபடவேண்டாம். அரசியல்வாதிகள், அரசுப் பணியாளர்கள், நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்கள் ஆகியோருக்கெல்லாம் முன்னேற்றம் தடைப்படும். அரசாங்கத்தாரால் சோதனைகளுக்கு ஆட்பட நேரலாம். மதிப்பும், அந்தஸ்தும் சாதாரணமாகவே காணப்படும். இடமாற்றம், நிலைமாற்றம் ஆகியவை ஏற்படும்.

23-ஆம் தேதி முதல் சுக்கிரன் *11*-ஆமிடம் மாறுவதால் கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு மந்தநிலை விலகும். மாதர்கள் தங்கள் நிலைமையில் வளர்ச்சி காண்பார்கள். ஆடவர்களுக்குப் பெண்டிரால் அனுகூலம் உண்டாகும். *24*-ஆம் தேதி முதல் செவ்வாய் ஜன்ம ராசிக்கு இடம் மாறி, சனியுடன் கூடுவது விசேடமாகாது. இதனால் மற்றையோரது அதிருப்திக்கு ஆட்பட நேரும். பேச்சில் கடுமையைக் குறைத்து, இனிமையைக் கூட்டிக் கொள்வது நல்லது. வீண்சண்டை, சச்சரவுகளில் ஈடுபடவேண்டாம். குடும்பத்தில் குழப்பம் சூழும். பெற்றோர் நலனில் அக்கறை தேவைப்படும். புதிய தொழில்துறைகளில் ஈடுபட இந்த நேரம் விசேடமானதாகாது. மாமூலாகச் செய்துவரும் காரியங்களிலும் கூட அதிகம் அக்கறை தேவை. அலட்சியப் போக்கு அடியோடு கூடாது. ஜனன கால ஜாதகப்படி யோக பலம் உள்ள தசை, புக்தி, அந்தரங்கள் நடப்பவர்களுக்கு இந்த நேரத்தில் சோதனைகள் குறையும். இறைவழிபாடு மனஆறுதலைத் தரும். பிப்ரவரி *15, 16* (பகல்), *22, 25* (முற்பகல்), மார்ச் *1, 2, 4, 8, 9, 11, 13* தேதிகள் சுமாரானவை. தென்மேற்குத்திசை நலம் தரும். சிம்ம, மகர ராசிக்காரர்கள் ஓரளவு உதவுவார்கள். *4, 6* எண்கள் அளவோடு நலம் தரும்.

அச்சிட்டோர்: சாய் ஸ்ரீராம் அச்சகம், சென்னை – 26. வெளியிட்டவர்: ஸ்ரீராம் டிரஸ்ட். சார்பில் ஏ.வி.எஸ்.ராஜா.
முகவரி: ஏ–7. இரண்டாவது அவென்யூ, அண்ணாநகர் (கிழக்கு) சென்னை – 600 102. தொலைபேசி
எண்: 626 68 69, 628 78 79. தனி இதழ் ரூ. 10.00 ஆண்டுச் சந்தா ரூ. 120.00
ஆசிரியர் கலைமாமணி விக்கிரமன்